www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 138 ஜன.15-ஜன28. 1998 விலை 10.00

# புலிகளுடன் பேச வேண்டும்!

— ஜோர்ஜ் பெர்னாண்டஸ்
முன்னாள் இந்திய அமைச்சர்

# தேர்தல்: 'வேண்டாம் பகற்கொள்ளை'!

-யாழ் மக்கள்

# முஸ்லிம்கள் மீள் குடியேற்றம்: புலிகளின் கையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இ.தொ.கா காணாமல் போன சந்தாப் பணம்!

அமைச்சர் சௌ. தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முகங்கொடுத்துள்ள கடும் நிதி நெருக்கடி காரணமாக அதன் நிர்வாகம் முழுமையாகவே முறிவடையும் அடையாளங்கள் தெரிய வருகிறது.

இந்நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்து கடந்த டிசம்பர் மாத ஊழியர் சம்பளம் வழங்குவதற்காகக் காங்கிரஸ் தலைமையகத்தால் அதன் கிளைகள் பலவற்றுக்கு அனுப்பப்பட்ட காசோலைகள் வங்கியில் பணம் இல்லாது திருப்பியனுப்பப்பட்டதால் ஊழியர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை.

காங்கிரசின் ஊழியர் எண்ணிக்கை 500ஐ விட அதிகமாகும். இவர்களின் ஊழியர் சேமலாப நிதிக்கான சந்தாப்பணம் நான்கு வருடங்களாகச் செலுத்தப்படவில்லையாதலால் இதுவரை ரூபா 53 இலட்சம் மட்டிலான பணம் வைப்பிலிடப்பட வேண்டியுள்ளதாகக் காங்கிரசின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை 3000 ரூபா வரை அதிகரிக்குமாறு இத்தொழிற்சங்கம் போராடினாலும், அங்கு பணியாற்றும் பிரதேசப் பிரதிநிதிப்பதவி வகிக்கும் அதிகாரி ஒருவருக்கு அது வழங்கும் அதியுயர் சம்பளம் 2400 ரூபாய்கள் மட்டுமேயாகும். எழுதுவினைஞர் ஒருவருக்கான சம்பளம் 1750ரூபாய்கள் மட்டுமேயாகும்.

இவர்களின் சம்பளத்தையும் அதிகரிக்குமாறு ஊழியர்கள் கோரியிருந்தாலும் இதுவரை வழங்காமையினால் காங்கிரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஊழியர்கள் தயாராகி வருகிறார்கள்.

தோட்டத் தொழிலாளர் ஒருவரிடமிருந்து மாதாந்தம் 15 ரூபாய்ப்படி சந்தாப்பணம் அறவிடும் காங்கிரசின் மாதாந்த வருமானம் முப்பது இலட்சம் ரூபாய்களையும் விட அதிகமாகும் எனத்தெரிவிக்கும் அவ்வூழியர்கள் அப்பணத்துக்கு என்ன நடக்கிறது எனத்தலைவர்களிடம் கேள்வி எழுப்புகின்றனர். அதேசமயம் கிளைக்காரியாலயங்களின் தொலைபேசி, நீர் வழங்கல் கட்டணங்கள் செலுத்தப்படாமையினால் அவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## பாடசாலைகளும் தனியார் மயமாக்கப்படுகின்றன!

சில பாடசாலைகளை அரச நிர்வாகத்திலிருந்து விடுவித்து தனியார்துறைக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இப்போதே ஜா-எல, தெஹியாஹத்த, றோமன் கத்தோலிக்க சிங்கள ஆண்கள் பாடசாலையின் காணியை அரச நிர்வாகத்திலிருந்து விடுவிப்பதற்காக கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரண வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு விடுவிக்கப்படும் பாடசாலைக்கட்டிடங்கள் தனியார் பாடசாலைகளை நடாத்துவற்காக விகாரைகளுக்கோ, தேவாலயங்களுக்கோ வழங்கப்படும் என அமைச்சர் பத்திரண கூறினார்.

''பாடசாலைகளில் மாணவர் தொகை குறைந்தால் அவற்றை மூட வேண்டியிருக்கும். அதற்குப் பின்பு வெறுமனே கட்டிடங்களை வைத்திருப்பதைவிட தனியார் வகுப்புக்களை நடாத்தும் விகாரை அல்லது தேவாலயம் ஒன்றுக்கு ஒப்படைப்பதில் தவறேதும் இல்லை'' என அவர் குறிப்பிட்டார். கடந்த 10,15 வருடங்களினுள் பெருந்தொகைப் பாடசாலைகள் இவவாறு கல்வி அமைச்சின் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ள பாடசாலைகளைத் தமக்கு வழங்குமாறு தனியார் நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகள் கிடைத்துள்ளதாகவும் கூறினார்

தனியார் நிறுவனங்களுக்கு இப்பாடசாலைக் கட்டிடங்களைச் சுவீகரித்து வழங்குவதால் அரசுக்குப் பெரும் வருமானம் கிடைக்கக் கூடுமெனவும், அவை முன்பு அரசாங்கத்தால் கிறிஸ்தவ தேவாலயங்களிடமிருந்தே பிரதானமாகச் சுவீகரிக்கப்பட்டவையாதலால் அவற்றைத் தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

இதனால் எதிர்காலத்தில் விடுவிக்கும் பாடசாலைகளைப் பிரதானமாகத் தேவாலயங்களுக்கே சுவீகரித்துக் கொடுக்க வேண்டியுள்ளதாக அமைச்சர் பத்திரண மேலும் தெரிவித்தார்.

''ஆசிரியர்கள் செல்ல விரும்பாத, பிள்ளைகள் படிக்க விரும்பாத பாடசாலைகள் உள்ளன. பிள்ளைகள் குறைவான பாடசாலைகளைப் பராமரிக்க அரசு நிதி செலவழிப்பது அநியாயமாகும். இதனாலேயே இவற்றை விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்டது'' என மேலும் கருத்துத் தெரிவித்தார் அமைச்சர்.

கம்பஹா, பதுளை, நுவரெலியா, மாத்தளை, கண்டி, குருநாகல் உட்படப் பல மாவட்டங்களிலுள்ள பாடசாலைகள் இவ்வாறு விடுவிக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றையும் தனியார் துறைக்கு வழங்கப் போவதாகவும், அப்போது அவற்றில் கல்வி கற்கும் மாணவர்கள் ஏனைய பாடசாலைகளில் இணைக்கப்படுவர் எனவும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவரிடமிருந்து அறியக் கிடைத்துள்ளது.

''பிள்ளைகள் மற்றைய பாடசாலையை ஏற்றுக்கொள்வரா இல்லையா என எப்படிக் கூறுவது? இன்று கல்விக்கு மிகுந்த போட்டி நிலவுகிறது. அதனால் இன்று பாடசாலைகளில் பிள்ளைகள் அதிகமாகவுள்ளனர். 100 பேர் இருக்க வேண்டிய இடததில் 300 பேர் உள்ளனர். இவ்வாறு பாடசாலைகள் விடுவிக்கப்பட வேண்டியேற்பட்டால் பிள்ளைகளின் எதிர்காலம் அழிக்கப்படும். மென்மேலும் பாடசாலைகளை ஏற்படுத்துவதை விடுத்து, மூடுவது கல்விக்குச் செய்யும் நிந்தனையாகும். இன்று கல்வித்துறையை ஆட்சி செய்வது தனியார் ரியூசன் ஆசிரியர்களாதலால் இந்நிலைமை அவர்களுக்கு இன்னும் பெருந் தூண்டுதலாக அமையும்'' எனத் தமது பெயரைப் பகிரங்கப்படுத்த விரும்பாத கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கலாநிதியொருவர் கூறினார்.

## அமெரிக்கர்களுக்கு அனுமதி இல்லை.!

எப்பாவெல பொஸ்பேற் சுரங்கம் தொடர்பாக ஆய்வு நடவடிக்கைகளை செய்வதற்காக வந்த அமெரிக்க நிறுவனத்தின் பிரதிநிதிகளை அங்கு நுழைய அனுமதிப்பதில்லையென பொஸ்பேற் சுரங்கத்தைப் பாதுகாக்கும் குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

பொஸ்பேற் சுரங்கத்துக்கு அருகாமையில் உள்ள 500 ஏக்கர் மட்டிலான தேக்குப் பயிர்ச் செய்கையை உரிய காலத்துக்கு முன்பு வெட்டி அகற்ற அரசு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பாக கலந்துரையாடிய பின்பே அக்குழு அத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

பொஸ்பேற் சுரங்கம் தொடர்பாக ஆராய்ச்சி நடவடிக்கை செய்வதற்காக அமெரிக்க நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கு அப்பிரதேசத்துக்குள் நுழையப் அப்பிரதேச மக்கள் இடங்கொடாமையினால் அவ்வாய்வு நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் கடந்த வாரம் அப்பிரதிநிதிகள் ஹெலிகொப்ரொன்றில் அங்கு வந்து ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகப் பொஸ்பேற் சுரங்கத்தை பாதுகாப்பதற்கான குழுவின் உறுப்பினரொருவரான எஸ்.டி.ஞானதிலக்க தெரிவித்தார்.

## தற்கொலையில் முடிந்த மதவெறி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பழம் பெருமை மிக்க இந்துமத மரபுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்குமொரு கிராமம் குருக்கள் மடமாகும். இக்கிராமத்தில் 1970களில் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கப்பட்டது. இவ்வூரைப்பிறப்பிடமாகக்கொண்டு தங்களின் இளமைக் காலத்திலேயே அனாதரவான நிலைக்குள்ளாகி பின் கிறிஸ்தவ மதம் தழுவி தங்களின் நிலையை உயர்த்திக் கொண்ட அவ் ஊரவர்களுக்காகவே இத்தேவாலயம் அமைக்கப்பட்டது. இன்று இக்கிறிஸ்தவர்களின் பெருக்கம், ஏனைய கிராமங்களில் இருந்து வந்து தேவாலயத்தை அண்டிய சூழலில் குடியேறிய கிறிஸ்தவர்களின் பெருக்கம் காரணமாக கிராமத்தில் கிறிஸ்தவம் வளரத் தொடங்கியது.

இதனை உணர்ந்த அவ்வூர் இந்துக்கள் இக்கிறிஸ்தவர்களுக்கு தங்களின் எதிர்ப்புணர்வை புலப்படுத்தொடங்கினர். இவ்வெதிர்ப்புணர்வின் நிறுவனப்படுத்தப்பட்ட வளர்ச்சியாக ''இந்து தீவிரவாத இயக்கம்'' என்னும் இளைஞர் இயக்கம் ஒன்று உருவாகத் தொடங்கியது.

இக்காலத்தில் கிறிஸ்தவ மதமும் இந்து மதமும் தங்களுள்ளே போட்டி போட்டு வளரத் தொடங்கியது.

10.12.1997 அன்று இலவச வைத்தியசேவையொன்றை மக்களுக்கு வழங்க கிறிஸ்தவ தேவாலயத்தால் ஒரு ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. இத்தகவலை மக்களுக்கு அறிவிப்பதற்கு நவரெத்தினம் என்னும் இந்த மதத்தைச் சேர்ந்தவர் பயன்படுத்தப்பட்டார்.

இவர் ஒரு சிறந்த கணித ஆசிரியர். தன்னுள் மேற்கிளம்பிய தேசிய உணர்வால் தனது ஆசியர் பதவியைத் துறந்து விட்டு புளொட் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு பங்காற்றியவர். அக்காலத்தில் ''தமிழ் ஈழத்தின் குரல்'' ஒலிபரப்புச் சேவையில் அறிவிப்பாளராக கடமையாற்றியவர். அக்காலத்தில் ''அரசிளங்கோ'' என்னும் பெயர் தாங்கினார். புளொட்டின் தேசிய விடுலைப் போராட்டம் திசை மாறிச் செல்ல தனது இயக்க வாழ்வுக்கு முற்றுப்புள்ளிவைத்து விட்டு தனது ஆசிரிய பதவியை மீண்டும் பெற்று ஒரு முற்போக்கான சிந்தனாவாதியாக தன் இயல்பான வாழ்க்கையை மீண்டும் ஆரம்பித்தார்.

இலவச வைத்திய சேவையை விளம்பரப்படுத்துவது அவரின் இயல்பான செயற்பாடவே அமைந்திருந்தது. இந்து தீவிரவாதிகள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் தங்கள் மதம் கவர மேற்கொள்ளும் செயற்பாடாக இம்மருந்து விநியோகத்தைக்கருதி அதற்கு அரசிளங்கோ துணை போகின்றார் என்னும் நோக்குடன் அவரைத் தாக்கினர்.

சமூக நலன்கொண்ட தனது சேவைக்குக் கிடைத்த தண்டனையையும் இம்மக்களின் மூடத்தனமான நம்பிக்கையையும் உணர்ந்து அவர் அச்சமூகத்தில் ஒரு உறுப்பினராக வாழ்வதில் உள்ள போலித்தனத்தையும் உணர்ந்து கொண்டார். இதன் காரணமாக 11.12.1997 அன்று தற்கொலை முயற்சியில் இறங்கி தனதுயிரை மாய்த்துக் கொண்டார்.

இக்கிராமத்தில் ஆரம்பித்த இம்மதப் போராட்டத்தின் ஆரம்ப விளைவு ஒரு சிறந்த ஆசிரியனையும் சமூகம் பற்றிய முற்போக்குத் தனமான சிந்தனையுள்ள ஒரு மனிதனையும் இழக்க வழியேற்படுத்தியது.

இக்கிராமத்தில் நடந்த இச்சம்பவம் நமது நாட்டில் உக்கிரம் பெற்று உள்ள இந்து - கிறிஸ்தவ எதிர்ப்புணர்வின் ஒரு பகுதி எனக்கொள்ளலாம். மனித வாழ்வின் ஏற்பட்ட பல்வேறு அலவலத்துக்கும் விடைதேடி நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இப்படியொரு அவலம் தேவையா என நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

-திரிபுவனன்

## போக்கும் வரவும்!

அண்மையில் குறிகட்டு வானிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட பஸ் வண்டியொன்றை கடற்படைச் சிப்பாய் ஒருவர் மறித்தார், பஸ் சாரதி சிப்பாய் பஸ்ஸை மறித்ததை கவனிக்கவில்லை. அவர் பஸ்ஸை எடுத்து விட்டார். உடனே கடற்படை சிப்பாய் அடுத்த காவலரணுடன் தொடர்பு கொண்டார். அடுத்த காவலரணில் வைத்து பஸ் திருப்பி அனுப்பப்பட்டது. சுமார் அரை மைல் தூரம் திரும்பிச் சென்ற பஸ் அங்கு காவல் நின்ற சிப்பாயை ஏற்றியது. பஸ் சாரதி தாக்கப்பட்டார்.

இதே வேளை குறி கட்டுவானிலிருந்து வரும் வாகனங்கள் யாவும் 4.15க்கு முன் மண்டைதீவைக் கடந்து விட வேண்டும் என்பது மண்டை தீவிலுள்ள படையினரின் உத்தரவு. வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர் சூரியப் பிரகாசம் சொல்கிறார், இராணுவ நடவடிக்கைகளின் பின்னர், படையினரால், சாரதிகள் தாக்கப்படுவது, இது மூன்றாவது சம்பவமாகும். முன்பு ஒரு சமயம், நடத்துனர் ஒருவர், ஆரியங்குளம் சந்தியில் பஸ்ஸை விட்டு இறங்க மறுத்தபோது படையினரால் தாக்கப்பட்டார். மற்றைய சம்பவம், வட பிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர், சொக்கலிங்கம் காங்கேசன் துறை முகத்திலிருந்து பஸ் வண்டிகளை எடுத்து வந்த போது அவர் பிரயாணம் செய்த பஸ் சாரதியும், அவரும் பரமேஸ்வரா சந்தியில் வைத்து தாக்கப்பட்டதுடன் ஒரு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டுமுள்ளனர்.

## "ஆயுபோவன்"


யாழ்ப்பாணத்தில் இப்பொழுது "ஆயுபோவான்" என்ற சொற்பிரயோகம் தாராளமாகப் பாவிக்கப்படுகிறது. மினி பஸ் நடத்துனர்களே சோதனைச் சாவடிகளில் சோதனைகளைக் குறைத்து பயணத்தை இலகுவாக்குவதற்காக இவ்வாறு ஆயுபோவான் போடுகிறார்கள். ஆனால் பல இராணுவத்தினர், இவர்களின் ஆயுபோவனை பொருட்படுத்துவதில்லை என்பது வேறு கதை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாறும் கட்சிகள்: தேறுமோ தேர்தல்?



ஜனவரி 29ஆம் திகதி யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடக்கப் போகின்றன. வேட்புமனுத் தாக்கலின் போது 'கோட்டை' விட்ட பகுதிகள் தவிர அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் ஆசனங்களை கைப்பற்றிக் கொள்ள அனைத்து தமிழ்க் கட்சிகளும் மும்முரமான முயற்சியில் இறங்கியுள்ளன. ஆயினும், கொழும்பிலிருந்து பறந்து சென்று பிரச்சாரங்களில் ஈடுபடுகின்ற இக்கட்சிகளின் போஸ்டர்களும் பிரசுரங்களும் இலங்கை ரூபவாஹினியின் கமராவினைத் தவிர வேறு யாருடைய கண்களுக்கும் பட்டதாகத் தெரியவில்லை. பட்ட காயத்தின் வடு மாறுவதற்கு முன்பாக, பகல் கொள்ளைக்கார தமிழ்க் கட்சிகளிடம் மாட்டுப்பட்டுப் போன மனோநிலை அங்குள்ள மக்களுக்கு, இராணுவம் இன்று நடாத்துகின்ற சிவில் நிர்வாகத்தின் கீழ் 600க்கு மேற்பட்டோர் காணாமல் போயும் 324 பேர் காயமுற்றும் 45 பேர் தமது கால்களை இழந்தும் போன நிலையிலும் கூட, இந்தத் தமிழ்க் கட்சிகளின் கையில் அதிகாரம் போவதை விட இராணுவத்தின் நிர்வாகம் மேலானதே என்று கருதவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

கண்ணுக்கு தெரியும் எதிரியை விட, கண்ணுக்குத் தெரியாத, கூட நின்றே குழிபறிக்கக் கூடிய இந்தக் கட்சியினர் ஆபத்தானவர்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும், இதனால் தான் இங்கிருந்து அங்கு சென்ற தேர்தல் கண்காணிப்பு குழுக்களிடம் தன்னை இனங் காட்டிக் கொள்ளாத பாடசாலை அதிபர் ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இராணுவத்திடம் ஓரளவுக்காவது பொறுப்புச் சொல்லும் கடப்பாடு இருக்கிறது. ஆனால் இந்தத் தேர்தலில் நிற்கும் பெரும்பாலான கட்சிகளின் நடவடிக்கைகளோ வெறும் தனிநபர் நாடகம் தான்."

அரசாங்கம் இன்று அவசர அவசரமாக நடாத்தவிருக்கிற இந்தத் தேர்தல் என்கிற கேலிக் கூத்தை அங்குள்ள மக்கள் கொஞ்சமும் ஏற்கவில்லை என்பதை வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்கள். "எங்களது அன்றாடப் பிரச்சினைகள் எவ்வளவோ இன்னமும் தொடப் படாமலேயே இருக்கையில் இதைப் பற்றி யாருக்கு அக்கறை? என்கிறார்கள் அவர்கள்.

இங்கிருந்து சென்ற தேர்தல் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளுக்கு யாழ் மாவட்ட மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சொன்னதெல்லாம் இதுதான்:" போய் அரசாங்கத்திடம் சொல்லுங்கள். இப்போது இந்தத் தேர்தல் நடாத்தப் படுவதை நாம் விரும்பவில்லை' என்று.

நடக்கப்போகும் தேர்தல் பற்றி கிடைக்கின்ற தகவலின்படி அங்குள்ள மக்கள் யாரும் அதில் எந்த அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை. தேர்தலில் பங்கு பற்றும் உத்தேசம் அவர்களிடம் இருப்பதாகவும் தெரியவில்லை. தப்பித்தவறி தாம் இராணுவத்தினரால் புள்ளடி போடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டால், வாக்குச் சீட்டை பாழாக்குவதைத் தவிர தமக்கு வேறு வழியில்லை என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஒரு தேர்தலை நடாத்துவதன் மூலம் சர்வதேச சமூகத்திற்கு இங்கு ஒரு சுமுகமான நிலை நிலவுவதாக காட்ட இந்த அரசாங்கம் முயல்கிறது. அப்படியிருக்க இந்தத் தேர்தலில் பங்குபற்றி அதை நியாயப்படுத்த எமக்கு எப்படி முடியும்? என்று கேட்கிறார் யாழ் மாவட்ட மக்கள் குழுவொன்றின் பிரதிநிதி. எமக்குத் தேவை ஜனநாயகம் தான் கேலிக்கூத்தல்ல என்கிறார் இன்னொரு பிரதிநிதி.

மக்களின் அடிப்படையான பல தேவைகள் இன்னமும் சரியரகக் கவனிக்கப்படாமல் உள்ளன. இவற்றைக் கண்காணிக்க எந்தவொரு அமைப்போ குழுவோ இங்கு வந்தது கிடையாது. ஒரு கேலிக் கூத்தாக, அரசாங்கத்தினதும் தமிழ்க் கட்சிகளினதும் அரசியல் பிழைப்புக்காக நடக்கும் இந்த தேர்தலை கண்காணிக்க மட்டும் இங்கே இந்த அமைப்புக்கள் வந்துவிட்டன என்று வருத்தத்துடன் தெரிவிக்கிறார் இன்னொருவர்.

யாழ் மாவட்டத்தில் நடக்கவுள்ள இந்த அரசாங்கத்தின் கேலிக் கூத்துக்கு அங்குள்ள மக்கள் ஆதரவு இல்லையோ இருக்கிறதோ, எமது தமிழ்க் கட்சிகள் மட்டும் போட்டி போட்டுக்கொண்டு தமது ஆதரவை தெரிவித்து களத்தில் இறங்கியுள்ளன. அவற்றுக்கு அங்குள்ள மக்களது அன்றாட பிரச்சினைகளில் அக்கறை எடுத்துச் செயற்பட நேரமில்லை. அவர்களது பிள்ளைகள் காணாமல் போவது, அவர்களது சொத்துக்கள் அழிவது அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரணங்கள் சரிவரக் கிடைக்காதது என்பவை பற்றி அலட்டிக் கொள்ள நேரம் இல்லை. அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வை "போதாது", "போதாது" என்று பேச்சுக்குச் சொல்லிக்கொண்டே அதே மோசமான பழைய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் நடக்கும் தேர்தலில் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து ஈடுபடுகின்றார்கள் அவர்கள்.

தேர்தல் திணைக்களத்தால் முறைப்படி தயாரிக்கப்பட்ட தேர்தல் இடாப்புக்களோ, வாக்காளப் பட்டியல்களோ கிடையாது, குடாநாட்டிலிருந்து பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் வீதி ஓரங்களிலும் வசிக்கிறார்கள். வீதிகள் முழுவதும் இராணுவத் தடையரண்களும் சோதனைச் சாவடிகளும் இயங்குகின்றன. காணாமல் போதல், கைது, துப்பாக்கிச் சூடு, என்பவற்றிற்கு குறைவே இல்லை. இருண்டால் ஊரடங்கு நிலை. நினைத்த போது நினைத்த இடத்திற்கு போகும் உரிமை அங்குள்ள பிரஜைகளுக்கு கிடையாது....

ஆனாலும் அங்கு தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கான சுமூக நிலை நிலவுகின்றது என்கின்றன தமிழ்க் கட்சிகள்.

"இங்குள்ள மக்கள் யாரும் தேர்தலில் எந்த அக்கறையையும் காட்டுவதாகத் தெரியவில்லை" என்று அங்குள்ள ஒரு இராணுவ அதிகாரியே குறிப்பிடுகின்ற போதும் எமது கட்சிகளுக்கு அங்கு அமைதியான சூழல் நிலவுகிறது."

இதிலே வேடிக்கையான விடயம் இது தான்: யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தத் தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களை சந்தித்துப் பேசிவிட்டு வந்த பத்திரிகையாளர் ஒருவர் சொன்னார், அவர்கள் யாருக்கும் தேர்தல் நடாத்தப் படுவதில் உடன்பாடுகிடையாதாம். அரசாங்கம் தேர்தலை நடாத்துவதால் தான் தாம் தவிர்க்க முடியாமல் அதில் பங்குபற்ற வேண்டி ஏற்பட்டுள்ளதாம்.

அவரிடம் மேலும் இது தொடர்பாகப் பேசிய போது அவர் தெரிவித்த விடயம் இது தான்.

அங்குள்ள யாருக்கும் தேர்தலில் அக்கறை இல்லை. மதகுருமார், சாதாரண மக்கள், பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள் ஏன் இராணுவம் உட்பட யாருமே இந்தத் தேர்தலை விரும்பவில்லை. ஆனால் எல்லோரும் பொதுவாக கூறுகிற விடயம் அரசாங்கம் புலிகளுடன் பேச வேண்டும். அதையும் இந்த அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வைக்க வேண்டும் அப்போது தான் அமைதி நிலை சாத்தியம் என்பதுதான்....

"ஆக, யாருக்காக இந்தத் தேர்தல் நடாத்தப்படுகிறது? மக்களுக்காகவா? அங்குள்ள அரசியல் கட்சிகளுக்காகவா? இராணுவத்தினருக்காகவா? இந்த அரசாங்கம் இந்தத் தேர்தலை ஏன் வைக்கிறது என்றே தெரியவில்லை..."

கொழும்பிலிருந்து யாழ் சென்ற தேர்தல் கண்காணிப்புக் குழுவிடம் அங்குள்ள மக்கள் அமைப்புக்குழுப் பிரதிநிதிகளும் மதகுருமாரும் தெரிவித்த இன்னொரு விடயம் இந்த தேர்தலை கண்காணிக்க வருவதன் மூலம் அதை நீங்கள் சட்ட பூர்வமானதாகவும் நியாய பூர்வமானதாகவும் மாற்றப் போகிறீர்கள். உண்மையில் அதை நீங்கள் செய்யக் கூடாது அதற்கு நாம் ஒத்துழைக்கவும் முடியாது. தேர்தலை கண்காணிப்பதை விட நீங்கள் இங்குள்ள நிலமையை கண்காணியுங்கள் அதை உலகுக்கு எடுத்துச் சொல்லுங்கள் அது தான் நமக்குத் தேவை.

தமிழ்க் கட்சிகள் தமது கடை விரிப்பை நடாத்தி பகல் கொள்ளை அடிக்க முயன்று கொண்டிருக்கின்ற போதும் மக்கள் விழிப்பாக இருக்கிறார்கள் என்று தான் கூற வேண்டும்.

அரசாங்கமும் தமிழ்க் கட்சிகளும் கூட்டாக உலக மக்களது கண்களில் மண்ணைத்தூவுவதில் வெற்றி பெறலாம். ஆனால் யாழ் மாவட்ட மக்களின் கண்களில் தூவுவது ஒன்றும் சாத்தியப்படப் போவதில்லை.

29ஆம் திகதிக்குப் பிறகு இந்த உண்மை விளங்கும்.

பத்துப் பதினைந்து வோட்டுக்களுடன் பா.உ. ஆகுவதும், ஆட்சி நடாத்துவதும் போல, உள்ளூராட்சி சபையையும் ஆட்சி செலுத்தும் கேலிக்கூத்து தான் சந்திரிகா மார்க் ஜனநாயகம் என்பதை அப்போது உலகம் விளங்கிக் கொள்ளும்.

# மெல்லத் தமிழன்...

யாழ்ப்பாண தேர்தல் களத்தில் நிற்கிறார் நண்பர். புர்பர் என்ற ஓசையுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று அவரைக் கடந்து செல்கிறது. அருகில் நிற்கும் யாழ் வாசி ஒருவரிடம் வினவுகிறார், இது யார் என்று. இங்கே மோட்டார் சைக்கிளில் செல்வது ஒன்றில் ஒரு கிறிஸ்தவ தேவாலய தந்தையாக இருப்பர். அல்லது தேர்தல் வேட்பாளர் ஒருவராகவே இருப்பர். இதுஃபாதர் அல்ல... எனவே ஒரு வேட்பாளர்தான் என்கிறார் அந்த யாழ் வாசி.

தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துவிட்டன. கூட்டப்பிரச்சாரங்களின் போது, அனேகமாக எல்லாக் கட்சிகளும் அரசாங்கத்தைச் சாடுகின்றன. ஒரு கட்சிகூட புலிகளை விமர்சிக்கவில்லை. சில கிராமப்புற கூட்டங்களில் புலிகள் தமக்குத்தான் ஆதரவு என்று கூட எல்லாக் கட்சிகளுமே சொல்கின்றன. வேடிக்கை என்னவென்றால், புலிகள் தம்மில் யாருக்கு ஆதரவு என்று சொல்வதில் கூட இவர்களுக்குள் போட்டி நிலவுவது தான்.

நண்பர் ஒரு பத்திரிகையாளர். ஒரு வேட்பாளரை நெருங்கி கேட்கிறார். ''ஏன் எலக்சன் கேட்கிறீர்கள்... ஒரு சனத்துக்கும் தேர்தலில் விருப்பமில்லை போல் தெரியுதே''

''எங்களுக்கும் விருப்பமில்லைதான். ஆனால் அரசாங்கம் தேர்தலை வைக்கிறபடியால் கேட்காமல் இருக்க முடியவில்லை''

### செய்தி -2

நண்பர் கொஞ்சம் தேர்தல் வேலைகளை சுற்றிப்பார்வையிடுகிறார். ஓரிருவருடன் பேச்சுக் கொடுக்கிறார். ஒரு கட்சியின் வேட்பாளர் இப்படிச் சொல்கிறார்.

''இவ்வளவு நாளும் நாங்கள் அக்கறைப்படாத ஒரு விடயத்தில் இப்ப அக்கறைப்பட வேண்டி இருக்கு. ஒவ்வொரு வேட்பாளரும் என்ன சாதி என்று அறிவதுதான் அது. எப்படியும் சாதிக்காக சில பகுதிகளில் வோட் விழத்தான் செய்யும் என்ற படியால் எமக்கு அது தேவையாக இருக்கிறது''

''யாழ்ப்பாணத்தில் ஒரு சில குறிப்பிட்ட சாதிகளே இப்போது பெரும்பான்மையாக இருக்கின்றனர். ஏனையோர் இப்போது இடம்பெயர்ந்து விட்டார்கள். எனவே அந்தச்சாதி வேட்பாளர்களைக் கொண்ட குழுவுக்கு வாய்ப்பு அதிகம் ஏற்பட்டு விடும்... இதனால் நாம் இதை அறிவது அவசியமாக இருக்கிறது...''

நண்பருக்கு தேர்தலில் இப்படியும் ஒரு புதிய பரிமாணம் இருப்பது அப்போது தான் உறைத்தது.

### செய்தி -3

நண்பர் மக்களிடையேயும் போய் வருகிறார். அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறியும் ஆவல் அவருக்கு. ஆனால் யாரும் தேர்தலைப்பற்றி அவரிடம் ஆர்வமாகக் கதைக்கவில்லை. குருநகர் மீனவர் குடியிருப்பு மக்களில் சிலர் இவ்வாறு சொல்கிறார்கள்:

''எங்களுக்கு புலிகளின் காலத்தில் கூட மீன்பிடிக்க முடிந்தது. இப்போது முடியவில்லை. இந்த விடயங்களை கதைத்து செய்து தராமல் தேர்தலுக்கு வந்து நிக்கினம். உதைப் பற்றி ஆருக்கிப்ப அவசரம்...''

நண்பர் சுற்றிச் சுற்றி வருகிறார்.

ஒரே இதே கதை தான். 'யாருக்கு இது அவசியம்?' ஒருவரிடம் 'தேர்தலில் யாருக்கு வாய்ப்பு அதிகம்' என்று கேட்டுப் பார்த்தார்.

'காசைத் தண்ணியாக இறைத்து வேலை செய்யிறது ஈ.பி.டி.பிதானாம். அவர்கள் அவருக்கு பெயின்ற் பூசவும் போஸ்டர் எழுதவும் ஸ்பிறே மெசினே கொண்டு வந்திருக்கிறார்கள்... அடுத்தது ரெலோ, ஆனால் அதைப்பற்றி யாரும் இன்னமும் பேசத் தொடங்கவில்லை. இப்போது தான் இங்கு கால் வைத்திருககிறார்கள். ஈ.பி.ஆர்.எல்.எப்பின் நடவடிக்கைகள்தான் மிகவும் குறைவாக இருக்கிறது. ஈ.பி.டி.பிக்கு கொஞ்சம் சனங்களுக்கு உதவி செய்ய முடிந்திருக்கிறது. அவையள்ளை நாலைஞ்சு எம்பிமார் இருக்கிறது ஒரு காரணமாக இருக்கலாம்... புளொட்டுக்கு கொஞ்சம் செல்வாக்கு இருக்குத் தான்... ஆனால்...

''ஆனால்...''

''ஆனால், இப்பிடி எல்லாம் இருக்கிறதாலை சனம் வோட் போடும் எண்டு நிக்கேலாது.. எலக்சன் வைக்கிறதையே சனம் விரும்பேல்லை.. அங்கினை ஒரு ஐந்து பத்து வீதம் சனம் வோட்டுப் போடலாம்... அதுக்கு மேலை நான் நினைக்கேல்லை.....

நண்பருக்கு தலை சுற்றியது.

''ஏன் சனம் புலிகளுக்கு பயப்பிடுது எண்டு நினைக்கிறியளோ?''

''இல்லை.. ஆனால் பயமில்லை எண்டும் சொல்லேலாது. ஆனால் அதை விட முக்கியம் இப்ப எலக்சன் வைக்கிற நிலைமையே இஞ்சை இருக்குது? இதை விட்டிட்டு அரசாங்கம் புலியோடை பேசினால் என்ன?''

நண்பர் மௌனமானார். இதற்கு பதில் சொல்ல முடியுமா என்ன? அரசாங்கம் பதில் சொல்ல வேண்டிய கேள்வியல்லவா இது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளின் வாடகைப் பேச்சாளர்கள்!

*'அமிர்தலிங்கம் அண்ணாச்சி தமிழீழம் என்னாச்சி', 'கேட்டது தமிழர் உரிமை கிடைத்தது ஜப்பான் ஜீப்', 'கேட்டது தமிழீழம் கிடைத்தது மாவட்டம்',*

ஏறத்தாழ 15 வருடங்களுக்கு முன் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கிண்டலடித்த போராளிக் குழுக்களும் அதே நிலைக்கு வரும் என்று அன்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் இன்று வந்திருக்கிறார்கள் என்பது தான் உண்மை.

தமிழ் மக்களுடைய அரசியல் கோரிக்கைக்கான போராட்டத்தில் நம்பிக்கை வைக்காது தனிப்பட்ட ராஜிவ் காந்தி, பிரேமதாச, சந்திரிகா என்கிற நபர்கள் மேல் நம்பிக்கை



வைத்து. அவர்கள் இனப்பிரச்சினையை நியாயமாகத் தீர்ப்பார்கள் என்று அறிக்கை விடுமளவுக்குத் தான் அவர்களுடைய 'சோஷலிச அறிவு' இருந்தது.

இந்தக் குழுக்கள் தமிழ் மக்களுடைய உரிமைகளுக்காகக் குரல் எழுப்பிய காலத்தை விட 'ஜனநாயக வழி'க்குவந்து அரசு கொடுக்கும் ஜப்பான் ஜீப்புக்காக அலைந்த காலம் அதிகமானது. அதற்காக ஜனநாயக வழியில் இறக்கி விட்ட பெருமை இந்தியாவுக்கு.

பெப்ரவரி 4ந்திகதி இலங்கையின் 50வது 'சுதந்திர தினத்தைக் கொண்டாடும் முனைப்பில் இறங்கியிருக்கும் சந்திரிகா அரசு அதனைத் தனது வெற்றி விழாவாகக் கொண்டாட இரண்டு விடயங்களைச் சாதிக்க வேண்டியிருந்தது. ஒன்று; யாழ்ப்பாணத்துக்கான தரை வழிப்பாதையைத் திறப்பது. இரண்டு; யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்தி அங்கு இராணுவ நிர்வாகமல்ல, தமிழ்க் கட்சிகளுடைய சிவில் நிர்வாகமே நடக்கிறது என்று காட்டுவது.

அரசு தேர்தலை அவசரமாக நடாத்தும் முடிவுக்கு வந்ததற்கு இன்னொரு காரணமுமிருந்தது. அதாவது யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் காணாமல் போனோரின் தொகை 600க்கும் மேல் என்று சர்வதேச மன்னிப்புச் சபை அரசைக் குற்றம் சாட்டியிருக்கிறது. இந்த நெருக்கடியிலிருந்து தப்பிப்பதற்கான வழி உள்ளூராட்சித் தேர்தலை நடாத்தி தமிழ்க் கட்சிகளிடம் சிவில் நிர்வாகத்தை(?) ஒப்படைத்து விடுவது.

யாழ்ப்பாணத்தில் இலங்கை அரசாங்கத்தின் சிவில் நிர்வாகத்தை நடாத்த புலிகள் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை. எனவே அவற்றைக் குலைக்க முனைவர். இதனால் சீற்றமடையும் தமிழ்க் குழுக்கள் புலிகளுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள முனைவர். ஆக, புலிகள் தமிழ்க் குழுக்கள் மோதலாக அது மாறிவிடும். அரசாங்கம் தனது பெயரைக் காப்பாற்றிக் கொள்ளும் அதே வேளை வெறும் உள்ளூராட்சி சபைகளுடன் தமிழ்க் கட்சிகளை வாலாட்டச் செய்து விடலாம் என்று அது எண்ணியது. கூடவே இந்தத் தமிழ்க்கட்சிகளை வைத்து புலிகளின் எதிர்ப்பைத் தணிப்பதோடு மெல்ல மெல்ல புலிகளின் கோரிக்கைகளைப் பலவீனமடையச் செய்து அவர்களைத் தோற்கடித்து விடலாம் எனவும் எண்ணியது.

இந்த அடிப்படையில் தான் ஜெயசிக்குறு பெப்.4ம் திகதிக்கு முன் தனது இலக்கைப் பூர்த்தி செய்யும் என பாதுகாப்பமைச்சர் அநுருத்த காலக்கெடு விதித்தார்.

அரசாங்கமும் செயலில் இறங்கியது. தேர்தலுக்கு நாள் குறித்தது. முன்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த முயன்ற போது தமிழ்க் கட்சிகள் நிலைமை சாதகமாக இல்லை என்று கூறிய போது தேர்தலை ஒத்தி வைத்த அரசாங்கம் இம்முறை தமிழ்க் கட்சிகள் கெஞ்சிய போதும் மறுத்து விட்டது. தேர்தல் நடந்தே தீரும் என்று அமைச்சர் பீரிஸ் உறுதியாகத் தெரிவித்திருந்தார். நீங்கள் போட்டியிடாவிட்டால் நாங்கள் போட்டியிடுவோம் என்றார் பொ.ஐ.முவைச் சேர்ந்த ஜெயராஜ் பெர்ணாண்டோபிள்ளை. தமிழ்க் கட்சிகளுக்குக் கிடைத்தது சாட்டு. நாங்கள் போட்டியிடாவிட்டால் பொ.ஐ.மு. வேட்பாளர்களை நிறுத்தி விடும். ஆகவே நாங்கள் போட்டியிடுகிறோம் என்று கூறி யாழ்ப்பாணத்துக்குப் பறக்கவாரம்பித்தன.

அரசாங்கமோ தான் போட்ட வலையில் தமிழ்க்கட்சிகள் விழுந்து விட்டன என்பதை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டாலும், ஜயசிக்குறுவில் விழுந்த அடியில் தனது கணக்கு தப்பானது என்பதை உணர்ந்தது. பெப்.4ந்திகதிக்கு முன்னர் பாதை திறப்பது சாத்தியமில்லை என்று இராணுவ உயரதிகாரிகளே ஒப்புக் கொள்ளுமளவிற்கு யுத்தகள நிலைமை மோசமாகவிருந்தது. புலிகளின் தாக்குதிறனும் உவப்பற்ற காலநிலையும் யுத்தகளத்தில் அரசபடைகள் எதிர்பார்த்த வெற்றியைப் பெற வாய்ப்பளிக்கவில்லை.

அரசு 'தோல்வியடைந்தது யுத்தகளத்தில் மட்டுமல்ல. தேர்தல் களத்திலும் தான் என்பதை உணர நீண்ட நாட்கள் பிடிக்கப் போவதில்லை.

ஏனென்றால் அரசாங்கம் எதிர்பார்த்தது போல இந்தத் தேர்தலூடாக புலிகளின் அரசியல் தோற்கடிக்கப்படப் போவதுமில்லை. புலிகள் ஒதுக்கப்படப் போவதுமில்லை.

காரணம் யாதெனில், உள்ளூராட்சித் தேர்தலில் குதித்துள்ள தமிழ்க் கட்சிகள் புலிகள் முன்வைத்த அதே கோரிக்கைகளைத் தான் பிரதானமாக முன்னெடுக்கிறார்கள்.

முதலில் மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்திற்குக் குறைந்த தீர்வு எதனையும் ஏற்றுக் கொள்வதில்லை.

அரசாங்கத்தின் தீர்வுப் பொதி தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானதல்ல என்கிற பிரச்சாரம். (ரெலோ ஒருபடி மேலே போய் தீர்வுப் பொதிக்கு எதிராகவே நேரடியாகப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது.) இன்னுமொரு முக்கியமான விடயம்இக் கட்சிகள் எவையும் புலிகளுக்கெதிரான பிரச்சாரமெதிலும் இறங்கவில்லை. மாறாக சில கட்சிகள் தேர்தலில் புலிகள் தங்களை மறைமுகமாக அங்கீகரித்திருக்கிறார்கள் என்ற பாணியில் கதை விட ஆரம்பித்திருக்கின்றன.

உண்மையில் இக்கட்சிகளின் பிரச்சாரத்தை மட்டும் பார்க்கும் ஒருவர் புலிகளுடைய நிலைப்பாட்டுக்கும் இக்கட்சிகளுடைய நிலைப்பாட்டுக்குமிடையில் வேறுபாடு கண்டு விட முடியாது. மக்களின் தேவைகளை அலட்சியம் செய்து விட்டு அவர்களுடைய கோரிக்கைளைப் பற்றிப் பேசாமல், பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல், எழுதாமல் பத்திரிகையே விற்க முடியாதெனப் புரிந்தவர்கள் வாக்குவேட்டைக்கு அது எத்துணை அவசியம் என்பதைப் புரிந்து கொள்ளாமலில்லை. தமிழ் மக்களுக்குத் தெரியும் இக்கட்சிகள் இவற்றையெல்லாம் இதயசுத்தியோடு இவை முன்வைக்கவில்லையென்றும் வெறும் வாக்கு வேட்டைக்காகத்தான் இந்த சாகசங்கள் எல்லாம் என்று.

ஆக, குறிப்பிட்ட காலத்திற்கு புலிகளின் கோரிக்கையைப் பிரச்சாரப்படுத்தும் புலிகள் வாடகைக்கு அமர்த்திய பேச்சாளர்களைப்போல தமிழ்க்கட்சிகள் பேசப் போகின்றன. இது புலிகளின் கோரிக்கைகள் நியாயமானவை என்ற அபிப்பிராயத்தை வலுப்படுத்திவிடும். அரசு வகுத்த வியூகம் அது எதிர்பார்த்ததற்கு மாறாக புலிகளை இன்னமும் பலப்படுத்துவதில் போய் முடியப் போகிறது.

சுடர்விழி

## புலிகளை வென்ற சேவை!

என்னதான் புலிகள் பிரிவினையின் தேவையும், தனிநாட்டின் அவசியமும் பற்றி மாய்ந்து மாய்ந்து சொன்னாலும் அரச தொலைக்காட்சிச் சேவைக்கு முன்பு தோற்றுத் தான் போவார்கள். இலங்கையில் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் தான் சுதந்திரம் கிடைத்திருக்கிறது. மற்றவர்களுக்கு இல்லை என என்ன அருமையாக ரூபவாஹினி காட்டுகிறது பாருங்கள். தினமும் செய்தி அறிக்கைக்கு முன்பு இலங்கையின் 50 வது சுதந்திர தினத்திற்கு இத்தனை நாள் இருக்கு என்று அறிவிப்பு போடுவார்கள். முதலில் ''பெரு'' ஒலியின் பின்னணியில் கௌதமபுத்தரைக் காட்டுவார்கள். அதையடுத்து சிங்கள மன்னர்களின், சிங்கள மக்களின் கலாசார அடையாளங்கள் வரும், பிறகு தேசியக் கொடி அதில் கரைகளில் இருக்கும் சிறுபான்மையினருக்கான நிறங்கள்... மூச். அதெல்லாம் காட்டாமல் சிங்கத்தை மட்டும் முழுத்திரையில் பெரிதாகக் காட்டுவர். பின் முடிவில் கண்டிப் பெரஹர. அவ்வளவு தான். மற்ற இனங்களின் கலாசார அடையாளங்களோ வழிபாட்டிற்குரிய தலங்களோ மருந்திற்கும் இல்லை. அரசும், அதன் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் அரச இயந்திரமும், அதற்கான சமூக சூழ்நிலையை தோற்றுவிக்கப் படாதபாடுபடும் தொடர்பு சாதனங்களும் எந்தளவுக்கு சிங்கள பௌத்த பேரினவாதத்தை தூக்கிப் பிடிக்கிறது என்று பார்த்தீர்களா? வெறும் சுதந்திர தினக் கொண்டாட்டம் பற்றிய விளம்பரத்தில் தானும் அதனால் தன் முகத்தைக் காட்டாமல் இருக்க முடியவில்லை. நிலைமை இப்படி இருக்க அரசாங்கம் சிவில் நிர்வாகத்தை தமிழ் மக்களின் கையில் கொடுக்கத் தான் தேர்தலை நடாத்துகிறது என்று சொல்வதும் அதற்கு வக்காலத்து வாங்குமாப் போல தேர்தல் களத்தில் இறங்கி இருக்கிறவையையும் பற்றி என்ன சொல்லலாம்?

## சாத்தான் வேதமும் ஓதும்!

*"... எந்தவித அரசியல் நோக்கமும் இன்றி நற்பெயர் எடுக்கவும், நாம் தான் செல்வாக்குள்ளவர் என்று காட்டி மேலும் அரசிடம் சலுகை பெறவும் மட்டுமே இத்தேர்தலில் தமிழ் கட்சிகள் குதித்துள்ளன..."*

இதனை வாசிக்க உங்களுக்கு தமிழ்க் கட்சிகளின் செயலால் மக்கள் ஏமாற்றப்படுவதைக் கண்டு சகிக்காத ஒரு நேர்மையான பத்திரிகையாளர் வெஞ்சினம் கொண்டு எழுதியதாகத் தோன்றக்கூடும். ஆனால் பகிடி என்னவென்றால் இதனை தினமுரசில் எழுதிய நாரதரின் கட்சியான ஈ.பி.டி.பியும் இத்தேர்தலில் பங்கு கொள்வது தான். அத்தோடு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையை எந்தளவுக்கு கேவலமாகப் பயன்படுத்த முடியுமோ அந்தளவுக்குப் பயன்படுத்தி எம்.பியாக வந்தவர் தான் நாரதர் என்ற பெயரில் எழுதும் அற்புதராஜா நடராஜா. இதனை அறிந்து கொண்ட எனது நண்பர் ஒருவர் சொன்னார் 'தான் செய்யிறது சனத்துக்கு எங்கே தெரியப்போகிறது என்ற துணிவில் தான் இப்படிச் செய்கிறார்' என. அவருக்கு தான் சொன்னது 'இவருக்கு அதைப் பற்றியெல்லாம் கவலை இல்லை. அப்படியே சனத்துக்குத் தெரிந்தாலும் தான் போனமுறை செய்த அதே தகிடுதித்த வேலைகளை இம்முறையும் செய்து வெல்லலாம் என்பதைத் தெரியாதவரா அவர் தவிரவும் யூ.என்.பி.யை விட தான் எவ்விதத்திலும் சளைத்தது அல்ல என்று காட்டிக் கொள்ளும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு அதனை அனுமதிக்கும் என்பதையும் தெரியாதவரல்ல அவர். ஆனால் அவருக்கு இருக்கும் கவலை எல்லாம் போனமுறை தனது கட்சி தனியவே தகிடுதித்தம் செய்தது. இம்முறை இதில் நல்ல அனுபவம் உள்ள இன்னும் மூன்று கட்சிகள் வேறு வந்துவிட்டன என்பதே. அதனால் தான் போலும் வாள் வீச்சில் எல்லாம் ஈடுபடுகிறார்கள்.''

நண்பர் கேட்டார்; அப்ப அவர் எழுதுகிறது எல்லாம்...?

அவருடைய கட்சி தேர்தலில் நிற்கிறதும் பிழைக்க, அவர் பத்திரிகை நடாத்துவதும் பிழைக்க. எப்படியோ தமிழ் மக்களின் பிரச்சினையை விற்றுப் பிழைத்து விடு வார்கள்.

அப்போ இவ்ரைச் சிறந்த பத்தி எழுத்தாளர் என்று புகழ் மாலை சூட்டி இருக்கிறாரே டி.பி.எஸ் ஜெயராஜ்.?

அது அவருடைய பிழைப்பு. அதைப்பற்றிச் சொல்லித் தான் தெரிய வேண்டுமென்பதில்லையே?

## மனிதத்தை கொல்லும் யுத்தம்!

நான் கேள்விப்பட்ட மட்டில் இம்முறை பகிடி வதையால் அநியாயமாக கொல்லப்பட்ட மாணவனின் செய்தி அறிந்து தமிழ் சமூகத்தினர் அதிர்ச்சியை விட ஆறுதலே அடைந்தனர் என்றே சொல்ல வேண்டும். அவர்களின் பார்வையில் இனவாதம் பச்சையாக தெரிந்தாலும் அதனை வளர்த்துவிட்ட காரணிகளை என்னவென்பது? வரப்பிரகாஷின் கொலையை வெளியிட்ட தொடர்பு சாதனங்கள் பகிடிவதை உருவாக காரணமாக இருந்த காரணிகளையோ அல்லது அதனை கண்டும் காணாதுவிட்ட அரசையோ கேள்விக்குட்படுத்தாது அக்கொலைக்கு காரணமான பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களின் இனப்பின்னணியையே முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டனர். ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் பயங்கரமானவர்களாக, வன்முறை வெறிகொண்டவர்களாக அடையாளப்படுத்த னைந்த முயற்சியை தமிழ் மக்கள் தம் மீதான இன்னொரு வடிவில் அமைந்த பேரினவாத தாக்குதலாகவே இனம் கண்டனர். இதனால் தான் இம்முறை ஆறுதல் அடைந்ததாக காட்டிக் கொண்டனர். இது கண்டிக்கப்பட வேண்டிய மனநிலைதான். இதன் மூலம் துஷாரவின் படுகொலை நியாயப்படுத்த முனைவது கூட கேவலமாகன செயல்தான். ஆனால் இரு சமூகங்களிற்குமிடையில் அபாயகரமான நிலைவரை உறவு சிக்கலடைந்து வருவதையும் அதனை மேலும் சிக்கலாக்கும் தொடர்பு சாதனங்களின் பணிவையும் என்னவென்பது? அத்துடன் இவ்வளவிற்கும் காரணமாக அமையும் யுத்தத்தை நடாத்துபவர்களை என்ன செய்வது? யுத்தம் மனிதர்களை சொல்வது முடிந்து மனிதத்தை கொல்ல தொடங்கி விட்டதாகவே எனக்கு படுகிறது.

கா.சூ.த்ரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




'இலங்கைத் தமிழர் மனித உரிமைப் பிரச்சினை' என்ற விடயம் தொடர்பாக டில்லி தொழிற்துறை வர்த்தக சம்மேளன மண்டபத்தில் நடைபெற இருந்த மாநாட்டை நடத்துவதற்கான அனுமதியை முன்னாள் அமைச்சரும், சமதா கட்சி பா. உறுப்பினருமான



ஜோர்ஜ் பெர்னாண்டசுக்கு மறுத்தது டில்லி பொலிஸ், புலிகளுக்கு ஏஜென்டாக அவர் தொழிற்படுவதாகவும், இம்மாநாடு புலிகளுக்கு தமிழ் நாட்டில் மீளக்காலூன்ற வாய்ப்பளிக்கும் முகமாக அவரால் நடாத்தப் படுவதாகவும் குற்றம் சாட்டியது. இந்தக் குற்றச்சாட்டை எதிர்த்த ஜோர்ஜ் பெர்னாண்டஸ், மாநாட்டை தனது வீட்டில் நடாத்தினார். தன்னை தேவையில்லாமல் புலிகளின் ஏஜென்ட் என்று இவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள் என்று கூறும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் 1983இன் பின்னான இலங்கைத் தமிழர் மனித உரிமைகள் தொடர்பாக நடாத்தப்பட்ட மாநாடுகள் அனைத்திலும் தான் தொடர்ந்து கலந்து கொண்டதாகவும், இம்மாநாடு அந்தத்தொடரில் ஐந்தாவது மாநாடென்றும் குறிப்பிட்டார். இந்திய உள்துறை அமைச்சர் குப்தா இந்த மாநாடு புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்டதென்றும், இதற்கான நிதியும் அவர்களாலேயே வழங்கப் பட்டதென்றும் தெரிவித்ததை மறுத்த பெர்னாண்டஸ், இம் மாநாட்டிற்கான நிதி முழுக்க முழுக்க தமிழ் நாடு மற்றும் பெங்களூர் சராசரி மக்களின் உதவியால் கிடைத்ததாகும் என்கிறார்.

பாரதிய ஜனதா கட்சியின் கூட்டுக் கட்சியான சமதா கட்சி பா.உ வான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் இந்திய அவசரகால நிலையின்போது அதை எதிர்த்து நாடளாவிய போராட்டங்களை நடாத்தியவர். இதனால் சிறைபுகுந்தவர். சிறையிலிருந்தபடியே தேர்தலில் வெற்றி பெற்று மொரார்ஜி தேசாய் அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகித்தவர்.

இவர் சண்டே டைம்ஸ் இதழின் நிருபருக்கு வழங்கிய பேட்டியின் சில பகுதிகளை சரிநிகர் வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்:



# தமிழ் மக்களின் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது!

சமதா கட்சி பா.உ. ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

தமிழில் : சஞ்

**இத்தகைய ஒரு மாநாடொன்றை நடாத்துவதற்கான தேவை என்ன? இம்மாநாட்டின் நோக்கங்கள் எவை?**

இன்று இலங்கையில் தமிழர்களைப் பொறுத்தவரை முற்றுமுழுதான மனித உரிமைப் புறக்கணிப்பு நடந்து கொண்டிருக்கிறது. அரசபயங்கரவாதம் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. மேலும் அங்கு ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. யுத்தத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் உயிர்கள் இழக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கே இவ்வாறான கொலைகள் எதற்காக நடக்க வேண்டும்? இந்த மாநாடு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டது. இது இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கான நிலைமைகளை உருவாக்குமாறு இந்திய அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கே முயன்றது.

**விடுதலைப்புலிகள், தமிழ் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இந்தியாவின் முயற்சிகளைக் குழப்பினார்கள்; இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அவர்கள் நிராகரித்தார்கள்; இந்திய படையின் வீரர்களைக் கொன்றொழித்தார்கள்; ராஜிவ் காந்தியை மிகவும் குரூரமான முறையில் படுகொலை செய்தார்கள். இவ்வாறான நிலையில் இந்தியா மத்தியஸ்தத்தில் ஈடுபட வேண்டும் என்று எப்படி நீங்கள் எதிர்பார்க்கலாம்?**

இன்றைய கறைபடிந்த உறவுகட்கு வெறுமனே புலிகளை மட்டும் குற்றம் சாட்டுவது சரியானதல்ல, தமிழ்ப் போராளிகளைப் பொறுத்தவரை இந்தியா தொடர்ச்சியாக ஒரு உறுதியான கொள்கையை கடைப்பிடிக்க வில்லை. அது முதலில் புலிகளையும், பிற போராளிகளையும் பயிற்றுவித்தது. 80களில் நானே தமிழ் நாட்டில் இலங்கைப் போராளிகட்கான பல பயிற்சி முகாம்களை கண்டிருக்கிறேன். பின் திடீரென்று 1987-88ல் அது எதிர்கோடி நிலைக்குச் சென்றது. தானே முன்னர் பயிற்சியளித்த இளைஞர்களை அது கொல்லத் தொடங்கியது. இரண்டு முடிவுகளும், - அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதாக எடுத்த முடிவும் சரி, பின் கொல்வதாக எடுத்த முடிவும் சரி, எந்த ஒரு தனிநபரதும் விருப்பு வெறுப்பு கட்காகச் செய்யப்பட்டதல்ல, முழு அரசாங்கத்திலும் அதன் அமைச்சரவையாலும் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சுகளாலும் சேர்ந்து எடுக்கப்பட்ட முடிவுகளாகும். இந்தக்கொள்கையில் ஒருபோதும் எந்த ஒரு தனிநபருடைய விருப்பும் பிரதானமாக இருக்கவில்லை. எனவே, இன்று, தனது கணவனை இழந்ததால், துயருற்றிருக்கும் ஒரு தனிப்பட்ட பெண்மணியின் விருப்பு வெறுப்புக்கள் ஒரு நாட்டின் வெளியுறவுக்கொள்கையைத் தீர்மானிப்பது ஆச்சரியத்துக்குரியதாகும். இலங்கைத் தமிழர்கட்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் எவையும் கடந்த கால நடவடிக்கைகள் அல்லது சம்பவங்களால் தீர்மானிக்கப் படுபவையாக அமையக்கூடாது என்று நினைக்கின்றேன். இந்த இருபிரிவினரிலும் யாராவது ஒரு பிரிவினர் கொல்லப்படாமல் இருந்திருக்கலாம் என்ற விடயம் இதைசெல்வாக்குச் செலுத்தக்கூடாது. நீங்கள் முதலில் புலிகளை அங்கீகரித்தீர்கள். இப்போதும் அதைத் தொடருங்கள்; அவர்களுக்கு உதவுங்கள்.

**புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் இந்தியாவால் எப்படி உதவ முடியும்?**

நான் அகிம்சை முறையை ஏற்றுக் கொண்டவன். ஆனால் மக்களாலும், அரசாங்கத்தினாலும், கவனத்தை ஈர்ப்பதற்காக, சாதாரண வழிமுறையிலான தொடர்புகொள்ளும் முறைகள் எல்லாம் மறுக்கப் படுகின்றபோது 1975 -77 அவசர காலச்சட்டத்தினை, இந்திரா காந்தி பிறப்பித்த ஒரு சூழலில் நான் கூட டைனமற் வெடிகளைப் பெருமளவு பயன்படுத்தினேன். நான் அவற்றை நாடு பூராவும் பயன்படுத்தினேன். இதை நான் செய்ததற்குக் காரணமே, அரசாங்கத்திற்கு அதன் இந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதனைக் காட்டுவதற்குத்தான். ஆனால், யாரையும் கொல்வதோ அல்லது காயப்படுத்துவதோ எனது நோக்கமாக இருக்கவில்லை. வன்முறை - ஆம். ஆனால் இரத்தக்களரி - இல்லை! இதுதான் 1942ல் பிரிட்டிஷாருக்கு எதிரான ஜயப்பிரகாஷ் நாரயணன், ராம் மனோகர் லோஹியா, அருணா அசாஃப் அலி ஆகியோரால் தலைமை தாங்கப்பட்ட தலை மறைவு இயக்கத்தின் கோட்பாடாக இருந்தது.

ஆனால், இதைச்சொல்லும் அதே வேளை இந்த நடவடிக்கையும் அதற்கான வழிமுறையும் போராடும் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும்.

அடுத்ததாக இங்கே ஒரு மனித உரிமை தொடர்பான அம்சம் இருக்கிறது. நக்சலைட் (இந்திய மாவோயிஸ்டுகள்) கோட்பாடான 'வர்க்க எதிரியை அழித்தல்' கோட்பாட்டை நான் எதிர்க்கிறேன். என்றபோதும், அவர்களது மனித உரிமைகளை அரசு மீறுகின்றபோதெல்லாம் நான் அதை மிகவும் தீவிரமாக எதிர்ப்பேன். கிஸ்காவுட், கொண்டபள்ளி சீதாராமையர் போன்ற குற்றவாளியாக்கப்பட்ட நக்சலைட்டுகளின் உயிரைப் பாதுகாக்க நான் முயற்சி எடுத்தேன். அவர்களது நோக்கம் நியாயமாக இருந்தால், அவர்கள் ஆதரிக்கப்பட வேண்டும்.

**ஆக, நீங்கள் புலிகளது குரூரமான கொலைகளையும், முஸ்லிம்களை பெருமளவில் கொன்றதையும், அரசியல் எதிராளிகளை படுகொலை செய்ததையும் ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா?**

தமிழர்கள் இரண்டு தசாப்தங்களாக ஒரு சமஷ்டி ஆட்சிமுறைக்காக காந்தியவழியில் போராடினார்கள். ஆனால், இது எந்தப்பயனையும் அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்களது நிலைமை மேலும் மேலும் மோசமடைந்தது ஒரு மதச்சார்பற்ற அரசாக இருந்த இலங்கை பௌத்த நாடாக மாறியதுடன், சிங்கள மொழிக்கு முதலிடம் கொடுக்கப் பட்டது. இவைதான், தமிழ் சிங்கள ஒற்றுமைக்கு எதிரான வைராக்கியத்தை உருவாக்கின.

**இப்போது புரட்சிகமான அதிகாரப்பரவலாக்கல் பொதி ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதை ஏன் முயற்சி செய்து பார்க்கக் கூடாது?**

நான் இந்தப் பொதியைப் பார்க்க வில்லை. ஆனால், அதைப்பற்றிய விமர்சனங்களைப்பார்த்ததில் இருந்து அது ஒன்றும் முன்னைய அரசியல் அமைப்பு விடயங்களை விட முன்னேறியதாகத் தெரிவில்லை என்று தோன்றுகிறது. சமஷ்டி ஆட்சி முறைமையின் அம்சங்களை நிராகரிக்கும் அம்சங்களை அது கொண்டிருக்கிறது. நான் பார்த்த அளவில் அதிலே எந்தப்புதுமையும் இருப்பதாகத் தெரியவில்லை.

**ஈழத்தை உருவாக்குவதற்கான இயக்கம் தமிழ் நாட்டில் ஒரு பிரிவினை இயக்கத்தை உருவாக்க உந்துதலாக இருக்காதா?**

இந்திய சூழல் வித்தியாசமானது. இங்கே ஒரு சமஷ்டி அமைப்பு அது முழுக்க முழுக்க பூரணமாக இல்லாதிருப்பினும் - இருக்கிறது. பிராந்திய கட்சிகளின் கூட்டமைப்புக்கள் டில்லியில் இருந்து ஆட்சி நடாத்துகின்றன. தி.மு.க., அ.இ.தி.மு.க.வும் கூட மத்திய அரசாங்கத்தின் பங்காக பங்காளர்களாக இருந்திருக்கிறார்கள். தமிழர்களுக்கு சுயாதீனமான ஆட்சி நடாத்த ஒரு மாநிலம் இருக்கிறது. தமிழர்களுக்கு அல்லது வேறு எந்த இனக்குழுக்களுக்கோ எதிரான பாரபட்சம் எதுவும் இங்கு இல்லையென்பதுடன், இங்கு ஒரு இனப் பிரச்சினையும் இல்லை.

**நீங்கள் பாரதிய ஜனதா கட்சியின் தலைமையிலான கூட்டில் அங்கம் வகிக்கிறீர்கள். என்றைக்காவது ஒரு நாள் பா.ஜ.க. உங்களது புலிகளுக்கு சார்பான நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் என்று நம்புகிறீர்களா?**

இந்த விடயம் தொடர்பாக பா.க. வுடன் நான் பேசவில்லை. இந்த மாநாடு பற்றிக் கூட அவர்களுக்குக் கூறவில்லை. ஆனால் இந்திய அரசியல் கட்சிகள் பிரச்சினைகளை மனித உரிமைகள் என்ற கண்ணோட்டத்தில் இருந்து பார்ப்பதில்லையென்பதை வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியுள்ளேன். அவர்களது நிகழ்ச்சி நிரலில் மனித உரிமைகளை அவர்கள் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆனால் சமதா கட்சி முழுக்க முழுக்க விதிவிலக்கான கட்சியாகும். தனிப்பட்ட முறையில் நான் எனது அரசாங்கத்துடனேயே முரண்பட்டுள்ளதுடன், மனித உரிமைக்கான பிரச்சாரமும் செய்து வருகிறேன். சுல்பிகார் அலி பூட்டோவை தூக்கிலிட்டபோது அதற்கு எதிராக பிரச்சாரம் செய்தேன். அப்போதைய பிரதமர் மொரார்ஜி தேசாய் இது அந்நாட்டின் உள்நாட்டு அரசியலில் தலையிடுவதாகும் என்று குறிப்பிட்டு என்னை பேசாதிருக்கும் படி கூறியபோதும், நான் இதைச் செய்தேன். பூட்டானுடன் முரண்பட்ட றொஸ்டன் டோர்க்கியை நாடு கடத்தியபோதும், நாம் அதை எதிர்த்து ஒரு முழுஇரவு விழிப்பு போராட்டத்தை நடாத்தினோம். பர்மாவில் ஜனநாயகம் திரும்பக் கொண்டு வரப்படவேண்டும் என்பதற்காகவும் நான் பிரச்சாரம் செய்தேன்.

**தி.மு.கவின் போக்கு குறித்து உங்களது அப்பிராயம் என்ன? அது புலிகள் விடயத்தில் அரசாங்கத்துடன் நிற்பதாக தெரிகிறதே?**

தி.மு.க. கூட அரசாங்கத்தின் போக்கு (கணவனை இழந்த ஒரு பெண்மணி நாட்டின் வெளியுறவு கொள்கையில் ஆதிக்கம் செலுத்துவது தொடர்பாக) தர்க்கரீதியற்றதென்றே கருதுகிறது. ஆனால், இதற்கெதிரான நிலைப்பாட்டை எடுக்க தி.மு.க பயப்படுகிறது. ஏனென்றால் அது ஒரு வகை உணர்ச்சி மயமான விடயமாக மாறிவிடும் என்று அது கருதுகிறது.

இந்தியர்களை இலகுவில் உணர்ச்சிகளால் ஆட்டுவித்துவிட முடிகிறது

**தமிழ் நாட்டில் புலிகளுக்கும், ஈழக்கோரிக்கைக்கும் ஆதரவு இருப்பதாக நீங்கள் கருதுகின்றீர்களா?**

அங்கு ஒரு பரந்தளவிலான ஆதரவு இருக்கிறது. அங்கே ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டால், இது வெளியே தெரியும்.

**அப்படியானால் அங்குள்ள கட்சியான தி.மு.க., பா.ம.க. போன்றவற்றால் இது ஒரு தேர்தல் பிரச்சாரமாக மேற்கொள்ளப்படாதது ஏன்?**

ஏன் என்றால் இது அங்கே ஒரு போதும் தேர்தல் பிரச்சினையாக இருந்ததில்லை. தமிழ் நாட்டு தேர்தலுக்கான பிரச்சினையாக வேறு பல பிரச்சினைகள் அங்கு இருக்கின்றன.

**உங்கள் தொடர்ந்த நடவடிக்கைகள் என்ன?**

தமிழ் பிரச்சினை தொடர்பான மாநில அளவிலான மாநாடுகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். இலங்கைத் தமிழர் பிரச்சினையை மனித உரிமைப் பிரச்சினையாக தேசிய நிகழ்ச்சி நிரலில் சேர்க்க நாம் விரும்புகிறோம். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனோக்கா: நீதி நிலைக்குமா?

இனோக்கா கால்லகேயின் வழக்கு சுமார் 29 தடவைகள் விசாரணைக்குட் படுத்தப்பட்டபின், 1997.12.22 அன்று தான் உயர் நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்தன அவர்களினால் கமல் அத்தரஆரச்சி குற்றவாளியென தீர்ப்பு வழங்கப்பட்டது.



1993 ஓகஸ்ட் 25ம் திகதி, 16 வயது மாணவியான இனோக்கா கால்ல கேயை கடத்திச் சென்றமை, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியமை போன்ற இரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட கமல் அத்தர ஆரச்சிக்கு எதிராக சம்பவம் நடைபெற்ற சுமார் நான்காண்டுகளுக்குப் பின் உயர் நீதிமன்றத்தினால் பத்தாண்டுகள் சிறைத்தண்டனையும், ரூ. 10 லட்சம் தண்டனைப்பணமும் தீர்ப்பாக விதிக்கப்பட்டது.

பிரபல திரைப்பட நாடக, நடிகர் என்ற சமூக செல்வாக்கைக் கொண்டிருக்கும் கமல் அத்தர ஆரச்சியின் மீது சுமத்தப் பட்ட இக்குற்றச்சாட்டுக்கள் இந்நபரின் அந்தஸ்து பிரபுலம் என்பவற்றால் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பி விட்டிருந்தது. எனினும், பலராலும் மறுதலிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப் படாது, மறக்கடிக்கப்படக்கூடிய இப் பாலியல் வல்லுறவுச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அம் மாணவிக்கு ஆதரவளித்துத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது சிங்கள வாரப் பத்திரிகையான ராவய.

கமலை பாதுகாக்கவென உயர் வகுப்புக் கும்பலொன்றும், இனோக் காவிற்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவென ராவயபத்திரிகை மற்றும் சில பெண்கள் அணிகளும் முனைந்தன.

இந்த வகையில் கமல் அத்தர ஆரச்சியில் தவறு இல்லையென நியாயம் கற்பிப்போராக திரைப் படத்துறையைச் சேர்ந்தோரும், அவர் களுக்கு துணைபோன சட்டத்துறை யைச் சேர்ந்த சிலரும் விளங்கினர்.

1993 ஓகஸ்ட் 25ம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தின் இரண்டு நாட்க ளுக்குப்பின்னர் சரியாக 93 ஓகஸ்ட் 27, வெலிகட பொலிசாரினால் தொடுக்கப்பட்ட வழக்கில் போதிய சாட்சிகள் இல்லையெனக் கூறப்பட்டு, 94.12.14 அன்று கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட்டான சம்பா புத்தி பாலவினால் கமல் விடுதலை செய்யப் பட்டார். எனினும், மாஜிஸ்திரேட்டின் தீர்ப்புடன் தொடர்புடைய சில நடவடிக்கைகள் ஐயத்தை ஏற்படுத்தின. இவ்விடயங்களை ராவய பத்திரிகை ஆராய்ந்து உறுதிப்படுத்தியது. அது மட்டுமன்றி, கமல் மாஜிஸ்திரேட்டி னால் விடுதலை செய்யப்பட்டபின் 'கமலின் வழக்கில் சந்தேகத்துக்கிட மான நிகழ்வுகள்' என்ற தலைப் பிலும்', 'சினிமா கலைஞர்களுக்கு சிறுமிகளை பாலியல் வல்லுறவு புரிய சட்டம் அனுமதிப்பத்திரம் வழங்கி யுள்ளது' என்ற தலைப்பிலும் இரு கட்டுரைகளை ராவய வெளியிட்டி ருந்தது.

இம்மாஜிஸ்திரேட்டான சம்பா புத்திபால, பேராசிரியர் சரத்சந்திர அவர்களின் பல நாடகங்களில் பின்னணிப்பாடகராகவும், நடிகரா கவும் விளங்கியவர். இதனால் திரை உலகத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்புகளை ஊகித்தறிய முடியும். அத்துடன் இவர் கமலின் வழக்கை பெரும் ஆர்வத்துடன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். பாலியல் வல்லுறவுச் சம்பவத்திற்குப்பின் மறைந்திருந்த கமல் சரணடைந்த பின்னர் அவரைப் பிணையில் வெளியில் விட நடவடிக்கைகளை எடுத்தார். வழக்கு விசாரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், அவர் திரைப்பட தயாரிப்பாளரான பிரீத்திராஜ் வீரரத்னவுடன் பலமணி நேரங்கள் கதையாடலுக் குட்பட்டிருந்தார் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

பிரீத்திராஜ் வீரரத்ன, திரைப்படத் தயாரிப்பாளர், கமலை முதன் முதல் தமது திரைப்படத்திலேயே அறிமுகப் படுத்தினார் என்பதும் இங்கு குறிப் பிடப்பட வேண்டியது. இந் நடவடிக் கைகளினால் ஏற்பட்ட ஐயங்களை அடுத்தும் மேன் முறையீட்டை அடுத்தும் 95.07.26 மீண்டும் உயர் நீதிமன்றத்தினால் கமலுக்கு அழைப் பாணை விடுக்கப்பட்டு, தற்போது வரை வழக்கு நீடித்தது எனலாம்.

மறுபுறம் திரையுலகத்தைச் சேர்ந் தோரும் அரசியல்வாதிகளும் கமலுக்கு ஆதரவான நிலையையே கொண்டிருந்தனர் என்பதும் முக்கிய மானது. வழக்கு இடம்பெற்ற தறுவாயில் ஜனாதிபதியின் தொடர்பு சாதன ஆலோசகராக விளங்கிய சனத்குணதிலக கமலின் நடவடிக் கைக்கு நியாயம் கற்பிக்கவும், அவரை குற்றமற்றவர் என நிரூபிக்கவும் பெரும் முயற்சி எடுத்தார் என ராவய தெரிவித்திருந்தது. அத்துடன் ஐ.தே.க. பா.உ.மர்வின் சில்வா, வசந்தி சத்துராணி, ஜெக்சன் அந்தனி, ரவீந்திர ரன்தெனிய, அனோஜா வீரசிங்க, ஜயந்த சந்திரசிறி போன்றோரும் இவ்விடயத்தில் பெரும் பங்களிப்பு செய்திருந்தனர். தமது பிரபலத் தன்மையையும் அந்தஸ்தையும் பயன்படுத்தி நீதிமன்ற தீர்ப்பை சாதக்மாகப் பெற்றுக் கொள்ள முயன்றனர். குற்றவாளியென இவர்களால் கூறப்பட்ட இனோக்கா கால்லகேயை மிரட்டவும், பயமுறுத்த வும் இந்த பிரபலத்தலைகள் முயன் றுள்ளன. சிறந்த உதாரணம் 'அறிவு வாய்ந்த பழமையான நடிகையான' அயிராங்கனி சேரசிங்க, தொலைக் காட்சிப் பேட்டியொன்றின்போது, 'இந்தப் பெண்ணை பலாத்காரப் படுத்தும் தேவை கமலுக்கு இருந்தி ருக்காது' என்றார். இது கமல் என்ற பிரபல நடிகர் அழைத்தால் எத்த னையோ பெண்கள் வருவார்கள் என்பதையே சுட்டுகின்றது. இதன்படி, ஷிராணி திலகவர்தனவின் தீர்ப்பு இவர்களை மீண்டும் ஜனாதிபதியிடம் கமலுக்கு சிறப்பு மன்னிப்பு வழங்குமாறு கோரி மகஜர் அனுப்ப



தூண்டியுள்ளது.

எவ்வாறெனினும், கமல் அத்தர ஆரச்சி இனோக்கா கால்லகே என்ற தனிநபர்களை விடுத்து சில சட்ட விடயங்களை சுட்டிக்காட்டும் சிறப்பு மிக்க வழக்காக இது அமைந்த தெனவும் கூறவேண்டும்.

→ 20

## தலித்தியக் குறிப்புகள்



## அனுராதபுரத்தில்...

நான் வசித்துவரும் தோட்டத்துக்கு எங்களது குடும்பம் வந்து இருபது வருடங்கள் கடந்து விட்டது. அப்போது எனக்கு வயது நான்கு இருக்கும். சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் விளைவாக தேடி, வேட்டையாடிப் பிடித்து பலாத்காரமாக இந்தியாவுக்கு கப்பலேற்றி விரட்டப்பட்ட குடும்பம் கடைசியாக குடியிருந்த வீட்டில் இன்று நாங்கள் தங்கியிருக்கிறோம்.

பெரும்பான்மையாக தமிழர்களும், சிங்களவர்களும் எண்ணிக்கையில் சமமாக வாழ்ந்து வரும் இத்தோட்டத்தில் ஏற்கெனவே அங்கு எங்கள் உறவினர்களான, நகரசுத்தித் தொழில் பார்த்து வந்த குடும்பங்களின் ஆறு வீடுகளும் இருந்தன.

அன்று தொடக்கம் இன்று வரை ஏனைய சமூகத்தவர் இந்த ஏழு "சக்கிலியக்" குடும்பங்களை நடாத்தி வந்த விதம் வாழ்நாளில் மறக்கக் கூடிய ஒன்றல்ல.

---------------

தோட்டத்தில் இருக்கும் ஒரே ஒரு பிராமண வீட்டில், (கோயிலில் உடைக்கப்-பட்ட) தேங்காய்கள் குறைந்த விலையில் விற்கப்பட்டு வந்தன. அங்கு நான் தேங்காய் வாங்குவது வழக்கம். ஒரு முறை நான் தேங்காய் வாங்க போன போது மூடியிருந்த வீட்டை "அக்கா... அக்கா..." என தட்டிக் குரல்கொடுத்த போது, அந்த பிராமணர் வேகமாக வந்து கதவைத் திறந்து படீரென்று எனது கன்னத்தில் அறைந்து "எவளடா உனக்கு அக்கா...? உனக்கு நாங்கள் எப்ப சொந்தமானமடா நாயே...?" எனக் கேட்டது இன்னமும் நினைவை விட்டுப் போகவில்லை.

சிறு வயது தொடக்கம் என்னுடன் நெருங்கி விளையாடித் திரிந்த வேற்றுச் சமூகங்களைச் சேர்ந்த நண்பர்கள் பலர் தங்களின் வீட்டு முக்கிய நிகழ்ச்சிகளுக்கு (ஏன் தங்களின் திருமணங்களுக்குக் கூட) ஒரு போதும் எங்கள் ஏழு குடும்பங்களைக் கூப்பிடுவதே இல்லை. அவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு அழைப்பு விடுப்பதற்கென ஒவ்வொரு வீடாக வந்து, எங்கள் வீடுகளைத் தாண்டி அடுத்த வீடுகளுக்கு அழைப்பு வைத்து விட்டுச் செல்வர். அவர்களுக்கு உள்ள பிரச்சினை குறிப்பிட்ட நிகழ்ச்சியில் சக்கிலியர் கலந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் அவர்களின் தராதரம் குறைந்துவிடும், "சக்கிலியருடன் உமக்கு என்ன உறவு?" என்ற கேள்வி எவராலும் எழுப்பப்பட்டு விடக் கூடாது, தங்களின் கௌரவத்தை எவரும் சந்தேகித்து விடக்கூடாது என்பதே.

இச்சமூகத்தாருடன் கலப்பு எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்வர். தங்களின் அடுத்த பரம்பரையினருக்கு எச்சரிக்கை செய்வதற்காக சிறு வயதினருக்கே சக்கிலியர்கள் என்போர் இழிந்தவர் என்ற கருத்தியலை புகுத்தி விடுவர். அச்சமூகத்து சிறு வயதினரும் கூட இச் சமூகத்தினரை மிகவும் தரக்குறைவாக நடத்துவதற்கு பழகிக் கொள்கின்றனர். காலப் போக்கில் இவையே விரிசலையும் அந்நியத்தையும், பகைமையையும் ஏற்படுத்தி விடுகிறது.

தமக்கு அடிபணிந்து, தம்மை மீறாமல், தமக்கு விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க வைக்கிறது. இதனை மீறினால், சண்டை வரச் செய்யும். இவ்வாறான சண்டைகளின் போது நியாயம் கதைக்கவோ, எதிர்த்து நிற்கவோ முற்பட்டால் அதற்குப் பதிலடியாக தாக்குதல் நடக்கும். இதன்போது ஏனைய சமூகத்தினர் எல்லோரும் கூட்டுச் சேர்ந்து கொள்வர். இவ்வாறான கூட்டுச் சேரலுக்குப் பின்னால் உயர் சாதியினர் தங்களின் சாதிய மேலாதிக்க இருப்பை பாதுகாப்பது முக்கிய காரணம் வகிக்கின்றது. "அவரவரை அந்தந்த இடத்தில் வைத்துக் கொள்ள" தொடர்ச்சியாக பழிவாங்க முயல்வர். இதன் மூலம் தொடர்ச்சியான "அடிபணிவை" அவர்கள் மீது தக்க வைப்பதே அதன் இலக்காக இருக்கும்.

இதன் காரணமாக எங்களது வீட்டாரை நான் பல முறை "அவர்களே வம்புக்கிழுத்தாலும் எதிர்த்துப் போக வேண்டாம். என்ன சொல்லட்டும் என்ன செய்யட்டும் பொறுத்துக் கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. தற்காலிகமாகவேனும் நாங்கள் பொறுத்துப் போகத்தான் வேண்டும்." எனக் கூறியிருக்கிறேன். நான் கூட அப்பாவித் தனமாகவும், ஒரு கோழையாகவும் நடக்கப் பழகிக் கொண்டிருக்கிறேன். அப்படியிருந்தும் கூட சில நேரங்களில் உதை பட்டிருக்கிறேன்.

இது வெறுமனே ஒரு சம்பவமாக நினையாதீர்கள். இது போக்காகவே பல உள்ளதை நான் அறிவேன். பலர் தோட்டங்களைச் சார்ந்து (சிறு சிறு ஒழுங்கைகள்- சேரிகள்) வாழ்பவர்கள் இந்த அவலங்களை அனுபவித்து வருகிறார்கள்.

இந்த அடிபணிந்து போகும் பழக்கம் தான் காலப் போக்கில் தாழ்வுச் சிக்கலை கருத்தியலாக வளர்த்துவிடச் செய்வதில் முக்கிய பாத்திரமாற்றுகின்றன என்றால் அது மிகையிராது.

கடந்த இரு மாதங்களுக்கு முன் அனுராதபுரத்தில் உள்ள அருந்ததியர்கள் வாழும் குடியிருப்பில் ஒரு கலவரம் நடந்து முடிந்திருந்தது. அந்தக் குடியிருப்பைச் சேர்ந்தவர்களின் குடிப்பழக்கத்தை கைவிடச் செய்வதற்காக அங்குள்ள இளைஞர்கள் சிலர் சேர்ந்து குடியை நிறுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். பல முதியவர்களை குடிக்கப் போக விடாமல் தடை செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு கசிப்பு விற்று வந்த வேற்றுச் சமூகத்தைச் சேர்ந்த சண்டியர்கள் இவர்களைத் தாக்கி பலாத்காரமாக குடிக்கச் செய்துள்ளனர். இதை எதிர்த்துப் போன இளைஞர்கள் மீது கடுமையாகத் தாக்கியுள்ளனர். திருப்பித் தாக்கியதில் சண்டியர்களில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து மேலும் சில சிங்கள சமூகத்தைச் சேர்ந்த சண்டியர்களை கூட்டிக் கொண்டு வந்து அக்குடிசைகளை நொறுக்கி, வீடுகளைச் சூறையாடி பலரைத் தாக்கி விட்டுச் சென்றுள்ளனர். பொலிஸார் கூட இது விடயத்தில் சண்டியர்களின் பக்கமே இருந்தார்கள். இச்சம்பவம் எங்கும் பேசப்படவில்லை. எந்தப் பத்திரிகைகளிலும் வெளிவரவுமில்லை. அக்குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காடுகளுக்குச் சென்று ஒழிந்தனர். சிலர் கொழும்பில் இருந்த அவர்களின் உறவினர்களின் வீடுகளுக்குப் போய் தங்கினர். நவ சமசமாஜக் கட்சியின் அனுராதபுர கிளையினர் இவ்விடயத்தில் அந்த ஒடுக்கப்பட்ட மக்களின் தரப்பில் இருந்து பொலிஸாருடன் முரண்பட்டதாக பின்னர் அறியக்கிடைத்தது.

அந்தப் பகுதியில் இன்னமும் கொந்தளிப்புத் தணியவில்லை. தங்களை எதிர்க்க இம்முறை இடமளித்து விட்டால் இது தொடர்ந்து நீடிக்கும் என்ற பயம் சண்டியர்களுக்கு உண்டு. குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் அவரவர் வீடுகளுக்கு திரும்பி விட்ட போதும் சண்டியர்களின் பழிவாங்கலில் இருந்து அவர்களால் தப்ப முடிவதில்லை.

இந்த வகையான சம்பவங்கள் தமிழ்ச் சமூகத்தினால் நடந்தால், அது ஒரு பக்க இடியாகத் தான் இருக்கும். ஆனால் இது போன்ற சம்பவங்கள் சிங்களச் சமூகத்தால் நடத்தப்படும் போது அதுவே இரட்டிப்பாகி விடுகிறது. சாதியே வர்க்கமாகவும் இருப்பதால் இது மேலும் அதிகளவாகி விடுகிறது. இங்கு வெறும் சாதி மட்டும் தொழிற் படுவதில்லை, கூடவே தமிழர்கள் என்பதும் தொழிற்படுகிறது.

அடக்குமுறையின் அளவு இங்கு வெவ்வேறானதாக இருந்தாலும் பண்பில் பெரிய மாற்றமில்லை.

-அருந்ததியன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுப்பப்படாத கேள்விகளும், அளிக்கப்படாத பதில்களும்

ஓர் அரசியல் பத்திக்கான முதற்குறிப்பு-

ஸிறாஜ் மஷ்ஹூர்

ஓர் அரசியற் பத்தியைத் (Politicl Coloumn) தொடக்குவதற்கு முன்னால் இந்த முன்குறிப்பை எழுதுவது மிகப் பொருத்தமாக அமையும். வரலாறு நெடுக மூன்றாந்தர சமூகமாகவே கணிக்கப் பட்டுவந்த இலங்கை முஸ்லிம்களின் அரசியல் குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு நாம் வர வேண்டியிருக்கிறது. இந்த நாட்டின் அரை நூற்றாண்டுச் சுதந்திரம் மீதப் படுத்தி வைத்ததெல்லம் அற்ப சலுகைகளும் பேரினவாத அரசாங்கங்களின் திட்டமிட்ட பழிவாங்கல்களுமே.

போர்க்கலாசாரமும், நம்மை நோக்கிக் கொண்டு வந்த மனிதப் படுகொலைகளையும் இனச்சுத்திகரிப்பையும் உடைமை இழப்புகளையும் நாம் மௌனமாக ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. நமது இழப்புகள் மிகப்பெரும் தேவைகளை வேண்டி நின்றன. சிங்களப்பேரினவாத அரசியலுக்குத் துதிபாடும் பாரம்பரிய அரசியல் சிந்தனைப்போக்கிலிருந்து விடுபட்டு, நமக்கென்று தனித்துவமான அரசியல் வழிமுறை பற்றிச் சிந்திப்பதற்குத் தூண்டப்பட்டோம். ஸ்ரீ.ல.சு.க., ஐ.தே.க போன்ற பேரினவாதக் கட்சிகளுக்கு மாற்றாக ஒரு தனிக்கட்சியின் தேவையை உணர ஏறத்தாழ நான்கு தசாப்தங்கள் நமக்குத் தேவைப்பட்டன. தமிழ்ப் போராளிக்குழுக்களின் ஆயுத அரசியல் நம்மை நோக்கித் திருப்பப்பட்ட பின்னரே அது குறித்து மிகத்தீவிரமாகச் சிந்திக்கத் தலைப்பட்டோம்.

80களின் பிற்பகுதியிலும் 90களின் முற்பகுதியிலும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களினதும் மனிதாபிமானமற்ற வன்முறைகளுக்கு பலியான ஒரு சூழ்நிலையில் நமக்கு ஓர் ஆதார பலம் தேவையாயிருந்தது. நமது குரலை ஓங்கி ஒலிக்க, நமது துயரங்களை உலகறியச் செய்ய சந்தேகத்திற்குள்ளான நமது சமூக இருப்பில் ஒரு ஸ்திரத் தன்மையைக்கொண்டு வர நம்மிலிருந்து ஒரு சக்தி தவிர்க்க முடியாமல் எழுச்சியுற வேண்டுமென்று நாம் விரும்பினோம். நமது எதிர்காலம் குறித்து ஒரு நீண்ட கேள்விக்குறி அப்போது நம் முன்னே எழுப்பப்பட்டிருந்தது.

இந்த சந்தர்ப்பத்திலேயே முஸ்லிம்களின் அரசியலில் ஒரு துருவ நட்சத்திரம் என்று நம்பப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தீவிர அரசியலினுள் (Active Serious Politics) நுழைந்தது. இன்று வரைக்கும் வடகிழக்கில் ஒரு பலமான அரசியல் சக்தியாக அது வேரூன்றியமைக்கு மிகச் சரியான சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த அதனது அரசியல் பிரவேசமே மிகப்பிரதானமான காரணமாகும். அது ஒரு புதிய இலக்கை நோக்கி நம்மை நகர்த்தும் என்று நாம் நம்பினோம். ஆயினும், அதுவும் ஆரம்பித்த இடத்திற்கே மீண்டும் நம்மைக்கொண்டு வந்து சேர்த்தது.

முஸ்லிம் காங்கிரசினுடைய வருகை கூட நமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாய் இல்லை. மாறாக, சந்தர்ப்பவாத அரசியலுக்குப் பலியாகும் பாரம்பரியப்போக்கின் ஒரு நவீன வடிவமாகவே அதன்து யதார்த்தமும் அமைந்திருந்தது.

''எந்தச்சமூகத்திற்கும் இருக்க யோக்கியதை இல்லாத தலைமைத்துவம்'' என்று பிரபல பத்திரிகையாளர் லூஷன் ராஜகருணாநாயக்க கிண்டலடித்த தலைமைத்துவங்கள் தான் நமது தலைமைத்துவ வெற்றிடத்தை நிரப்ப முனைந்தன. நமது அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்வோர் உண்மையான மக்கள் பிரதிநிதிகளாகவன்றி, தங்களது சொந்த நலன்களையே பிரதிநிதித்துவம் செய்ய முனைந்தனர். இதன்மூலம் ''பிரதிநிதித்துவ ஜனநாயகம்'' (Representative Democracy) என்பதற்கு ஒரு புதிய அர்த்தத்தை அவர்கள் வழங்கியுள்ளார்கள்,

விரும்பியோ, விரும்பாமலோ நமது புவியியற் பரம்பல் சிதறியதாகவே அமைந்து விட்டது. பேரினவாத அரசாங்கங்கள் அதனைக் கூட திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் ''மிகவும் சிறுபான்மையாக'' (Absolute Minority) மாற்ற முனைகின்றன. இதற்குப் பலியாகி, ஒரேயொரு முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டமான அம்பாறையையும் நாம் இழந்து விட்டோம். கொழும்பு போன்ற பெருநகர்ப் பகுதிகளில் முஸ்லிம்கள் பாரம்பரியமாகச் செறிந்து வாழுமிடங்கள் தொடர்மாடிக் குடியிருப்புகளை (Flats) நிர்மாணிப்பதன் மூலம் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. நமது விகிதாசாரத்திற்குச் சமமான தொழில் வாய்ப்புகளோ, காணிப் பகிர்வுகளோ, ஏனைய நியாயமான உரிமைகளோ நமக்கு வழங்கப்படவில்லை. கேவலம், சில பிரதேசங்களில் பகிரங்கமாக பாங்கு சொல்லித் தொழும் உரிமை கூட இந்த இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசில் நமக்கு மறுக்கப்படுகிறது. இவ்வாறு சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு ஒரு நீண்ட பட்டியலே உள்ளது.

இது இவ்வாறிருக்க மறுபுறத்தில் ''போராடாத முஸ்லிம்களுக்கு ஒரு மாகாண சபையா?'' என்று தொண்டமான் போன்ற அரசியல் சந்தர்ப்பவாதிகள் கேட்கத் தலைப்படுகின்றனர். ''இலங்கையில் சிங்களத் தேசிய இனம், தமிழ்த் தேசிய இனம் எனும் இரு தேசிய இனங்களே உள்ளன. முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் வெவ்வேறு தேசிய இனங்களல்ல. அவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் உட்பிரிவினரே'' என்று கருதும் தமிழ்ப் புத்திஜீவிகளும்(?) இருக்கவே செய்கின்றனர். முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியுடனான பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை ''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்றே குறிப்பிட்டனர். ''முஸ்லிம்கள் ஒரு தேசிய இனமா?'' என்று பல்வேறு புகலிட சஞ்சிகைகளில் நடைபெற்ற கருத்தாடல்களுக்கும் தமிழர்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை இருக்கிறதென்று நளின் டி சில்வா போன்ற சிங்கள இனவாதிகள் கேள்வி எழுப்புவதற்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லை. முஸ்லிம்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்காத, அவர்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் இத்தமிழ்ப் பேரினவாதம் ஒரு நவீன சிந்தனையல்ல. அது பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தமிழ்த் தலைமைகளிலிருந்து மேற்கிளம்பியதொன்றே.





தற்போதைக்கு தமிழ் ஆயுதக் குழுக்களின் குறிப்பாக விடுதலைப் புலிகளின் முஸ்லிம் விரோதப் போக்கிலும் படுகொலைக் கலாசாரத்திலும் பெரிய மாறுதல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. 1990ல் வட மாகாண முஸ்லிம்களை வெளியேற்றிய அதே புலிகள்தான் 1995ல் அரபாத் நகர முஸ்லிம்கள் வெளியேறவும் காரணமாய் அமைந்தனர். மனிதப்படு கொலைகளுக்கு பழகிப்போன அவர்களது துப்பாக்கிகள் தங்களை நோக்கி எந்நேரமும் திருப்பப்படலாம் என்ற நியாயமான அச்சம் முஸ்லிம்களிடம் உள்ளது.

பாரம்பரிய இனவாதச் சிந்தனையின் படிவுகளில் இருந்து பலர் இன்னமும் விடுபடவில்லை. தொடர்ச்சியாக ஒடுக்கப்பட்டு வந்த ஒரு சிறுபான்மை மக்கள், ஒடுக்கு முறைக்குட்பட்ட இன்னொரு சிறுபான்மை மக்கள் மீது அதே வகையான ஒடுக்குமுறையைத் திணிக்க முற்பட்ட பாரிய துரோகத்தை வரலாறு அவ்வளவு எளிதாக மறந்து விடாது.

இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமூகத்தின் அடிப்படைப் பலவீனங்களையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். எந்தவொரு சமூகத்திலும் சமூக மாற்றத்தின் தொடக்கப்புள்ளிகள் அதனது புத்திஜீவிகளே. படிப்படியாகவே அது எழுச்சியாக விருத்தியுறும். எப்போது ஒரு சமூகத்தின் புத்திஜீவிகள் சிந்தனைச் சோம்பேறிகளாகவும், செயற்கோழைகளாகவும் மாறுகின்றனரோ, அப்போதே அந்த சமூகம் வீழ்ச்சியுறத் தொடங்கிவிடும். முஸ்லிம் சமூகத்தின் மிகப்பெரும் பலவீனம் அதனது புத்திஜீவிகளின் மௌனமே. ''முஸ்லிம் சமூகத்தில் புத்திஜீவிகளே இல்லை'' என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் முன்பொரு தடவை குறிப்பிட்டதைக் கண்டிக்கும் அதே வேளை அவ்வாறு சொல்வதற்கான சூழ்நிலையையும் நமது புத்திஜீவிகளே (?) ஏற்படுத்தினர் என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். ஒரு மக்கள் திரளின் தலைவிதியை நிர்ணயிப்பதிலும் எதிர்காலத்தை முன்னெடுத்துச் செல்வதிலும் அம்மக்களே, அதனது புத்திஜீவிகளே பின்வாங்குவது போன்ற வெட்கக்கேடு வரலாற்றிலேயே இருக்க முடியாது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் ஒரு வகையான ஒதுங்கற் போக்கைக் கைக்கொள்வதாக முஸ்லிம் சமூகத்தினர் மீது ஒரு பலமான குற்றச்சாட்டும் உள்ளது. எவ்வளவுதான் கசப்பான உண்மையாக இருந்தபோதிலும் இதை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

வரலாற்றின் பிரிசந்தியில் நாம் நிற்கிறோம். ஓர் அரை நூற்றாண்டுச் சுதந்திரத்தின் எச்சங்களால் விரக்தியுற்று, பாராளுமன்ற அரசியல் மீது நம்பிக்கையிழந்த ஒரு புதிய தலைமுறை நம்மிடையே தோற்றம் பெற்று வருகிறது. வ்ன்முறையை நோக்கி நமது வளரும் தலைமுறை திசைதிருப்பப்படாமலிருக்க, புதிய சமூகவியற் பெறுமானங்களை, அடைவுகளை நோக்கி அவர்களை நகர்த்த வேண்டியுள்ளது.

அரசியல் வியாபாரிகளும், தேர்தற்காலக் கூத்தாடிகளும் ஒரு வகையான மலினத்துவ அரசியற் போக்கையே நம்மீது திணிக்கிறார்கள். எவ்வளவுதான் குறைபாடுகளைக் கொண்டிருப்பினும், தற்போது நிலவும் சமூக ஒழுங்கினுள் இருக்கும் அரசியற் சக்திகளுள் ஏதேனுமொன்றைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை எனும் ஒரு மாயை நம் மக்கள் மனதில் குடிகொண்டுள்ளது. இருக்கின்ற சமூக ஒழுங்கிற்கு வெளியே ஒரு மாற்று ஒழுங்கைத் தேடுவது வெறும் இலட்சியவாத ஊறல் என்று அவர்களுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது.

வெறும் அரசியலமைப்பும் தடித்த சட்டப்புத்தகங்களும் எப்போதும் நம்மைக் காப்பாற்றப்போவதில்லை. சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட ''சிறுபான்மைக் காப்பீடும்'' செனற் சபையும் உள்ள போதே தனிச்சிங்களச்சட்டமும் மற்றும் அநேக சிறுபான்மை மக்களுக்கெதிரான சட்டமூலங்களும் நிறைவேற்றப்பட்டன.

மேடைப்பேச்சுக்களுக்கும் தேர்தற்கால போதைகளுக்கும் மயங்குகின்ற தவறைத் தொடர்ந்தும் இழைத்துக் கொண்டுதான் இருப்பதா என்பதில் நாம் ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும். வரலாற்றின் இறுகிய திரைகளுக்குப்பின்னால் படிந்திருக்கும் போலிகளின் அழுக்குகளை நாம் அகற்றியாக வேண்டும்.

முஸ்லிம்களது பிரச்சினையும் தேசிய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியே என்பது அடிக்கடி மறக்கப்படுகிறது. முஸ்லிம்களைப் பாதிக்கும் விடயங்களில் கூட அவர்கள் கலந்தாலோசிக்கப் படுவதில்லை. இலங்கையின் ஒவ்வொரு அங்குலப் பரப்பும் தங்களுக்கே சொந்தமெனக் கூறும் சிங்களப்பேரினவாதிகளுக்கும், வடகிழக்கின் ஒவ்வொரு அங்குலப் பரப்பும் தமிழர்களது தாயகமே என்று கருதும் தமிழ்ப் பேரினவாதிகளுக்கும் இடையில் நாம் நசுங்குண்டு போகிறோம்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தலைமைத்துவங்களுக்கு வெளியே சிந்திப்பதற்குக் கூடத் தயாரில்லாத நமது மக்களின் மனோநிலையில் மாற்றம் கொண்டு வரவேண்டும். குறுகிய பிரதேசவாத எல்லைகளுக்கு அப்பால் நின்று நாம் சிந்தித்தாக வேண்டும்.

எனவே, யதார்த்த சூழலோடு இயைவதும், நமக்குப் பொருத்தமானதுமான ஓர் அரசியல் சிந்தனையை நாம் தேர்ந்தெடுத்தாக வேண்டும். மிகக் கவனமான படிமுறை ஆய்வுகளினூடாக அதைச் செய்தல் இயலும். இப்போதைக்கு நாம் விடுகிற ஒவ்வொரு தவறும் நமது அடுத்த தலைமுறையையே மிகக் கடுமையாகப் பாதிக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலை அம்புலன்ஸ் தாக்குதல்: ஒட்டுக் கேட்டு உறுதிப்படுத்துகிறார்களாம் இராணுவத்தினர்!

மாவட்ட வைத்தியசாலை கந்தளாயிலிருந்து நோயாளரை திருகோணமலை தள வைத்தியசாலைக்கு கொண்டுவந்து திரும்பிய 42ஸ்ரீ9734 இலக்க அம்புலன்ஸ் வண்டி 1997.06.06 ந்திகதி கண்டிவீதியில் உள்ள 5ம்கட்டையில் சோபியா குடிநீர் அலுவலகத்திற்கு அண்மையில் மாலை 8. 45மணியளவில் பயங்கர துவக்குச்சூடுகளுக்கு உட்படுத்தப்பட்டு சுப்பிரமணியம் மகேந்திரன் (36) உயிர் இழந்தார். சிசிரகுமார (சாரதி), குடும்பநல உத்தியோகத்தர் மயிரிழையில் உயிர் தப்பினர். இராணுவ தரப்பினர் விடுதலைப் புலிகளே இதனைச்செய்ததாகக் கூறி, இனிவரும் காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறமாட்டாது மீண்டும் அம்புலன்ஸ் சேவைகளை செய்யுமாறு கோரினர். பொது மக்களின் நலன் கருதி மனித அபிமானத்திற்காகவும், சாரதிகளும், சிற்றூழியர்களும் தங்களது சேவைகளை ஆரம்பித்தனர். மண்ணில் புதையுண்ட உயிர் சூடு ஆறமுன் மற்றுமொரு நிகழ்வு குச்சவெளி பிரதேசத்தில் 1997.12.14ம் திகதி இரவு 8.50மணியளவில் நடைபெற்றுள்ளது. 42ஸ்ரீ2228 இலக்க அம்புலன்ஸ் வண்டியில் சென்ற எம். சௌந்தராஜா (சாரதி) வயது 30 ஒரு குழந்தையின் தந்தை, வேலாயுதம் டில்லிராஜா 33, சுத்திகரிப்பு தொழிலாளர் 6ம்கட்டை, சாம்பல் தீவைச் சேர்ந்தவர். ஐந்து குழந்தைகளுக்கு தந்தை. குச்சவெளியில் உள்ள இரணசேனைக்கு அண்மையில் துவக்கு சூடுகளுக்கு உட்படுத்தப்பட்டு அகால மரணம் எய்தியுள்ளனர்.

நிலாவெளி மத்தியமருந்தகத்துக்கு இரவு 8.10 மணியளவில் குச்சவெளி இராணுவ முகாமிலிருந்து தொலைபேசி மூலம் நோயாளர் ஒருவரை திருகோணமலை தளவைத்தியசாலைக்கு குச்சவெளியில் இருந்து அனுப்புவதற்கு அம்புலன்ஸ் வண்டியை அனுப்புமாறு கோரப்பட்டது. வைத்திய அதிகாரி தகவல் கிடைத்ததும் அம்புலன்ஸ் வண்டியை குச்சவெளிக்கு அனுப்பிவைத்தார். பல இராணுவ முகாம்களைக் கடந்து சென்ற அம்புலன்ஸ் வண்டி இரணிகேணியில். துவக்குச்சூடுகளுக்கு ஆளாகவேண்டியிருந்தது. சாரதி அந்த இடத்தில் இறந்ததாகவும், டில்லி ராஜா இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றபின் இறந்ததாகவும் மரணவிசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் நடந்த சிலநேரங்களில் இராணுவத்தினர் அவ்விடத்திற்குச் சென்றுள்ளனர். 1997.12.16ந் திகதி சுகாதார திணைக்கள ஊழியர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டனர்.

இவ்விரு சம்பவங்களின் பின்னர் அம்புலன்ஸ் வண்டிச் சாரதிகள் சங்கம் மாலை ஐந்து மணிக்கு பின்னர் திருமலை நகரத்திற்கு வெளியே. அல்லது வெளியில் இருந்து உள்ளுக்கு வாகனங்களை செலுத்துவதில்லை என முடிவு செய்துள்ளனர்.

திருமலை மாவட்டத்தின் பின் தங்கிய பகுதிகளான மூதூர், கட்டைபறிச்சான், கிளிவெட்டி, சேருவில, புல்மோட்டை, குச்சவெளி, கிண்ணியா, இறக்கக்கண்டி போன்ற இடங்களிலிருந்து அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளை ஏற்றி வருவது அம்புலன்ஸ் வண்டிகளே! அதிலும் குறிப்பாக கர்ப்பிணித்தாய்மார்கள் பிரசவ நிலைமைகளால் சடுதியாக ஆபத்தான நிலைமைகளை அடைந்து விடுகின்றனர்.

அம்புலன்ஸ் வண்டி சேவை என்பது மிகவும் அத்தியவசியமான சேவை என்பதை எவரும் உணர்வார்கள். ஆனால் தமது உயிருக்கு உத்தரவாதமில்லாதபோது எந்த அம்புலன்ஸ் வண்டி சாரதிதான் அதைச் செய்ய முன்வரமுடியும்.

குச்சவெளியில் இருந்து வந்த அம்புலன்சு வண்டிதாக்கப்பட்ட மறுநாள் திருமலை மாவட்ட தள வைத்திய சாலை ஊழியர்கள் அனைவரும் ஒருமித்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அம்புலன்சு வண்டிகள் தாக்கப்படுவதை எதிர்த்து அவர்கள் செய்த வேலை நிறுத்தமானது ''புலிகளுக்கு எதிராக தளவைத்தியசாலை ஊழியர்கள் வேலை நிறுத்தம்'' என்றவாறாக இலங்கை அரச வானொலியில் பிரச்சாரம் செய்யப்பட்டது. இது தொடர்பாக தகவல் தெரிவித்த வைத்திய மனை வட்டாரங்கள் இவ் வேலைநிறுத்தம் பெயர் குறிப்பிட்டு ஒரு பகுதியினருக்கு எதிராக செய்யப்படவில்லை என்பதும், இச் சம்பவங்களை யார் புரிந்திருந்தாலும், அது தவறானது என்பதுடன் இவ்வாறான சம்பவங்கள் தொடரக்கூடாது என்பதுமே தமது வேலை நிறுத்தத்தின் நோக்கங்களாகும் எனக்குறிப்பட்டன.

வேலைநிறுத்தம் நடைபெற்ற அன்று அவ் வேலை நிறுத்தம் தொடர்பாக இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுக்கும், சுகாதாரத்திணைக்கள அதிகாரிகள், வைத்தியமனை ஊழியர்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றதாகவும், அறியப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் குச்சவெளிச் சம்பவம் தொடர்பாக உரையாடப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகள் ''குச்சவெளிச் சம்பவத்தில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளதாக உங்களில் யாரேனுக்கும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதா என வினவியுள்ளனர். (ஆம் என்று சொல்ல யாருக்கு தைரியம் இருக்கும்?) யார் இதனைச் செய்தனர் என்ற ஊகத்தை விடவும் யார் செய்தாலும் இச்சம்பவங்கள் தவறானவை என்பதே தமது நிலைப்பாடு என சிறப்பு வைத்திய நிபுணர் ஒருவர் கூறியுள்ளார். இராணுவத்தினர் இச்சம்பவங்களை புலிகளே செய்தனர் என்றும் குறிப்பாக குச்சவெளி சம்பவத்தின் பின்னர் புலிகளின் தொடர்புகருவிச் செய்தியை தாம் இடைமறித்து பதிவு செய்ததாக ஒரு ஒலிப்பதிவு நாடாவையும் போட்டுக்காட்டியுள்ளனர். அவ்வொலிப்பதிவுச் செய்தி அங்கு சமூகமளித்திருந்தவர்களைத் திருப்திபடுத்தவில்லையென்பதாகவும் அதுவே இராணுவத்தினரின் மீதான சந்தேகத்தை அதிகரித்துவிட்டது என்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகிறது.

மேலும் இராணுவ அதிகாரிகள் புலிகள் ஒரு காட்டுமிராண்டித்தனமான இயக்கத்தினர் எனவும், அவர்கள் நோயாளிகள், கர்ப்பிணிகள், அம்புலன்சு வண்டி என்ற பேதம் இல்லாமல் யாரையும் சுடுவார்கள் எனக்கூறியுள்ளனர். இப்பிரச்சாரத்தை இராணுவம் மறுநாள் பெயரிடப்படாத சுவரொட்டிகள் மூலம் தொடர்ந்திருந்தது.

''அப்பாவி ஏழை பிள்ளை களுக்கு யார் பொறுப்பு'' சொந்தச் சகோதரர்களைக்கொன்று ஒரு ஈழமா? என்றவாறாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. பரவலாக இராணுவத்தினரே இவ்விருசம்பவங்களையும் செய்திருக்கலாம் எனக்கருதப்படுகிறது. திருமலை மாவட்டத்தினை பதட்டத்தினுள் வைத்திருப்பதன் மூலம் பொலிசார் நன்மை அடைய முயல்கின்றனர் எனவும் மேலும் பொலிசாருக்கெதிரான மனித உரிமை மீறல்கள், குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து வருகையில் புலிகளை கொடூரமானவர்களாகவும் தமது சொந்த மக்களை தாக்குபவர்களாகவும் காட்டுவதற்கு இத்தாக்குதல்களை இராணுவத்தினரே திட்டமிட்டு செய்திருக்கக்கூடும் எனக்கருதுகின்றனர். மறுபுறத்தில் இராணுவத்தினரே தவறுதலாக அம்புலன்ஸ் வண்டிகளை சுட்டபின்னர் தமது தவறை மறைக்க முயல்வதாகவும், ஒரு சாரர் கருதுகின்றனர். இன்னுமொரு சாரர் புலிகளின் உறுப்பினர்களும் இவற்றை செயதிருக்க சாத்தியமுண்டு எனக்கருதுகின்றனர். ஏனெனில், இராணுவத்தினரும் இதே வகையான அம்புலன்சு வண்டிகளையே பயன்படுத்தி வருகின்றனர் என்பதால் ஆகும்.

இது தொடர்பாக சர்வதேச செஞ் சிலுவைச் சங்கத்தினூடாக விடுதலைப்புலிகளை தொடர்பு கொண்டு அம்புலன்சு வண்டிகளின் பயணத்திற்கான பாதுகாப்பு உறுதி மொழி ஒன்றை பெற வட - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு முயற்சி செய்ய உள்ளதாகவும் அறியக்கிடைக்கிறது.

**சிற்பி, வாசன், அபிரா**

# மூதூர்: தங்க மரமும் கருங்கல்லும்!

மூதூரில் புத்தாண்டுதினம் ஒரு பொலிஸ்காரர் கொல்லப்பட்ட பதற்றத்துடன் நிறை வெய்தியிருக்கிறது. கொல்லப்பட்ட பொலிஸ்காரர் பொலிஸ் நிலையத்துக்கு அருகிலேயே குடியிருப்பவர். மூதூரின் அதி பாதுகாப்பு வலயத்துள் இரவு எட்டரை மணியளவில் பிரவேசித்து நமது கச்சிதமாக முடித்துவிட்டு விடுதலைப்புலிகள் (?) பாதுகாப்பாக வெளியேறியிருப்பது பாதுகாப்புத் துறையின் பலவீனத்தைத் தெளிவாக்கியுள்ளது.

இச் சம்பவம் நடந்து இரண்டாம் நாள் அதாவது 3ந்திகதி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரண்டு இராணுவ வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதோடு அவர்கள் வசமிருந்த ஆயுதங்களும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இந்தச் சம்பவத்தில் பொது மகன் ஒருவரும் உயிரிழந்துள்ளார். மாலை ஆறரை மணியளவில் மல்லிகைத்தீவுச் சந்திக்குச் சற்று அப்பால் இது நடைபெற்றிருக்கிறது.

இந்தசம்பவங்களுக்கு முன்னரும், பின்னரும் பரபரப்பாகப் பேசப்படுகிற விஷயம் முஸலிம் காங்கிரசுக்கு மூதூரில் ஏற்பட்ட சிக்கலான நிலைமைதான். கடந்த மாத இறுதி வாரத்தில் மூதூருக்கு விஜயம் செய்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் கசப்பான உணர்வுகளுடன் திரும்ப வேண்டியேற்பட்டது.

செயலாளர் ரவூப் ஹக்கிம், துணைத் தலைவர் மருதூர்க்கனி மாவட்ட பா.உ ஏ. நஜிப் ஆகியோர் வருகை தருவதை எதிர்த்து மூதூர் நகருக்குள் எதிர்ப்புச் சுலோகங்கள் நிரப்பிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. கடந்த தேர்தலில் தூணாக நின்று உழைத்த இளைஞர்களே இந்த நடவடிக்கையில் இறங்கியிருந்தார்கள்.

கூட்டம் முதலில் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. ஆனால் இளைஞர்கள் அதை அனுமதிக்கவில்லை. வேறு வழியின்றி உடனடியாக அல்- ஹிலால் மகாவித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டது. மூதூர்ப் பகுதிக்குறைபாடுகள் எதுவும் முஸ்லிம் காங்கிரசால் கவனத்தில் கொள்ளப்படவில்லையென்ற கோபம் காரணமாக இளைஞர்களின் கேள்விகள் மிகவும் சூடாக தலைமைக் கெதிராக வீசப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

சில கேள்விகள் தலைவர்களுக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. ஒரு பிரதான கேள்வியின் போது ரவூப் ஹக்கீம் 'அப்படித்தலைவர் கூறியிருக்கமாட்டார். உண்மையிருந்தால் எனது செயலாளர் பதவியைக் கூட உதறத்தயங்கமாட்டேன்' என்று கூறவேண்டியதாயிற்று.

இன்னொரு சிக்கலான கேள்வியை மறுக்கமுயன்றபோது வேறொரு வாலிபர் 'எழுந்து மறுக்காதீர்கள். நானும் உடனிருந்தேன். தலைவர் அவ்வாறு கூறியதை குர் ஆன் மேல் சத்தியம் செய்யவும் தயாராக இருக்கின்றேன்' என்று உறுதியாகத் தெரிவிந்ததும். தலைவர்கள் நிலைமை சிக்கலாகி விட்டது. ஏனெனில் அந்த வாலிபர் கடந்த தேர்தலில் அஷ்ரப்புக்கு தங்கத்தாலான மரம் அணிவித்துத் தன் தீவிரத்தை வெளிப்படுத்தியவர்.

இந்தச் சந்தடியில் மேடையை அண்மித்து இருவர் கைகலப்பில் ஈடுபடத்தொடங்கி விட்டார்கள். ஒருவர் முஸ்லிம் காங்கிரசின் பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.எம். மகரூப் என்பவர். மற்றையவர் கருங்கல் உடைக்கும் கொந்தராத்துக்காரரான சுபைர் என்பவர். அறுபதினாயிரம் ரூபாவை மோசடிசெய்தவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் பிரதேச சபை உறுப்பினர்கள் இருவர் என்று சுபைர் பெரிய சத்தமாகக் கூறப்போனதாலேயே இந்தச்சண்டை. தன்னிடம் கருங்கல் வாங்கி விட்டுக் காசு தராமல் ஏமாற்றி விட்டார்கள் என்பதே இவரது குற்றச்சாட்டு.

அதிருப்தியாளர்களான இளைஞர்களின் அபிப்பிராயப்படி வேலை வாய்ப்பு, பிரதேச அபிவிருத்தி என்பவற்றில் மூதூர் முற்றாக முஸ்லிம் காங்கிரசால் புறக்கணிக்கப்பட்டுள்ளமையே பெரிய குறைபாடாகும். அத்துடன் மூதூர் திருக்கோணமலைப் படகுச்சேவை மோசமாகச் சீர்கேடடைந்துள்ளது. அதனைக் கவனிப்பார் யாருமில்லை என்பதுமே குற்றச்சாட்டு.

எதிர்ப்புச் சுவரொட்டிகளில் காணப்பட்ட சுவையான வாசகங்களில் மாதிரிக்கு இரண்டு.

*'அன்று: வடக்கு கிழக்கு முஸ்லிம்கள்*
*நேற்று: கிழக்கு முஸ்லிம்கள்*
*இன்று: தென்கிழக்கு முஸ்லிம்கள்*
*நாளை... கல்முனை முஸ்லிம்களா?''*

*''குர் ஆன், ஹதீஸைக் கூறி இனிமேலும் முஸ்லிம்களை ஏமாற்றாதே.''*

**விவேகி**

# திருமலை நகரசபை: நகரசபை என்றால் என்ன சும்மாவா?

கடந்த 5ந்திகதி திருகோணமலை நகரசபை உறுப்பினர்களின் கூட்டத்திலிருந்து சி. நந்தகுமார் என்ற உறுப்பினர் பொலிசார் மூலம் வெளியேற்றப்பட்டிருக்கிறார்.

இதற்குக்காரணம் முந்தைய கூட்டறிக்கையை ஏற்பதா இல்லையா என்பதில் ஏற்பட்ட இழுபறியே!

நகரசபைத் தலைவர் பெ. சூரியமூர்த்தியின் வாதப்படி கடந்த 26 வெள்ளியன்று இடம்பெற்ற கூட்டத்தில் 29ம் திகதியான திங்கட்கிழமை கூட்டம் நடைபெறும் என்று அறிவித்துள்ளார். அடுத்து வரும் வேலை நாளில் கூட்டப்படும் கூட்டத்துக்கு எழுத்துமூல அறிவித்தல் தேவையில்லை. எனவே 29ந்திகதி கூட்டறிக்கை முறையானதே எனப்படுகிறது.

நந்தகுமார் சார்பான உறுப்பினரொருவரோ எழுத்து மூலம் கூட்டப்படாத கூட்டம் செல்லாது. நாங்கள் வேறொர் அலுவலாக நகரசபைக்கு வந்தபோதே கூட்டம் நடைபெறுவது அறிந்து அதனைப் பகிஷ்கரித்தோம், என்றார். எனவே செல்லுபடியற்ற கூட்டத்தின் கூட்டறிக்கை எவ்வாறு செல்லுபடியாகும்? எனவேதான் நந்தகுமார் கூட்டறிக்கையை எதிர்த்தார் என்கிறார்.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

நகரசபைத் தலைவருக்கும் அவரது அணியைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்களுக்குமிடையே எப்போதும் கசப்புணர்வே நிலவி வருகிறது. எதிரணி உறுப்பினர்களில் ஒருவர் தவிர ஏனையோர் தலைவர்களுடன் நிற்கிறார்கள். இந்த உட்சச்சரவு காரணமாக டிசம்பரில் மூன்று தடவை எதிர்வரும் ஆண்டுக்கான வரவுசெல வுத்திட்டம் தோல்வியடைய நேரிட்டது. நான்காவது தடவை இடம்பெற்ற கூட்டத்தில் எதிரணியினர் மட்டுமே இருந்ததால் வரவு செலவு திட்டம் ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது இந்த நான்காவது கூட்டத்தின் அறிக்கையே பிரச்சினைகளுக்கு காரணமானது.

பகிஷ்கரித்த ஆளும் அணி உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக்கூட்டத்தில் பேசிவிட்டே பகிஷ்கரித்திருக்கிறார்கள். எனவே அவர்களது பேச்சுக்களடங்கிய கூட்டறிக்கை எவ்வாறு செல்லுபடியற்றதாக முடியும் என்பது தலைவரின் கேள்வி. என்னை வெளியில் போடாமல் வாக்கெடுப்புக்கு விட்டிருந்தால் உண்மை தெரியும் எனப் பதிலடியாகக் கூறுகிறார் நந்தகுமார்.

நகரசபை என்றால் சும்மாவா என்று பொது மக்கள் வியப்படைவதைத் தவிர வேறு வழியென்ன? இல்லாவிட்டால் வடபகுதி உள்ளூராட்சித்தேர்தலுக்காக இத்தனை முட்டி மோதல்கள் நடக்குமா?


எல்லாம் ஜனநாயகத்தின் பெருமைகளே!

**விவேகி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






சொ.ரொ. கொன்ஸ்ரன்ரைன் —

## இறுதிப் பகுதி.

### ஜனநாயகமும் தேசியவாதமும்

ஜனநாயகம் , அடிப்படையில் ஒரு கருத்தாக்க வடிவம் தான். மக்களால் மக்களுக்காக நடாத்தப்படும் மக்களின் ஆட்சி என்ற கருத்தின் வடிவமாகத்தான் ஜனநாயகம் நோக்கப்படுகிறது.

ஜனநாயகம் மிகவும் சிறந்தது. சமத்துவத்தை வழங்குவது, உன்னதமானது. கால தேச எல்லை கடந்து சகல பிரச்சினைகளுக்குமான ஒரு பூரணமான தீர்வின் வடிவமாக கருதப்படுகிறது. ஆகவே, ஜனநாயக கருத்தாக்கம் அடிப்படையில் பிரதான கருத்தாடல் (Meta Narrative) வகையைச் சார்ந்தது.

செயற்பாட்டு தளத்தில் எந்த மக்களின் எந்த மக்களால் எந்த மக்களுக்காக நடாத்தப்படும் ஆட்சி என்பதைப் பொறுத்து ஜனநாயக வடிவம் வேறுபடுகிறது. எம்மைப் பொறுத்த வரையில் ஜனநாயகமானது பெரும்பான்மையினரில் செல்வாக்குள்ள ஒரு சிறு குழுவினரால் சிறுபான்மையினர் மீது நடாத்தப்படும் ஒரு ஆட்சி.

ஜனநாயகம் ஒரு மோசமான அரசியலமைப்பு. அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான ஒரே காரணம் ஏனையவை அதை விட மோசமானவை என வின்சன்ட் சேர்ச்சில் கூறினார். இது ஜனநாயகத்தைப் பற்றிய அடிப்படையான உண்மை. செயற்பாட்டுதளத்தில் அது ஒரு கருவியாக எளிதில் பயன்படுத்தப்படக் கூடியது.

ஜனநாயகத்தின் ஆரம்ப வடிவம் மிகச் சிறிய நகர அரசுகளிலேயே காணப்பட்டது. அங்கு மக்கள் அரசுடன் நேரடித்தொடர்புடையவர்களாக நேரடி ஈடுபாட்டுடன் பரிவர்த்தனை செய்யக் கூடியதாக இருந்தது. இதனால் ஆரம்ப ஜனநாயகம் உண்மையான மக்களின் அரசாக இருந்தது. மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்களாக ஒரு சுமூக உறவுடைய சமூகத்தை சேர்ந்தவர்களாக இருந்தனர்.

இன்றோ ஜனநாயகம் இந்த எல்லை கடந்து பாரிய நாடுகளுக்குரியதாகக் கருதப்படுகிறது. இன்று இந்நாடுகளின் பல்வேறு சமூகங்கள் சுமூகமாக வாழ்கின்றன என்ற கற்பனையில் இந்த அமைப்பு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இன்று இந்த சுமூக நிலை என்பது பெரும்பான்மையினரில் செல்வாக்குடைய ஒரு குழுவினரின் குரலாகத்தான் எமக்குக் கேட்கிறது. எல்லா ஜனநாயகங்களிலும் தமது குரலை பிரதிபலிக்க வலிமை இல்லாத மக்கள் இருக்கவே செய்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் இணைத்து ஒரு சுமூகமான அரசமைப்பை ஜனநாயகம் வழங்குகிறது என்ற கருத்துக் கூட ஒரு கற்பனை வடிவம் தான்.

உலகில் நிலவும் ஜனநாயக அரசுகளை நாம் இரண்டு பெரும் பிரிவுகளில் நோக்கலாம். ஒன்று சுதேசிய ஜனநாயகம் (Indigenous Democracy). மற்றையது தருவிக்கப்பட்ட ஜனநாயகம் (Imported Democracy).

சுதேசிய ஜனநாயகமானது ஒரு நாட்டின் கலாசார பின்புலத்தில் சுமூக அரசியல் நடவடிக்கைகளின் பரிணாம வளர்ச்சியினடியாக உருவான ஜனநாயகம். தருவிக்கப்பட்ட ஜனநாயகமானது பிறிதொரு கலாசார சூழலில் உருவாகி கலாசார வேற்றுமைகள் நிறைந்த பிறிதொரு நாட்டிற்குள் அறிமுகப் படுத்தப்படுவது.

தருவிக்கப்பட்ட ஜனநாயகம் வழங்கும் நாடுகளில் ஜனநாயக நடத்தைக்கான ஊடாட்ட பண்பு அநேக சந்தர்ப்பங்களில் காணப்படுவதில்லை. இதனால் இதன் செயற்பாட்டு வடிவம் பன்முகத்தன்மையுடையதாக மாறுகிறது. ஆக சுதேசிய ஜனநாயகமும் தருவிக்கப்பட்ட ஜனநாயகமும் இரண்டு வேறுபட்ட செயற்பாட்டு வடிவங்களாகவே அமைகின்றன.

காலனித்துவ மேலாதிக்கர்கள் (Colonizers) காலனித்துவ நாடுகளில் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்தி விட்டுச் செல்லும் பொழுது ஆட்சி அதிகாரத்தை மேலைத்தேய ஊடாட்ட பண்பில் கொடுத்து விட்டுச் சென்றனர்.

இந்த பின் காலனித்துவ ஆதிக்கரிடம் ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு வேண்டிய ஜனநாயக மனப்பாங்கு இருக்கவில்லை. இதனால் ஜனநாயகத்தை இவர்கள் அதிகாரத்திற்கான ஒரு கருவியாக கைக் கொள்ள இசைவாக்கமடைந்து கொண்டார்கள்.

இந்த வகையில் இந்த பின்காலனித்துவ ஆதிக்கர்கள் ஒரு புதிய காலனித்துவத்தைத்தான் உருவாக்கினார்கள். இந்த புதிய காலனித்துவத்தில் பல இனங்கள் பிறத்தியாராக, ஓரங்கட்டப்பட்ட மக்களாக நடாத்தப்படத் தொடங்கினர். இது தவிர்க்க முடியாதபடி தேசியவாத போராட்டங்களுக்கு இட்டுச் சென்றது. இது தருவிக்கப்பட்ட ஜனநாயகம் உருவாக்கியுள்ள ஒரு பிரச்சினை.

தேசியவாதம் ஜனநாயகத்திற்கு எதிரானது எனப் பலரால் கருதப்படுகிறது. ஜனநாயகம் தனிமனித சுதந்திரத்தை வலியுறுத்தும் வடிவமாகவும், தேசியவாதம் ஒரு இனத்தின் தனித்துவத்தை வலியுறுத்துவதாகவும், இதனால் தேசியவாதம் ஜனநாயக உரிமைகளுக்கு எதிரானது எனவும் கருதப்படுகிறது.

தனிமனித சுதந்திரத்தை பூரணமாக வழங்கக்கூடிய ஜனநாயகம் (Liberal Democracy) ஒரு பூரணத்துவ (Ideal) கருத்தே அன்றி நடைமுறை சாத்தியப்பாடான ஒரு வடிவமல்ல. அதுவும் நாம் காணும் தருவிக்கப்பட்ட ஜனநாயகத்தில் அந்நிலை ஒரு பகற் கனவு மட்டும் தான்.

ஆக தேசியவாதம் ஜனநாயகத்திற்கு எதிரானது என்பதைவிட தருவிக்கப்பட்ட ஜனநாயகம் தேசியவாதத்தை தோற்றுவிப்பதுடன் அதற்கு எதிரானதாகவும் அமைகிறது.

தேசியவாதமானது இயற்கையாக மனிதரிடையே எழும் ஒன்றிணைந்து செயற்படும் உத்வேகத்தின் அடிப்படைகளில் இருந்து எழுவது. ஜனநாயகமோ (குறிப்பாக தருவிக்கப்பட்ட ஜனநாயகம்) செயற்கையாக ஒன்றிணைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தை ஒரு அமைப்பாக பேண முயலும் ஒரு வடிவம்.

### பல்தேசியங்களும் பல்கலாசாரங்களும்

ஜனநாயகமானது வேறுபட்ட சமூகங்களை இணைக்கும் பொழுது தவிர்க்க முடியாதபடி சில சமூகங்கள் சிறுபான்மையாகிறது. இதனால் பல்லின/ பல்கலாசார நாடுகளில் ஜனநாயகமானது சில சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது.

இந்த சிக்கலின் தன்மை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. அத்துடன் இப் பிரச்சினைகளை அணுகுவதற்கு நாடுகள் எடுக்கும் அணுகுமுறைகளும் வேறுபட்டவை.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இந்தப்பல்லின பிரச்சினை வந்தேறுகுடிகளினால் ஏற்படுகிறது. இந்த வந்தேறு குடிகள் அந்த மண்ணின் நீண்ட கால வாழ்வியல் வரலாற்றினைக் கொண்டிராதவை. ஆகவே இவை தேசிய இனம் என்ற நிலையில் அல்லாது கலாசாரா வேறுபாட்டினையும் கலாசார தனித்துவத்தையும் வலியுறுத்துவதன் மூலமே தமது அடையாளத்தை (Identity) பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியதாயுள்ளது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையே பல்கலாசார நிலையை (Multicultural) உருவாக்குகிறது.

இந்த நாடுகளின் கலாசாரமும் அவர்களது ஜனநாயக மனப்பாங்கும் தக்க விட்டுக் கொடுப்புகளுடன் பல் இனங்களையும் உள்வாங்கக்கூடிய விதத்தில் செயற்படுகிறது. இதனாலேயே அந்நாடுகளில் பங்குபற்றல் ஜனநாயகம் (Participatory Democracy) போன்ற கருத்தாக்கங்கள் வலிமையாக உள்ளன.

ஆனால் தருவிக்கப்பட்ட ஜனநாயகம் வழங்கும் 3ம் உலக நாடுகளில் நிலவும் பல்இன சூழ்நிலை முற்றிலும் வித்தியாசமானது. இங்கே இருக்கும் பல்வேறு இனங்களும் அந்த மண்ணில் நீண்டகால வாழ்வியல் வரலாற்றினைக் கொண்டுள்ளன. ஆகவே இவை பல் கலாசாரங்களாக மட்டுமன்றி பல்தேசியங்கள் என்ற தன்னடையாளத்துடன் செயற்படக்கூடியன. அத்துடன் இந்நாடுகளின் கலாசார பின்புலமானது ஜனநாயகத்திற்குத் தேவையான நெகிழ்தன்மை அற்றவை.

ஆக பல்கலாசார நிலையும், பல்தேசியங்களது நிலையும் முற்றிலும் வேறானவை. இது ஜனநாயக அரசுகள் எதிர்நோக்கும் இரண்டு வேறுபட்ட பிரச்சினை வடிவங்கள்.

### பின்தேசியவாதம் (Post Nationalism)

தேசியவாதம் இலக்கியத் தளத்தில் தேசிய கருத்தாடலாக (National Narration), எட்வாட் செய்த் (Edward Said), ஹோமி பாபா (Homi Baba) போன்றவர்களால் அண்மைக் காலத்தில் மிக உற்சாகமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன் முக்கிய வெளிப்பாடாக பாபாவின் (Nation and Narration) என்ற நூலைக் குறிப்பிடலாம்.

இது மேற்குலக கருத்தாடல் தளத்தில் பல வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியுள்ளது. அண்மையில் இந்தத் தேசிய கருத்தாடலுக்கு எதிராகப் பின்தேசிய கருத்தாடல் (Post National Narration) இலக்கியத் தளத்திலே முன் வைக்கப்பட்டு வருகிறது. (Modern Fiction Studies - Spring 1997 - National and Post National Narration).

பல்தேசிய முதலாளித்துவ வளர்ச்சி காரணமாக நாட்டு எல்லை கடந்த தலைநகர்கள் (Trans capital) உருவாகியுள்ளன. இதனால் தேசங்கள் எல்லை கடந்த பொருளாதாரத்தில் தங்கி நிற்கவேண்டிய ஒரு தேவை ஏற்படுகிறது.

இதனால் தேசங்கள் முக்கியத்துவம் குறைந்து அவை வெறும் நிர்வாக அலகுகளாக மாறிவிடும் நிலைமை உருவாகியுள்ளது என டொனால்ட் பீஸ் (Donald E.Pease) கருத்துத் தெரிவித்துள்ளார். இவரது கருத்துப்படி பின்தேசிய கருத்தாடல் என்பது தேசியம் என்ற கருத்தாக்கம் காலாவதியான பின்னர் ஏற்பட்டுள்ள ஒரு நிலையாகும்.

தேசிய கருத்தாடலானது எப்படியான உலகில் அத்தேசம் வாழ்கிறது என்பதைக் காணமறுத்து எப்படியான உலகில் தாம் வாழ நினைக்கிறார்கள் என்ற கற்பனையினால் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ள வடிவம் என பீஸ் கருதுகிறார்.

இந்தச் சிந்தனை அடிப்படையில் மேலைத்துவ ஊடாட்ட பண்பில் எழுந்த கருத்தாடல்களுக்குரிய வாதத்திற்கான ஒரு பிரதிவாதமாக மட்டுமே நாம் பார்க்க முடிகிறது.

இந்தச் சிந்தனை ஒரு வகையில் காலனித்துவ தேசியவாதத்திற்கு எதிரானதாகக் கருதப்படலாம். காலனித்துவ தேசியவாதம் பொருட்களின் எதிர்ப்பு போன்ற பல அம்சங்களை வெளிக்காட்டியது. காந்திய பொருளாதாரக் கொள்கை இதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

அத்துடன் இந்தப் பிரதிவாதமானது பொருளாதாரத்தை மட்டும் அடிப்படையாகக்கொண்டு எழுவது. ஆனால் இன்று நாம் 3ம் உலக நாடுகளில் எதிர்கொள்ளும் தேசியவாதமோ நமது வாழ்வினடியாக எழுவது. செயற்பாட்டுத் தளத்திற்குரியது. இந்தத் தேசியவாதத்திற்கு பின்நவீன வாழ்வியல் சூழலில் ஒரு வடிவத்தைக் காண்பது தான் எமது பிரச்சினை.

பின்நவீனம் தரும் புதிய வெளிச்சத்தில் மையவாதப் போக்குகள் வலுவிழந்து போயுள்ளன. மையவாதப்போக்குகளின் ஒருவித அராஜகப் பண்பினால் விழையும் உயர்ந்தோர்/ தாழ்ந்தோர், அறிவாளி/ அறிவிலி, நல்லவன்/கெட்டவன் இப்படியான அடுக்கமைவுகளைத் தகர்க்கிறது பின்நவீனம். இதன் வழி, வழிகாட்டுபவன்/ வழிகாட்டப்படுபவன் என்ற ஒரு பாகுபாடும் தகர்கிறது. இது பின்நவீனத்துவம் தரும் ஒரு முக்கிய திருப்பம்.

இந்தத் தரிசன விரிவுடன் தேசியவாதமானது ஒரு மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும். இதனால் ஏற்படும் ஒரு புதிய தேசியவாதத்தை நாம் பின்தேசியவாதம் (Post Nationalism) என வழங்கலாம். இங்கு பயன்படுத்தப்படும் 'பின்' வழக்கமாக தேசியவாதத்திற்கு கொடுக்கப்படும் அர்த்தத்தை மீள் வாசிப்பிற்குள்ளாக்கி புதிய அர்த்தத்தைப் பெற்ற 'பின்' எனவும், 'பின் நவீன' காலத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

பின்நவீனத்துவம் பன்முகத்தன்மையினை அங்கீகரிக்கிறது. ஆனால் தேசியவாதமானது ஒரு மொத்தத்துவ கோட்பாடாகவே (Totalizing theory) கருதப்படுகிறது. உண்மையில் தேசியவாதம் பன்முகப்பட்டது. காரணம் ஒரு தேசிய இனத்திற்குள் பல்வேறு ஊடாட்ட பண்புகள் காணப்படுகிறது. இவை ஒன்றுக்கொன்று தொடர்புற்றிருப்பினும் அடிப்படையில் பன்முகத்தன்மையது.

இதனால் பின்தேசியவாதமானது ஒரு தேசியத்தின் பன்முகத்தன்மையினை அங்கீகரித்து அதனை முதன்மைப்படுத்த வேண்டும். அடிப்படையில் அதை பன்முகப்பட்ட மக்கட் குழுமங்களின் கூட்டாக கருத வேண்டும். காலனித்துவ தேசியவாதத்தில் இந்த பன்முகத்தன்மை மறைக்கப்பட்டு தேசியவாதம் ஒரு மொத்தத்துவக் கோட்பாட்டு வடிவாக முன்னெடுக்கப்பட்டமை அதன் பிற்காலப் பிணக்குகளுக்குக் காரணமாய் அமைந்து நிற்பதை நாம் காணலாம்.

ஒரு தேசியத்தினுள் பிரதேச ரீதியாகவோ மத ரீதியாகவோ வேறு எந்த ரீதியாகவோ தனித்துவத்திற்கான அலகுகளைக் கொண்ட பண்பாட்டு உபகுழுமங்கள் இருப்பது கருத்திலெடுக்கப்பட வேண்டியது அவசியம். இந்த உப குழுமங்களுக்கிடையில் உளவியற்தளத்தில், கருத்தியல் தளத்தில் அல்லது செயற்பாட்டுத் தளத்தில் நிலவக்கூடிய பாரபட்சங்கள்/ ஏற்றத்தாழ்வுகள் இனம் காணப்பட வேண்டும். இந்த ஏற்றத்தாழ்வுகளை விரிவடையச் செய்யக் கூடிய தேசியவாத மிகைப்படுத்தற் பண்புகள் எவை என ஆராய்ந்து அவற்றைத் தவிர்க்க வேண்டும். இதன் மூலம் தேசியவா தத்தினுள் நிலவும் மேலாதிக்கப் பண்புகளைக் களைய வேண்டும். அத்துடன் ஆண்மேலாதிக்கம், சாதியமைப்பு இவற்றைச் சரியான முறையில் இனம் கண்டு அவற்றை அகற்றி சமத்துவத்தைப் பேணக்கூடிய ஒரு ஜனநாயக முறையினை வகுப்பதுதான் பின் தேசியவாதத்தின் பூரண வடிவத்தைத் தரும். இதனால் பின் தேசியவாதமானது மீண்டும் காலனித்துவ தேசியவாதமாகவோ, பின் கம்யூனிச தேசியவாதமாகவோ அல்லது வேறு ஒரு அடக்கு முறை தேசியவாதமாகவோ மாறாது உண்மையான தளை நீக்க தேசியவாதமாக (Emancipatory Nationalism) அமையும்.

ஒரு தேசியத்தினுள் காணப்படும் பண்பாட்டு உபகுழுமங்கள் தம்முள்ளும் ஊடாட்ட பண்புகளில் வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் இவையே நடைமுறையில் சாத்தியப்படக் கூடிய எளிமையான சுமூகமான சமூகவடிவாக அமையும். இந்த பண்பாட்டு உபகுழுமங்களின் அரசியல் அவற்றிற்குத் தனித்துவமானதாக இருக்க வேண்டும். இந்த நிலை ஏறக்குறைய நகர அரசுகள் போன்ற சிறிய ஜனநாயக அலகுகளிலேயே நிறைவுபெறும்.

இப்படியான பண்பாட்டு உபகுழுமங்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்பட்டு அவற்றிற்கான சிறு ஜனநாயக அலகுகள் உருவாக்கப்பட்டு இவற்றின் கூட்டினால் உருவாகும் ஒரு கூட்டு ஜனநாயக (Collective Democracy) வடிவில் தான் தேசியவாதமும் ஜனநாயகமும் சுமூகமான உறவுடன் நிலைக்க முடியும்.

ஆக, நாம் எதை எதிர்க்கிறோம் என்பதின் தெளிவு நிகழ்காலத்திற்கு எவ்வளவு முக்கியமானதோ அதே போல நாம் எதை உருவாக்கப் போகிறோம் என்பது எதிர்காலத்திற்கு முக்கியமானது.

எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்கமான பார்வை இல்லாதவர்கள் நிகழ்காலத்தை நிர்ணயிக்கும் பொழுது எதிர்காலம் சூனியமாவது தவிர்க்கப்படமுடியாதது.

---

உங்கள் வருகை
உங்கள் பார்வை
உங்கள் கேள்வி
உங்கள் முறைப்பு
என்னை உசுப்பிற்று.

உசும்பலின் உத்வேகத்தில்
சுழல் காற்றின் மையத்திற்குப்போனேன்
சுழிக் கடலின் வேரைப் பற்றினேன்
மணற்பருக்கைகளை மலையாக்கினேன்
பூச்சிகளைக் கசக்கினேன்
துப்பாக்கிகளை உடைத்தேன்
சூனியம் சூனியம் சூனியம்

விட்டு விட்டு உசுப்பல்
வெறுமையான தேடலுடன் நான்.

சசி.மகரிஷி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மன்னார், முசலி, நானாட்டான் ப

# புலிகளின் பூரண சம்ம

வடக்கு முஸ்லிம்கள் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு ஏழாண்டுகளையும் கடந்துவிட்டது. இவர்களின் இந்த ஏழாண்டு அகதி வாழ்க்கை சொல்லொணாத் துயர்கள் நிறைந்தது. காலம் தன்பாட்டில் நகர இவர்களின் வாழ்வு குறைவசதிகள் கொண்ட முகாம்களுக்குள்ளும், நிவாரணங்களுக்குள்ளும் சுருங்கிக் கிடக்கிறது. தாய்மண்ணிலிருந்து சில நூறு மைல்களுக்கப்பாலான ஒரு சமூகத்தின் அவல வாழ்க்கையின் துயரை யாரும் இலகுவில் உணர்ந்து கொள்ளலாம். ஒரு சமூகத்தின் தனித்துவம் அதன் இருப்பிலும் தங்கியிருக்கிறது. இவர்கள் அது பறிக்கப்பட்டு தனித்துவம் சிதறடிக்கப்பட்டவர்கள். உலகில் எந்தவொரு சமூகத்திற்கும் நிகழாத கதி இவர்களுக்கு நிகழ்ந்தது.

நெஞ்சமுழுத்தும் மறக்கவொண்ணா துயர் நினைவுகளோடு காலம் தள்ளும் இவர்களில் சிலரின் அகதிவாழ்வில் டிசம்பர் 15 மறக்கமுடியாத ஒரு நாளாகும். ஒரு சின்னத்தீவுக்குள் இருக்கும் தம் பிறந்தகத்தை ஏழாண்டுகளுக்குப்பின் பார்க்கிற/ தரிசிக்கிற சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்தது. மன்னார் மாவட்டத்தின் முசலி,நானாட்டான், மன்னார்தீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 147 பேர் தங்கள் வாழ்விடங்களைப் பார்த்து, மீள் குடியேறுவதற்கான சாத்தியப்பாடுகளை அறிந்து வந்துள்ளனர்.

***மீள் சென்று பார்ப்பதற்கான ஏற்பாடுகள் - சில பின்னணிகள்***

ஜயசிக்குறு நடவடிக்கையால் வடக்கின் பெரும்பகுதி தம்வசம் வந்துள்ளதாக அரச படைகள் கூறிவருகின்றன. அரசும் படைகளின் கூற்றை ஏற்று வெற்றியில் களி கொள்கின்றது. உண்மையில் ஜயசிக்குறு சில பாதைகளை, பிரதேசங்களை அரச படைகள் வசம் கொண்டு வந்துள்ளதுதான். எனினும் அரசு எண்ணிப்பிரச்சாரம் பண்ணுவது போலான நிலைமை மன்னாரை உதாரணம் வைத்து இல்லையென்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

மன்னார் பகுதியில் இராணுவத்தினரின் முன்னேற்றம் செட்டிக்குளமூடான மன்னார் பாதையை திறக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. புலிகளின் சில கட்டுப்பாட்டுப் பிரதேசங்களும், இராணுவம் வசம் வந்திருந்தது. இந்த நிலைமை அரசின் வெற்றிப் பிரச்சாரத்துக்கான சாதக நிலையை தோற்றுவித்தது. ஏற்கெனவே, தலைமன்னார்த் தீவுப்பிரதேசம் இராணுவத்தின் ஆளுகைக்குள் சிவில் நிர்வாகம் நடக்கின்ற பிரதேசமாக இருந்தது.

அரசினதும், இராணுவத்தினதும் மன்னார் பகுதியின் நடவடிக்கைகளின் அடுத்த கட்டமாகவே முஸ்லிம்களை மீள் குடியேற்றுவது தொடர்பான நடவடிக்கையும் அமைந்தது. மன்னார், இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதென்றால், முஸ்லிம்களை அவர்களது வாழிடங்களில் மீள் குடியேற்றலாம் தானே..! இதுதான் அரசு இராணுவத்திடம் தொடுத்த கேள்வி. இராணுவம் தன்வசமே மன்னார் இருக்கின்றது என்று பிரச்சாரப் படுத்தியபடியால் இக்கேள்விக்கு விடையளிக்கு முகமான நடவடிக்கைகளைத் தொடங்கியது.

முதலில், வவுனியாவில் ஓர் உயர்மட்ட கூட்டமொன்றை ஏற்பாடு செய்தது. இராணுவத் தலைமையதிகாரி உட்பட மன்னார், புத்தள அரசு அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர். அங்கு மன்னார் நிலைமைகள் முஸ்லிம்களின் மீள் குடியேற்ற சாதக, பாதக தன்மைகள் பற்றிக் கலந்துரையாடப் பட்டுள்ளது. இக்கூட்டத்தில் மன்னாரின் சிலபகுதிகளில் முஸ்லிம்கள் குடியேறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டதையடுத்து அகதிகளுடனான ஒரு கூட்டத்தை இராணுவம் ஏற்பாடு செய்தது.

இக்கூட்டம் மன்னார்ப் பிரதேச முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து செறிவாக வாழும் நுரைச்சோலையில் 1997 நவம் 29ல் இடம்பெற்றது. அனுராதபுரம் - புத்தளம் இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் பராக்கிரம பன்னிப்பிட்டிய ஒழுங்கு செய்திருந்தார். இக்கூட்டத்திற்கு மன்னார் அரச அதிபரின் பிரதிநிதியாக மாவட்டக்காணி ஆணையாளர் எட்வட் அவர்களும் வேறு பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், மக்களின் தற்போதைய பாதுகாப்பான நிலைமை, மன்னார்ப் பாதை திறப்பு ஆகியவற்றை முன்வைத்து மீள்குடியேற்றத்திற்கான சாதக, நிலைமைகள் மக்களுக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. எட்வர்ட்டும் வரக்கூடிய நிலைமைகள் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு முன்னதாக இராணுவம் புத்தளத்தில் வாழும் அகதிகள் தொடர்பான விபரங்களை புத்தள அரச அதிபரிடம் கோரியிருந்தது. அரச அதிபர் பிரதேச செயலாளர்களூடாக அகதிகள் விபரங்களைக்கொடுத்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி கூட்டத்தில், மன்னார் தீவுப்பகுதி, நானாட்டான் பிரதேசங்களில் முஸ்லிம்கள் மீள்குடியேறுவதற்கான உடனடிச் சூழல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், நவம்பர், டிசம்பருக்குரிய ரேஷன் மட்டுமே இவர்களுக்கு வழங்கப்படுமென புத்தளம் அரச அதிபராலும் கூறப்பட்டுள்ளது. மன்னார் தீவுப்பகுதியிலுள்ள தாராபுரம், எருக்கலம்பிட்டியைச்சேர்ந்த முஸ்லிம்களுள் அரைவாசிக்குமதிகமானோர் ஏற்கெனவே உத்தயோகபூர்வமற்ற முறையில் குடியேறியுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களுள் பெரும்பாலானோர் நிலைமைகளை தாங்களே சென்று நேரில் பார்த்துவர ஏற்பாடு செய்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். நானாட்டான், மன்னார்தீவு மக்களுட்பட, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக செறிந்து வாழ்ந்த முசலிப் பிரதேச முஸ்லிம்களும் இவ்வாறான ஓர் ஏற்பாட்டைச் செய்து தருமாறு கோரியுள்ளனர்.இதற்குச் சம்மதித்த இராணுவ இணைப்பதிகாரி டிசம்பர் 15ம்திகதி செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக்கூறி சென்றுள்ளார். அத்துடன் போக்குவரத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்குமாறு புத்தளம் புனர்வாழ்வுத் திட்டப்பணிப்பாளர் முயினுதீனிடம் கோரப்பட்டுள்ளது. மொத்தத்தில் இவர்கள் சென்று பார்த்து வருவதற்கான சகல ஏற்பாடுகளும் உயர்மட்ட அரசு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த ஏற்பாடுகளுக்கிடையியே டிசம்பர் 6ம்திகதி பொதுமக்களுடனான கலந்துரையாடல் ஒன்று நுரைச்சோலையில் இடம்பெற்றுள்ளது. இதில் மீள் குடியேற்றம் திட்டமிட்ட அடிப்படையில் எமது பல கோரிக்கைகளுடன் இடம்பெறவேண்டும் என்ற கருத்தொருமிப்பு நிலவியது. அத்துடன் செல்பவர்கள் தொடர்பாகவும் கதைக்கப்பட்டு, ஆட்களைப் பதிவு செய்து ஒழுங்கு படுத்தும் பணியை முசலிப்பிரதேச மக்கள் ஒன்றியம் எடுத்தது.

ஏழாண்டுகளுக்குப் பின் ஊர்பார்க்கும் சந்தர்ப்பம். எல்லோரும் விரும்பினாலும் ஏற்பாடுகளுக்கமைய பிரதேச கிராம ரீதியில் சில துடிப்பானவர்களின் அதிருப்திகளுக்கு மத்தியிலும் 147 பேர் தெரிவு செய்யப்பட்டனர். முசலிப்பிரதேசத்தவர்கள் 75 பேரும், நானாட்டான் பிரதேசத்தவர்கள் 45பேரும் மன்னார் தீவுப்பகுதியைச்சேர்ந்த 27 பேருமாக போவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சட்டத்தரணி ஜபருல்லாஹ் தலைமையில் இக்குழு செல்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஏற்பாடுகள் அனைத்தும் அரசின் இராணுவத்துடனான நேரடி செயற்பாடுகளாகவே அமைந்திருந்தன என்பதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. ஏனெனில், இவ்விடயம் சம்பந்தமாக முஸ்லிம் தலைமைகளில் அதிருப்தி நிலவுவதாகவும் அறியமுடிகிறது. அதிலும் குறிப்பாக புனர்வாழ்வுக்குப் பொறுப்பான அமைச்சரும், வடக்கு கிழக்கு இணைப்பதிகாரியுட்பட பலரும் இவ்விடயத்தில் தொடர்பு கொள்ளப்படவில்லையென்றும் தெரிகிறது. புனர்வாழ்வுடன் தொடர்புற்ற ஓர் அரச அதிகாரி 'அஷ்ரஃப்', 'பௌஸி' சொல்லாமல் ஏன் போகிறீர்கள்? என்ற கேள்வியையும் தொடுத்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களை மீள்குடியேற்றுவதன் மூலம் தன் பலத்தை வெளிக்காட்டும் அவசரத் தேவையில் அரசு இருக்கிறது. அதற்கான முழு மூச்சான ஏற்பாடுகளையும், சகல வழிகளிலும் • செய்கிற ஏற்பாடே இது.

எனினும், அண்மைக்காலமாக மீண்டும் சென்று குடியேறும் ஆர்வத்தை வெளிக்காட்டிவரும் முஸ்லிம்கள் அரசும், இராணுவமும் செய்து தரும் இச்சந்தர்ப்பத்தை தங்கள் ஆர்வம் நிறைவேறுவதற்கான சந்தர்ப்பமாக பயன்படுத்தினர். இதற்கு முன்னர் மன்னாரைச் சேர்ந்த முசலிப்பிரதேச மக்கள் சிலர் தனிப்பட்ட ரீதியில் ஊர் சென்று வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் மன்னார் தீவில் மூன்றில் இரண்டு பங்கானவர்கள் மீளக்குடியேறியிருக்கிறார்கள். நிலைமை சாதகமாக மாறிக்கொண்டு வருகிறது. ஏழாண்டு அகதிவாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்துகிற தருணமாகவும் இது அமையலாம். சொந்தபூமிபோல் எந்தச்சொர்க்கமும் ஆகாது. நிலைமை அறிந்து வருவோம் எனப் புறப்பட்டனர்.


***டிசம்பர் 15 பயணம்***

டிசம். 15ம் திகதி காலை இராணுவ இணைப்பதிகாரி பன்னிப்பிட்டிய ஏற்பாடு செய்திருந்தது போல் நான்கு பஸ்வண்டிகள் நுரைச்சோலைக்கு அனுப்பப்பட்டன. பல முகாம்களிலிருந்தும் முன்பு பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்கள் நுரைச்சோலையில் கூடி காலை ஒன்பதரை மணியளவில் பயணத்தை ஆரம்பித்தனர்.

இளைஞர்கள், முதியவர்களுட்பட எல்லோர் முகங்களிலும் சந்தோஷப் பிரவாகம். ஏழாண்டுகளுக்குப்பின்னர் ஊர் பார்ப்பதன் பரவசம். இரண் வருடங்களுக்கு வெளிநாட்டுக்கு உழைக்கப் போவதி சோகமும், மீள வரும்போதுள்ள சந்தோஷமு 'எயார்போட்' அனுபவங்கள் தரும். அதை விட இ அலாதியானது. சிலர் விரட்டினார்கள், சிலர் அழைத் செல்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை பெரும்பாலு வெளியாரால் இன்னொரு புறத்தால்தான் நகர்த் பட்டுக்கொண்டிருக்கிறது. இது துயரமான நிகழ்வுதா எனினும் அவற்றையும் மேவி, துயரங்கள் மறந் தங்கள் இருப்பிடம் பார்க்கும் ஒரே நிகழ்வுக்காய் சந்தோஷப்பட்டார்கள்.

மன்னார் மக்கள் இயல்பிலேயே நகைச்சுவை உணர்வுகொண்டவர்கள். எல்லோரோடும் இயல்பா பழகக் கூடியவர்கள். வாழ்ந்த கதை, வளர்ந்த கதை இழந்த கதை என எல்லோரும் மீண்டும் தங்கள் தங்க வரலாறை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர்... ஒ பெருமூச்சு. துயரம். சிரிப்பாய்க் கதைக்கிற கதைகளு குள்ளேயிருந்து வெளிப்பட்டதை அவர்களின் துயரா களின் அருகாமையிலிருந்தவர்களுக்குச் சட்டென்று பு[illegible]டும்.

147 பேரையும் ஏற்றிச்சென்ற பஸ் வண்டிகள் புத்தள இராணுவ முகாமருகே சோதனைக்காக நிற்பா டப்பட்டது. சுமார் இரண்டு மணி நேர பரிசோதனைகள் பெயர்ப்பதிவுகளுக்குப்பின்னால் இராணுவப் பாதுகா புடன் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இராணுவத் தினரின் இடைத் தடைமுகாம்களில் எதுவித சோதனைகளுமின்றி அனுராதபுரம் இராணுவ முகாமை அனைவரும் அடைந்தனர். அங்கு இராணுவத்தினர் இவர்களுக்கான பகற்போசனம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. உணவருந்தியபின் அனைவரும் தொழுகையை நிறைவேற்றினர். அதன் பின்னா






மன்னார் கச்சேரியில் இடம்பெற்ற கூட்டத்தில் அரசு அதிகாரிகளும்,'ஊர் பார்க்க'வந்த மக்களும்.



ஊருக்குள் போகத் தயாராய்...



67க்கும் மேற்பட்ட கடைகளைக் கொண்டிருந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயணம் மீண்டும் இராணுவ பாதுகாப்புடன் நடைபெற்றது. மாலை நான்கு மணிபோல் மதவாச்சியை வந்தடைந்தவர்களை மன்னாரிலிருந்து வந்து காத்திருந்த புனர்வாழ்வு உத்தயோகத்தரும், பிரதிநிதிகளும், இராணுவத்தினரும் அழைத்துச் சென்றனர்.

மதவாச்சியினூடாக குறித்த அப்பாதை கடந்த பத்தாம்திகதியே மக்கள் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாதையினூடான சில பிரதேசங்கள் மிக அண்மையில்தான் இராணுவ வசம் வந்துள்ளன. இப்பிரதேசங்களில் பலர் மீளக்குடியமர்ந்து அன்றாடச் சீவியத்தை ஆரம்பித்துள்ளனர் என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.



மன்னார்ப் பகுதிக்கான நீர்வசதிக்காக முன்பு அமைக்கப்பட்டு பூர்த்தியாக்கப் படவிருந்த பாரிய நீர்த்தாங்கியொன்றும் சேதமாக்கப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிந்தது. இது முருங்கனுக்கருகே அமைக்கப்பட்டிருந்தது.

மன்னார் தீவுப்பகுதி நேரத்துடனேயே அடங்கிப்போயிருந்தது. காடுபோல் இருட்டான சூழலில் பஸ்வண்டிகள் நிறுத்தப்பட்டது. (மன்னார் நகரின் கச்சேரி அருகேயான பிரதேசம் என்பது மறுநாள் புரிந்தது.) சிறிது நேரத்தின் பின் அனைவரும் தாராபுரம் கூட்டிச் செல்லப்பட்டனர். இது தீவுப் பகுதியிலுள்ள ஒரு முஸ்லிம் கிராமமாகும். இங்கு அனேகர் முன்பு குடியேறியிருக்கின்றனர். இங்குள்ள பாடசாலையொன்றில் அனைவரும் தங்கவைக்கப்பட்டனர். இரவுணவும் இங்கேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மறுநாள் காலை கச்சேரியில் ஓர் கூட்டம் ஏற்பாடாகியுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

மறுநாள் 16ம்திகதி காலை, மன்னார் கச்சேரியில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மன்னார் அரச அதிபர் குரூஸ், உதவி அரச அதிபர் விஸ்வலிங்கம், மாவட்டக்காணி ஆணையாளர் எட்வர்ட், மன்னார் பிரதேச செயலாளர் செல்வி கணபதிப்பிள்ளை, நானாட்டீன் பிரதேச செயலாளர் பத்திநாதன், புனர்வாழ்வு உத்தியோகத்தர் அஸ்ஹர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திலும் மன்னார் நிலைமைகள், மீள் குடியேறுவதற்கான சாதகபாதக தன்மைகள், மீள்குடியேறுவதனால் அரசு செய்யும் ஏற்பாடுகள் எனப்பல்வேறு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு மக்கள் அபிப்பிராயங்களும் கோரப் பட்டன. மக்கள் மீள வருவதில் அதிக அக்கறை செலுத்திக் கதைத்தாலும் ஊரை ஒரு முறை கன்னாரக் கண்டுவிட்டு முடிவு எடுக்கலாம் என்பதில் இருந்தனர். பெரும்பாலானோர் மனதில் இன்றோ நாளையோ ஊர்

நானாட்டான் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு அன்றிரவே ஊர்களுக்குள் செல்வதற்கான வாய்ப்புக்கிடைத்தது. அவர்கள் (சுமார் 45 பேர்) லொறிகளில் ஏற்றப்பட்டு நானாட்டானில் தங்க வைக்கப்பட்டனர்.

நானாட்டான் பிரதேசமும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசமாகும். முஸ்லிம்களின் வருகையை புலிகள் முன்கூட்டியே அறிந்திருக்கக் கூடும். மன்னார் கச்சேரியில் நடந்த கூட்டத்தின் போதும் இரு புலி உறுப்பினர்கள் வந்து அவதானித்துமுள்ளார்கள

அரசின் இந்த தடபுடலான ஏற்பாடு இவர்களுக்கு அதிருப்தியை அளித்திருக்கலாம். நானாட்டானில் தங்கியிருந்தவர்களை இரவு பன்னிரண்டு மணிபோல் புலிகள் உறுப்பினர்கள் சிலர் எழுப்பிக்கதைத்திருக்கின்றனர். கதைத்த அவர்கள் முதலில் கேட்ட கேள்வி 'யாரின் அனுமதியுடன் இங்கே வந்தீர்கள்...?' என்பதாகும். இந்தக் கேள்வியால் மக்களுக்கு சோர்வு ஏற்பட்டாலும் அக்கேள்வி இன்னும் இப்பிரதேசங்கள் எங்கள் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன என்பதை அழுத்திச் சொல்வதாகவே அமைந்த்து அத்துடன் மக்களுடன் சுமூகமான முறையிலும் உரையாடியதன் மூலம் அரசு ஏற்படுத்தியுள்ள சில மாயைகளையும் உடைத்துள்ளார்கள். வந்த நீங்கள் ஊரை பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று கூறியுள்ளன்ர். அதற்கிடையில் நானாட்டன் பிரதேச செயலாளரும் அவர்களுடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கி அனுமதி பெற்றுள்ளார். மறுநாள் தங்கள் தங்கள் இடங்களைப் பார்வையிடச் சென்ற மக்களை அப்பிரதேச வாசிகள் பானங்கள், சிற்றுண்டிகள் கொடுத்து வரவேற்று அளவளாவியுள்ளனர்.

பாடசாலையில் தங்கியிருந்த முசலிப் பிரதேச

இங்க நாங்க நிற்கிறோம். இங்கால எங்கட நிர்வாகம்தான் நடக்குது. நீங்க வாங்க, போங்க.. ஆனால் அரசின்ட பேச்செல்லாம் கேட்டிட்டு வராதீங்க... இங்குள்ள நிர்வாகப்பிரச்சினைகள் எங்களுக்குத்தான் தெரியும். முஸ்லிம்களுக்கு மீள்குடியேற்றம் ஒன்று இருக்கு, அத நாங்க செய்வோம். அது எப்ப எண்டு இல்ல...'' எனப்பலவிடயங்களைக் கதைத்தார். 'உங்களின் (புலிகளின்) அனுமதியில்லாமல் வரமுடியாது, வரக்கூடிய நிலை இல்லையென்பதை நாங்கள் அறிவோம். உங்களுடன் பேசி உங்கள் முடிவு எடுக்கத்தான் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வந்தோம். எனவே எங்களுக்கு பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தாருங்கள் என்று மக்கள் தெரிவித்தார்கள். அத்துடன் முஸ்லிம்கள் தொடர்பான புலித் தலைமைகளின் சாதகமான மாறுதல்களும் சுட்டிக்காட்டப்பட்டன. பின்னர் குறிப்பிட்ட நேர அவகாசம் வழங்கப்பட்டு ஊர்களைப் பார்ப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் பகலுணவுக்காக புலி உறுப்பினர்களால் இரண்டு மாடுகளும் வழங்கப்பட்டன.

***ஊர் நிலைமைகள்***

வீடுகள், பாடசாலைகள், பள்ளிவாசல்கள், கடைகள் என இருந்த கட்டிடங்களெல்லாம் அத்திவாரம் இல்லாத அளவுக்கு சேதமாக்கப்பட்டிருக்கின்றன. இருப்பிடத்தின் அடையாளத்தைக் கண்டு கொள்ள முடியாதளவு காடுகள் வளர்ந்துள்ளன. சுமார் ஏழு வருடங்களுக்கு முன்னாள் இப்பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் மிகச் செழிப்பாக வாழ்ந்தார்கள் என்பதற்கான எந்த அடையாளமும் இல்லை. ஒரு சமூகத்தின் இருப்பு இவ்வாறுதான் அழிக்கப்பட வேண்டும் என்பதற்கு உதாரணமாய் இருந்தது நிலைமை. போகும் முன்னர் புலி உறுப்பினர் சொன்னார். ''போய் எதைப்பார்க்கப் போகிறீர்கள்? என்னதான் இருக்கிறது.... இராணுவம் செய்திருப்பதைப் பாருங்கள்...''

# ...தேச முஸ்லிம்களின் மீள் குடியேற்றம்:

# ...மின்றேல் சாத்தியமில்லை...



'நாம் படித்த பாடசாலை' - சிலாபத்துறை

...பாதையின் இருமருங்கிலும் அநேக இராணுவ ...காம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சப்புமல்புர எனப் ...யர் மாற்றப்பட்டு சர்ச்சைக்குட்பட்ட பறையனாலங் ...ளமும் இந்தப்பாதையிலேயே அமைந்துள்ளது.

...ன்னார் தரைப்பாதை தவிர்ந்த ஏனைய ...புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டே ...ருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ...ன்னாருக்கு மின்சாரம் வழங்கும் பாரிய மின்சாரத் ...ண்கள், கம்பிகள் அனைத்தும் சிதைக்கப்பட்டுப் ...ங்கப்பட்டிருக்கின்றன. மன்னார் பிரதேசம் நீண்ட ...மாக மின்சார வசதியற்ற பிரதேசமாகவே இருந்து ...துள்ளது. பாரிய ஜெனரேட்டர் மூலமே ...ப்பகுதியில் மின்சார விநியோகம் மேற்கொள்ளப் ...டிருக்கிறது. பாதை திறப்பு விடயத்துடன் ...விநியோகத்திற்கான ஏற்பாடுகளையும் அரசு ...பது வருகிறது.



...துறை சிறு நகரின் தற்போதைய தோற்றம்.

வந்துவிடலாம் என்ற ஆர்வமே மேலோங்கியிருந்தது. அவ்வாறான ஆர்வம் ஊட்டப்பட்டிருந்தது என்றும் சொல்லலாம். அத்துடன் அண்மைக்காலமாக மாறிவரும் சகலதரப்பு சாதக நிலைமைகளும் ஊர்போகும் ஆர்வத்தைக் கூட்டியே இருந்தன.

இக்கூட்டத்தில் ஊர்களைப்பார்ப்பதற்கான அழுத்தம் தெரிவிக்கப்பட்டதால் கூட்டிச்செல்வதற்கான ஏற்பாடுகளை UNHCR உடன் கதைத்து செய்வதாக அரச அதிபர் கூறினார். அதன்படி அவர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு அவர்களும் தொடர்பு கொண்டு சம்மதம் தெரிவித்தனர். இந்த இடத்தில் மக்கள் அதிருப்திக்குள்ளாக வேண்டியிருந்தது. அரசு தரப்பு சகல நிலைப்பாடுகளும், ஏற்பாடுகளும் இவ்விடத்தில் கேள்விக்குறியாகின. ஏனென்றால், சொந்த இடங்களைப் பார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டாயிற்று. இராணுவம் வசம்தான் இடங்கள் உள்ளன. சிவில் நிர்வாகம் நடக்கிறதே என்ற விம்பத்தில்தான் மக்கள் அழைத்துவரப்பட்டனர். அது உண்மைதான். மன்னார் நகரினுள்ளும், வீதியோரங்களும் இராணுவத்தின் கீழ் சிவில் நிர்வாகம் தான் நடைபெறுகின்றன. ஆனால், முஸ்லிம்கள் பார்க்க வந்த பிரதேசம் புலிகள் வசமான பிரதேசம். அதனால்தான் அங்கு செல்வதற்கு UNHCR உதவி வேண்டப்பட்டது. புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களான UNHCR, ICRC போன்றவைகளைத் தவிர வேறெந்த அரசு சார்ந்தவர்கள் போவதும் அதிகாரம் செலுத்துவதும் இயலாத காரியம் இதனை மறுநாள் நிகழ்வும் நிரூபித்தது.

UNHCR பிரதிநிதிகள் அன்று மாலையே பிரதான வீதிவழியாக அனைவரையும் முருங்கனுக்கு அழைத்து வந்தனர். முருங்கனுக்கு வர இரவாகிவிட்டது. இராணுவ முகாம் அருகிலேயே அனைவரும் கொண்டு வரப்பட்டனர். இரவோடிரவாக ஊருக்குள் சென்று அங்கேயே தங்கிக்கொள்வோம் என்ற ஆர்வமே எல்லோரிடமும் இருந்தது. ஆனால் இராணுவம் கண்டிப்பாக மறுத்து விட்டது. மறுநாள் காலையே அனுமதிப்பதாக கூறியதால் முருங்கனுக்கருகேயுள்ள ஒரு பாடசாலையினுள் தங்கவைக்கப்பட்டனர்.

மக்கள் மறுநாள் காலை முருங்கனுக்கு அழைத்து வரப்பட்டு இராணுவப் பரிசோதனைக்குட்படுத்தப் பட்டனர். பிரதான வீதியிலுள்ள முருங்கனிலிருந்து சிலாபத்துறை கடற்கரை வரையான சுமார் பத்துமைல் தூரத்தின் இருமருங்குகளிலுமே முஸ்லிம் குடியிருப்புக்கள் இருந்துள்ளன. இப் பத்து மைல் பயணப்பாதைக்கும் UNHCR, ICRC வாகனங்களைத் தவிர வேறெதுவும் பயணிப்பதில்லை. UNHCR வாகனங்களிலேயே இவர்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். DLC எட்வர்ட்டும், அஸ்ஹரும் கூடவே வந்தனர். இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட ர்கள். பிரதான வீதி இராணுவமுகாமுக்கு சற்று அப்பாலுள்ள பரியாரி கண்டல் எனும் இடத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்களால் மறிக்கப்பட்டனர். அவர்களிடமும் முதலில் விடுக்கப்பட்ட கேள்வி 'யாரின் அனுமதியோடு இங்கே வந்தீர்கள்?' என்பதாகும். இங்கே வருவதற்கான அனுமதியைப் பெறவேண்டியது வேறிடத்தில் என்பதுதான் இக்கேள்வியின் தொனி.

அங்கு சென்ற உடனேயே இந்நிலையை அனைவராலும் புரிந்து கொள்ள முடியுமாயிருந்தது. நிவாரணங்களை வழங்குவதைத்தவிர வேறெதனையும் செய்ய அரசால் முடியாதென்பது அப்பட்டமாய் விளங்கியது

புலிகளின் உளவுப்பிரிவைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்படும் ஒருவரே மக்களை எதிர்கொண்டு கதைத்தார். 'நீங்கள் பார்க்கிறீர்கள் தானே, அந்தா கொஞ்சம் தள்ளி இராணுவம் நிற்கிறது.

மக்கள் யார் செய்தார்கள், எவர் செய்தார்கள் என்பதையெல்லாம் தோண்டி எடுத்து குரோதம் வளர்க்கத் தயாராயில்லை. வெற்றுத்தரையையாவது பார்க்கக் கிடைத்ததே பெரிது என்ற பரவசத்தில் தான் இருந்தார்கள். எமக்கென்ற நிலத்தையாவது எஞ்ச வைப்பதில் அவர்களின் தன்னம்பிக்கை தெரிந்தது.

எங்குபார்த்தாலும் காடுகள் தான். பெரிய கட்டிடங்களின் சில சிதைவுகள் ஆங்காங்கே தென்பட்டன. ஒரு புதிய ஊரை உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கும் மக்கள் தயார். இந்தக்காட்டையெல்லாம் ஒரு கிழமையில் துப்பரவாக்கி விடுவோம் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்கள். இப்பிரதேசத்தவர்களில் பலர் யானைபிடிக்கும் தொழிலிலும், காடு வெட்டும் தொழிலிலும் ஈடுபட்டவர்கள். அத்துடன் பொதுவாக அனைவருமாக சுய உழைப்பில் ஈடுபட்டிருப்பவர்கள். குளங்கள், கடல், வயல், தோட்டம் என்ற வளங்களுடன் தன்னிறைவான தொழில் வசதி கொண்டவர்கள்.

இப்பிரதேசத்தில் (முசலிப்பிரதேசத்தில்) சுமார் 21 முஸ்லிம் குடியிருப்புக்கள் உள்ளன. இவற்றிற்கெல்லாம் ஓர் பிரதான துணை நகரமாக சிலாபத்துறை விளங்கியிருந்தது. 'மினிடவுன்' எனப்படுகின்ற இறங்குதுறையுடனான அழகிய இவ்விடம் காடுமண்டிக் கிடக்கின்றது.

நானாட்டான் பிரதேசத்தவர்களது இருப்பிட நிலைமைகள் முசலிப்பிரதேசத்தவர்களை விட சற்று முன்னேற்றகரமாயுள்ளது. இவ்விரு பிரதேசங்களிலும் சிலர் உதிரிகளாக புலிகளின் அனுமதியைப்பெற்று விவசாயம் செய்கின்றனர்.

படங்களும் கட்டுரையும்: "சத்யபுத்ரன்"

→20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே..

# நிபுணத்துவ உதவி தேவைப்படும் பெற்றோர்கள்

டொக்டர் ஜெயிம் ஜி ஜினோல்ட்
தமிழில் :அருண்

### பெற்றோரின் நடத்தையும் குழந்தைகளின் இயல்பும்

ஒரு குழந்தையின் ஆளுமையானது அதன் குடும்பத்தில் நிலவும் உணர்வு பூர்வமான சூழ்நிலையின் தன்மையைப்பொறுத்து மாறுபடுகிறது. இந்த உண்மைக்கு வேறு சாட்சிகள் எதுவும் தேவையில்லை என்ற போதும் மிகவும் அண்மைக் காலத்திலேயே குழந்தையின் நடவடிக்கைகட்கும் பெற்றோரின் நடவடிக்கைகட்கும் இடையில் உறவு இருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத் தொடங்கி இருக்கின்றோம். சில பெற்றோரின் நடவடிக்கைகள் வெளிப்படையானவையும் ஒளிவு மறைவற்றவையுமாக இருக்கின்றன. அவை அவதானிக்கப்படக் கூடியவையாகவும், அவற்றின் செல்வாக்குகள் அடையாளம் காணப்படக் கூடியவையாகவும் இருக்கும். வேறு சில பெற்றோரின் நடவடிக்கைகள் ஒளிவு மறைவானவையாகவும், விளங்கிக் கொள்ள முடியாதவையாகவும் இருக்கும். இவை ஊகித்தறியப்பட வேண்டியவையாகவும் இவற்றின் தாக்கங்கள் ஒரு கருதுகோளாக கொள்ளப்பட வேண்டியவையாகவுமே இருக்க முடியும்.

மட்டுமீறி உணர்ச்சி வயப்படல், மேலதிகமான பாதுகாப்பு உணர்வு, குழந்தைத்தனம், குடிபோதை, தவறான பாலியல் பழக்கங்கள், எதையும் நிராகரிக்கும் இயல்பு, அளவுக்கு மீறிய அக்கறை காட்டல் என்பவற்றை விரும்பத்தகாத நடத்தையுள்ள பெற்றோரின் இயல்புகளில் சில என்று கூறலாம்.

### மட்டுமீறி உணர்ச்சி வயப்படும் பெற்றோர்

**தனிப்பட்ட மனப்பாங்கும், பகிரங்க நடத்தையும்:-** மட்டுமீறி உணர்ச்சி வயப்படும் பெற்றோரின் குழந்தைகளை இலகுவில் அடையாளம் காணலாம். அவர்களின் செயல்கள் எப்போதும் கவனிக்கப்படுபவையாகவும் அவர்கள் சொல்பவை எப்போதும் கேட்கப்படுவதாகவும் இருக்கும். தமது சிறுவயதிலிருந்தே, திட்டினால்தான் தாம் சொல்வதைப் பிறர் கேட்பார்கள் என்றும், தாம் வேகமாகப் பேசினால், தாம் இடையூறின்றி பேசமுடியும் என்றும் தமது அனுபவத்தினூடாகப் படித்து வந்திருப்பார்கள். பெற்றோர்களின் கொந்தளிப்பைத்தான் அவர்கள் உண்மையில் பிரதிபலிக்கிறார்கள். பெற்றோர்களும் சரி, பிள்ளைகளும் சரி தாம் அதிகளவு உணர்ச்சி வயப்பட்டிருக்கிறோம் அல்லது தமது மனநிலை எப்போதும் வெடிக்கத் தயாராக இருக்கிறது என்பதை அடிக்கடி மறந்து விடுகிறார்கள். இந்த விடயத்தை நாம் அவர்கட்கு சுட்டிக் காட்டினாலோ அவர்கள் அதைப் பெருமையுடன் ஒருவகை தேசிய உணர்வுடனான பெருமிதத்துடன் - ஒப்புக் கொள்கிறார்கள். ''நான் யார் தெரியுமா? நான் ஒரு செந்தலையன்'' என்றோ அல்லது ''இது எனது ஐரிஸ் பழக்கம்'' என்றோ தம்மை அவர்கள் பொதுமைப்படுத்திக் கொள்வார்கள்.

அவர்கள் தமது சொந்த கலாசார சமூக மட்டத்துள் வாழ்ந்து கொண்டிருக்கும் வரை அவ்வளவு பிரச்சினைக்குரியவர்களாக இருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் அதற்கும் அப்பாற் சென்று பரந்த பிற சமூகங்களுடன் பழக ஆரம்பிக்கும்போது மிகவும் எரிச்சலூட்டுபவர்களாக ஆகிவிடுகின்றனர். இவர்கள் எதற்கெடுத்தாலும் விவாதம் செய்பவர்களாகவும், நீண்ட நேரத்தை உறிஞ்சுபவர்களாகவும் இருப்பார்கள். அதிகம் பேசுகின்றபோதும், இவர்கள் பிறர் சொல்வதை கேட்பது குறைவாகவே இருக்கும். ஒருவகை நாடக பாணியிலான இயல்புகளைக் கொண்டிருக்கும் தமது இந்தச் செயல்கள் பிறருக்கு எவ்வளவு தூரம் எரிச்சலூட்டுவதாக இருக்கிறது என்பது குறித்த பிரக்ஞை இவர்களிடம் இருப்பதில்லை.

இப்படியான பெற்றோர்களை நாம் மனோரீதியாக குழப்பப்பட்டவர்களாகக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் சமூகரீதியில் குழம்பியிருப்பார்கள் என்று இவர்களைச் சொல்லலாம். இவர்களது தனிப்பட்ட மனப்பாங்குகளையும் இவர்களது பகிரங்க நடத்தைகளையும் திருத்திக்கொள்வதற்கு நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது.

### அதிகபட்ச பாதுகாப்புணர்வுடைய பெற்றோர்கள்

**சிறிய சிறிய விடயங்களில் கூட கடுமையாக கவனம் செலுத்துதல்:-** அதிகபட்ச பாதுகாப்புணர்வுடமை என்பது ஒரு குழந்தை செய்யும் செயலிலுள்ள சிறிய சிறிய அம்சங்களைக்கூட கடுமையாகக் கவனிப்பது ஆகும். இவர்கள் குழந்தை பிறந்த நாளில் இருந்தே அந்தக்குழந்தையின் வாழ்க்கைபற்றி ஓய்வின்றிக் கவலைப் படுவார்கள். சாதாரண பெற்றோருக்கு வழமையானதாக தோன்றும் ஒரு செயல், மட்டுமீறிய பாதுகாப்புணர்வுடைய ஒரு தாய்க்கு வாழ்வுக்கும், சாவுக்கும் இடையிலான ஒரு போராட்டமாகத் தான் இருக்கும். இந்தத்தாய் எஞ்ஜின் ஓடுவதைப் பார்ப்பதற்காக அதன் மூடியை திறந்து விட்டு காரை ஓட்டுகின்ற ஒரு சாரதியைப் போன்றவராவார்.

இந்தத்தாய் ஒரு நாளைக்கு பல தடவை தனது குழந்தை சுவாசிக்கிறதா என்று தொட்டுப் பார்ப்பார். அல்லது அதற்கு வழங்கப்படும் உணவை நிறுத்தப் பார்ப்பார்; அதன் வயிற்றின் அசைவுகளை அவதானித்துக் கொண்டிருப்பார்; அல்லது குழந்தையின் தூக்கம் பற்றிக் கவலைப்படுவார். குழந்தை எழுந்து நின்றால், அது விழுந்து விடுமோ என்று கவலைப் படுவார்; அது ஓடினால், விழுந்து காயப்பட்டு விடுமோ என்று பயப்படுவார். குழந்தைக்கு சாதாரண காய்ச்சல் வந்தாலோ, அது இறந்தே விடும் என்று கருதத்தொடங்கி விடுகிறார்.

இத்தகைய பெற்றோர்கள் தமது வாழ்வுக்காக மிகவும் கடினமாக உழைக்கிறார்கள். அவர்கள் தமது குழந்தைகட்காக தேவையற்ற விடயங்களைச் செய்யாமல் விடுவதில்லை. குழந்தைகளால் செய்யமுடியாதவற்றையே அவற்றிற்கு ஒரு பெற்றோர் செய்ய வேண்டும் என்பதையும் குழந்தைகள் தாமாக செய்யக் கூடாதவற்றை, அவை, அவற்றைச் செய்ய விருப்பம் தெரிவித்தபோதிலும், அவற்றை பெற்றோரே செய்ய வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். அதிகளவு பாதுகாப்புணர்வுள்ள தாயானவள் குழந்தைகட்கு அளவுக்கு மீறி உணவூட்டுகிறாள். அளவுக்கதிகமான உடையலங்காரம் செய்கிறாள். முடிந்தால் அவர்களுக்காக, அவர்களது உணவை தானே சமிபாடடையச்செய்தும் கொடுக்கவே விரும்புவாள்!

சுருக்கமாகச் சொல்வதானால், குழந்தையின் சொந்தச் செயலான வாழ்தலும் இயங்குதலும் தாயினால் பொறுப்பெடுக்கப்பட்டு விடுகின்றன. இந்தக் குழந்தை வளருமே ஒழிய முதிர்ச்சி அடையாது. பெற்றோரிடமிருந்து கடன்வாங்கப்பட்ட தன்னுணர்வுடன் வளர்ந்தும் பேசவும் தொடங்கி விட்ட போதும், அது தனது சொந்த தன்னுணர்வை வளர்த்தெடுக்கத் தவறி விடுகிறது. அது இன்னமும் ஒரு அம்மா, அப்பாவில் தங்கியிருக்கும் குழந்தையாகவே இருக்கும். அதற்கு அதனது சொந்த உணர்வுகளைப் பற்றியோ, விருப்பங்களைப்பற்றியோ எதுவும் தெரிந்திருக்காது என்பது மட்டுமல்லாது, மிக ஆரம்ப மட்ட சமூக தேர்ச்சிகளையும் அது அறிந்திருக்க மாட்டாது. தாயார் பெருமளவுக்கு அதன் மனதை உருவாக்குபவளாக இருப்பதால், குழந்தை சுயமாகச் சிந்திக்க முடியாமல் தடுமாறுகிறது. அதற்கு தன்னைப்பற்றியும், தன்னைச்சூழ உள்ள உலகம் பற்றியும் மிகச் சிறியளவான ஒரு வெளிச்சமே இருக்கும். இக்குழந்தைகள் விளைவுகளுக்கு காரணங்களை தேடமாட்டா. அவை பெரும்பாலும் 'மந்திர தந்திர' விளக்கங்களுடன் திருப்தியடைந்து விடுகின்றன. இவ்வாறான குழந்தைகள் தமது தாயாரில் தாம் தங்கியிருப்பதற்கும் தம்மிடம் எழும் துட்டு அளவு சுயாதீனத்துவத்திற்கான விருப்பிற்கும் இடையில் ஏற்படும், எப்போதும் நிலவும் போராட்டத்தில் தமது சக்தியின் அதிகளவை விரயமாக்குகின்றன. அளவுக்கதிகமான பாதுகாப்புணர்வுடைய பெற்றோர்களுக்கு நிபுணத்துவ உதவி அவசியம் - அவர்களது குழந்தைகள் சுயபூரணத்துவம் பெற வேண்டுமானால்.





### குழந்தைத்தனமான பெற்றோர்கள்

**குழந்தைகள் விளையாட்டுப் பொருட்களாகவும், பாதுகாவலர்களாகவும் இருத்தல்:-** சில தாய்மார்கள் தமது குழந்தைகளுடன் உறுதியான நீண்டநாள் நீடிக்கும் உறவைப் பேணுவதற்கு சிரமப்படுகின்றார்கள். அவர்கள் குழந்தையுடன் சந்தோசமாக, ஒரு விளையாட்டுப் பொருளுடன் விளையாடுவது போல விளையாடுகின்ற போதும், அதன் போது சந்தோசம் அடைகின்ற போதும், அவர்களால் தாய்மைச் சுமையைத் தாங்க முடிவதில்லை.

இவர்கள் தாமே ஒரு தாயாரின் பராமரிப்பை எதிர்பார்ப்பவர்களாக இருப்பார்கள். அதை தமது குழந்தைகளிடம் எதிர்பார்ப்பார்கள். அவர்கள் குழந்தைகளிடம் உதவியையும், பாதுகாப்பையும் எதிர்பார்ப்பதன் மூலம் தமது பாத்திரங்களைத் தலைகீழாக்குகின்றார்கள். குழந்தைகள் தாய் குறித்தும், அவரைப்பாதுகாப்பது குறித்தும் கவலைப்படுமாறு தவிர்க்க முடியாமல் தள்ளப்படுகிறார்கள். ஆனால் குழந்தைகளாக இருப்பதால், அவர்களால் இவற்றைச் செய்ய முடியாமல் போகும்போது நிரந்தரமான தோல்வி மனப்பான்மைக்கும், புறக்கணிப்புக்கும் உள்ளாகிறார்கள். அவர்கள் தமது குழந்தைப்பருவம் மறுக்கப்பட்டவர்களாக, குற்ற உணர்வும் தன்னைத்தானே திட்டும் இயல்பும் உடையவர்களாக வளர்கிறார்கள்.

இத்தகைய தாய்மார்களுக்கு குழந்தை வளர்ப்பில் உதவி தேவை.

### குடிகாரப் பெற்றோர்கள்

**திடீர் புயல்களும் அவ்வப்போது நடக்கும் விலகல்களும்:-** குடிகாரப் பெற்றோரின் குழந்தை விளங்கிக் கொள்ள முடியாத திடீர் புயல்களுக்குப்பழக்கப்பட்டதாகிறது. அது தனது பெற்றோர் எதிர்வு கூறமுடியாத பயமூட்டுகிற விதத்தில் தமது இயல்பை திடீரென மாற்றிக் கொள்வதை காண்கிறது. இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் தமது பெற்றோருக்கு ஒரு போத்தல் மதுவைத் தவிர வேறெதுவும் முக்கியமல்ல என்பதை அது அறிந்து கொள்கிறது. அது தான் கைவிடப்பட்டதாக, உதவியற்ற ஒருவராக தன்னை உணர்கிறது.

பெற்றோர் குடித்த பல காட்சிகள் அழியாமல் நிலைத்து நிற்கும் குழந்தை தனது பாதுகாப்புக் குறியீடு தனது கண் முன் குழம்பிப் போவதைக் காண்கிறது. தனது தாயாரோ, தகப்பனோ ஒழுங்கற்ற விதத்தில் மாறிவிடுவதைக் காண்கிறது. அவர்கள் பலவீனமாகவும், அலட்டுபவர்களாகவும், கண்ணீர் விடுபவர்களாகவும், கொடுங்கோலர்களாகவும் இன்னுமின்னும் குழந்தையின் வார்த்தைக் கட்டுள் அகப்படாத இயல்புள்ளவர்களாகவும் மாறிவிடுவதை அவதானிக்கிறது. அது தானும் அவர்களது சுகயீனத்துடன் சேர்ந்து வாழ வேண்டி நிர்ப்பந்திக்கப்படுகிறது.

குடிகாரப் பெற்றோர் தமது குழந்தைகளைப் பெரிதும் விரும்பக்கூடும். ஆனால், அவர்களது சொந்தப் பிரச்சினைகள் காரணமாக, அவர்களால் தமது குழந்தைகளைத் தொடர்ச்சியாகக் கவனிக்க முடிவதில்லை. இப்படியான பெற்றோருக்கு அவர்களது பிரச்சினைகளை சமாளிக்க நிபுணத்துவ உதவி தேவைப்படுகிறது.

வளரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எழுதுவது போல் வாழ வேண்டுமா?

''எழுதுவது போலவும் சொல்வதுபோலவும் வாழாத எழுத்தாளனுடைய பேனையைச் சுட்டுப் பொசுக்க வேண்டும் என்று சில எழுத்தாளர்கள் கூறுகிறார்களே, இது சரியா?'' - நான் எனக்குள் இருந்த உள் விமர்சகனைப் பார்த்துக் குரல் எழுப்பினேன்.

''அவர்கள் ஏன் அப்படிக்கூறுகிறார்கள்? அதற்கு அவர்கள் காட்டும் காரணம் என்ன?'' - அவன் என்னைப் பார்த்து எதிர்க்கேள்வி எழுப்பினான்.

''உயர்ந்த இலட்சியங்களையும், ஒழுக்கக் கோட்பாடுகளையும் தன் படைப்பில் முன்வைக்கும் எழுத்தாளன் ஒருவன் தன் சொந்த வாழ்க்கையில் அதற்கெதிராக வாழ்கிறான் என்றால் அது அசிங்கமாகத் தெரிகிறது. இதனால் அவன் தன் படைப்புக்களில் முன்வைக்கும் உயர்ந்த இலட்சியங்கள் கேலிக் கூத்தாகி கனதி குறைந்து போகின்றன. படிக்கிறது தேவாரம், இடிக்கிறது சிவன் கோவில் போன்ற வேலையாக இதுவும் மாறுகிறது'' -நான்.

''அப்படியானால் சிருஷ்டி இலக்கியம் என்பது உயர்ந்த இலட்சியங்களையும் ஒழுக்கக் கோட்பாடுகளையும் முன்வைக்கும் விவகாரம் என்று சொல்லுவீர்களோ? இதை ஏற்றுக்கொண்டால் நாம் இன்றைய இலக்கியங்களை வாசிப்பதை விட்டு விட்டு நாலடியார், திருக்குறள் போன்றவற்றை வாசித்துப் பயன் பெறலாம், அல்லவா?'' அவன் சிரித்துக்கொண்டு கேட்டான்.

''சிருஷ்டி இலக்கியத்தில் உயர் இலட்சியங்களும் ஒழுக்கக் கோட்பாடுகளும் இடம் பெறுவதற்கும் ஒழுக்கக் கோட்பாடுகளையும், உயர் இலட்சியங்களையும் போதிக்கும் அற நூல்களில் அவை இடம்பெறுவதற்கும் பாரிய வித்தியாசம் உண்டு. ஒழுக்கக் கோட்பாடுகளைத் தெரிந்துகொள்வதற்காகவே அற நூல்கள் வாசிக்கப்படுகின்றன. ஆனால் சிருஷ்டி இலக்கியத்தைப் பொறுத்தவரையில் அது அப்படியல்ல. ஆக்க இலக்கியம் என்பது - அது கவிதை, சிறுகதை, நாவல், எதுவாகவும் இருக்கலாம் - வாழ்வின் தரிசனமாகும். ஒரு கலைஞன் வாழ்க்கையைத் தான் காணும் கோணத்திலிருந்து படைத்தளிக்கிறான். அவனது அப்படைப்பானது கலா ரீதியாக வெற்றி பெறும் பட்சத்திலேயே அதில் காணப்படும் உயர் இலட்சியங்களும், ஒழுக்கமும் வாசகனைத் தொற்றிக் கொள்ளவோ பாதிக்கவோ முயல்கின்றன. அவைக்கும் கலைப் படைப்புக்கும் நேரடியான தொடர்பு கிடையாது'' - நான்.

''அப்படியானால் எழுத்தாளன் என்பவன் தன் சொந்த வாழ்க்கையில் தான் எழுதிக் கோடி காட்டிய இலட்சியங்களுக்கு எதிராக வாழ்வது தப்பில்லை என்கிறீர்களா? அதாவது தான் எழுதியதுபோல் வாழ வேண்டும் என்று ஒரு எழுத்தாளனை நாம் எதிர்பார்ப்பது பிழை என்கிறீர்களா?'' - அவன் நான் ஆரம்பத்தில் வைத்த கேள்வியையே என்னிடம் திருப்பிக் கேட்டான்.

''இதற்குப் பதில் அளிப்பதற்கு முதல் ஒரு எழுத்தாளன் தான் எழுதியதற்கு மாறாக ஏன் நடந்து கொள்கிறான் என்பதை முதலில் நாம் அறிய வேண்டும்'' - நான் இன்னும் தெளிவான தளத்திற்கு வர முயன்றேன்.

''ஏன் நடந்து கொள்கிறான்?'' அவன் குடைந்தான்.

''ஒரு படைப்பாளன் என்பவன் படைப்பில் ஈடுபடும்போது தன் அக ஆழங்களுக்குள் செல்கிறான். அங்கே அவனுக்கு உயர் இலட்சியங்களும் ஒழுக்கக்கோட்பாடுகளின் உண்மையும் தரிசனமாகின்றன. அந்நேரங்களில் அவன் தான் படைத்தளிக்கும் பாத்திரங்களாகவே மாறுகிறான். ஆனால் படைப்பு முடிந்ததும் அவன் மீண்டும் விவகார உலகால் விழுங்கப்பட்டு, தனது சிருஷ்டியின் போது ஏற்பட்ட தரிசன ஆளுமையில் இருந்து விடுபடுகிறான். சாதாரண ஆசாபாசங்களுக்குட்பட்ட மனிதனாக வாழத் தொடங்குகிறான். இதையே பிறழ்வுற்ற ஆளுமை என உளவியலாளர் விளக்குகின்றனர். இதனால் தான் 83 ஜூலைக் கலவரத்தின் போது உயர்ந்த இலட்சியங்கள், ஒழுக்கங்கள் பற்றிப் பேசிய சிங்கள எழுத்தாளர்கள் பலர் இனத்துவேஷிகளாகவும், அராஜகவாதிகளாகவும் மாறித் தமிழர்களுக்கு எதிராக இயங்க, சாதாரண சிங்கள மக்கள், தமிழர்களை ஆதரித்து பாதுகாப்புத் தந்தனர் என பிரபல விமர்சகர் றெஜி சிறிவர்த்தன கூறியுள்ளார். இதே காரணத்தால் தான் பெருங் கவிஞரான டி.எஸ்.எலியட் நாஸி (Nazi) ஆதரவாளனாய் இருந்தான். லியோ ரோல்ஸ் ரோய்போல் தான் எழுதிய உயர்ந்த லட்சியங்களுக்கேற்ப வாழ்ந்தவர்கள் மிகக் குறைவே'' நான்.

''இதன் மூலம் நீ எதைக் கூற முயல்கிறாய்?'' - அவன் துருவினான்.

''நான் தெளிவுபடுத்தவிரும்புவது இதுதான்; எத்தனையோ அற்புதப் படைப்புக்களைத்தந்த கலைஞர்களும், எழுத்தாளர்களும் தம் சொந்த வாழ்க்கையில் மோசமானவர்களாக இருந்திருக்கிறார்கள். பலவித ஒழுக்கக் கேடுகளுக்குரியவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதே என் வாதம். ஏன் நமது தேவாரம் திருப்புகழ் தந்த நாயன்மார்களில் கூட இத்தகையோரைக் காட்டலாம்.'' - நான் அழுத்தினேன்.

''அப்படியானால் எழுத்தாளனின் வாழ்க்கையோடு அவன் எழுத்தைச் சம்பந்தப்படுத்த வேண்டாம் என்பது தான் உன் இறுதி முடிவா?'' அவனும் அழுத்தினான்.

''இன்றைய நவீன விமர்சனங்களில் கூட இத்தகையை ஒரு பார்வையையே காணக்கூடியதாய் உள்ளது. அதனால்தான் அவை ஒரு படைப்பைத் தந்தவன் செத்துவிட்டான் என்கின்றன. இதன் மூலம் ஒரு படைப்பை அணுகுவதற்கு படைப்பாளனின் பின்னணியை நோக்காத ஒரு விடுபட்ட பார்வையைக் கோரி நிற்கின்றன அவை.'' - நான் கூறினேன்.

''ஆனால் இது ஒரு பக்கப் பார்வையென்றே நம்புகிறேன். எதற்கும் எப்பவும் இரண்டு பக்கங்கள் உண்டு. திரும்பவும் ஒரு கலைப்படைப்பாளியின் சொந்த வாழ்க்கையையும் பார்க்க வேண்டிய சூழல் உருவாகி வருகிறதென்றே கூறுவேன். இன்று இலக்கிய உலகில் புனைவுகள் மயப்பட்ட படைப்புகளை படிப்பதற்குப் பதில் ஒருவனின் சொந்த வாழ்க்கை வரலாற்றை உண்மை நிகழ்ச்சியைப் படிக்கும் ஆவலே மேலோங்கி வருவதை நாம் மேற்கில் காணுகிறோம். இது நீங்கள் கூறுகின்ற விடுபட்ட பார்வைக்கு எதிராக இனி வரப்போகிறதென்றே கூறுவேன்.'' - அவன்.

''இதை விளக்குவாயா?'' - நான்.

''இதுகால வரை எழுதப்பட்டுவரும் புனைவு மயப்பட்ட இலக்கியங்கள் எல்லாம் அலுப்புத்தரும் (Literature of exhaustion) விவகாரமாக மாறிவிடுகிறதென்றும், அவற்றைப் படிக்கும் ஆவல் வாசகரிடையே குறைந்து வருகிறதென்றும், இதனால் வாசகர்கள் உண்மை வாழ்க்கை வரலாற்றை, உண்மை வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் படிக்க ஆவல் காட்டுகின்றனர் என்றும், மேற்குலக விமர்சகர்கள் கூறுகின்றனர். இது படைப்பாளியின் இயக்க முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு அவர்கள் ஆக்கங்களின் உருவ உள்ளடக்கங்களிலும் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றன என்றும் எதிர்பார்க்கலாம். லத்தின் அமெரிக்க எழுத்தாளர் லூயி போர்கேயின் எழுத்துக்களை இதன் பின்னணியில் தான் பார்க்க வேணும்'' - அவன் விளக்கினான்.

''இந்த மாற்றம் படைப்பாளிகளை தாம் எழுதுவதுபோல் வாழச்செய்துவிடுமா?'' - நான்.

''இப்படித்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். எழுத்தாளனின் வாழ்வுக்கும், எழுத்துக்குமிடையே இருந்த இடைவெளி இல்லாமல் போகப்போகிறது. அதாவது மாறி வரும் இந்தப் புதிய சூழல் எழுத்தாளனை அவனது பிறழ்வுற்ற மனச்சிக்கலில் இருந்து விடுவிக்கிறது. தனது நேர்மையீனங்கள், அற்பத்தனங்கள், நல்ல தன்மைகள் யாவற்றையும் மறைக்காது எழுத்தில் போடத் தொடங்குகிறான். இது அவனது சுய வெளிக்காட்டலாகவும், சுய விசாரணையாகவும் மாறுகிறது. இது அவனது வழமையான 'கதை சொல்லும்' பாணியிலிருந்து அவனை விடுவித்து அவனது அன்றாட வாழ்க்கையையே கதையாகவோ, நாவலாகவோ தரச்செய்கிறது. ஆனால் இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கவேண்டியது, 'அப்பனின் காலைத் தடவிவிட்ட போது படுக்கை அறையில் மனைவியை நினைத்து அவளிடம் போய்விட்டேன்' என்று காந்தியார் தன் பலவீனத்தையே சத்தியப்படுத்திய இலக்கிய முன்வைப்பாகும். இது எழுதியவனையும் அதைப்படிப்பவனையும் பல வித மாற்றங்களுக்குள்ளாக்கும் என நினைக்கிறேன். இங்கே தான் எழுத்தும் வாழ்வும் ஒன்றாகிறது.'' -அவன் கூறினான்.

''...........'' நான் பேசாது அவன் கூறியதை இரை மீட்டேன்.

''இத்தகைய படைப்பானது எழுதியவனையும், சுயவிசாரணைக்குள்ளாக்கி சுத்தப்படுத்துவதோடு படிப்பவனையும் அது உண்மைப்படைப்பென்பதால், தொற்றிக்கொண்டு சிந்திக்கவும், சுத்தப்படுத்தவும் உதவுகிறது. இந்த இரட்டை தொழிற்பாடுடைய படைப்பானது தன் சுய வெளிப்பாட்டுக்குரிய புதுப்புது உருமாற்றங்களையும் கலைத்துவத்தையும் தரித்துக் கொள்கிறது.'' - அவன் தொடர்ந்து கூறி முடித்தான்.

## 'நிகரி'யின் இரண்டு நூல்கள்





'நிகரி' - சரிநிகரைச் சேர்ந்த சிலரும் வேறு சில நண்பர்களும் இணைந்து உருவாக்கிய ஒரு வெளியீட்டமைப்பு. இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளது. இரண்டும் கவிதை நூல்கள். ஒன்று அஸ்வகோஸின் 'வனத்தின் அழைப்பு', மற்றையது எம்.கே.எம்.ஷகீப்பின் மொழிபெயர்ப்புக் கவிதைகளின் தொகுப்பு 'நாளை இன்னொரு நாடு'. அஸ்வகோஸ் - நூல் வெளிவரும்வரை யாரென்றே அறியப்படாதிருந்த யாழ்ப்பாணத்துக் கவிஞர். சரிநிகருக்கு மட்டும் எழுதியவர். யுத்தச்சூழலில் அகப்பட்டுக்கொண்டு வித்தியாசமான கவிதைகளைத் தந்தவர். நல்லபல நூல்களை வெளியிடவிருக்கும் 'நிகரி'யுடன் சரிநிகர் முகவரியில் தொடர்பு கொள்ளலாம், நூல்களின் விலை: 'வனத்தின் அழைப்பு - 60/=, 'நாளை இன்னொரு நாடு' - 50/=

## எங்கள் தாயகமும் வடக்கே - ஒலிப்பதிவு நாடா




வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு, வடக்கு முஸ்லிம்கள் தொடர்பான தமது ஆக்கபூர்வமான பணிகள் தொடரில் ஒலிப்பதிவு நாடாவொன்றை வெளியிட்டுள்ளது. 'அகதி' சஞ்சிகை, நூல்வெளியீடுகள், கண்காட்சிகள் என பல வரலாற்றுப் பதிவுகளைச் செய்து வந்துள்ளது. 'இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்' என்ற பொதுத் தலைப்பில் பல தொகுதிகளை வெளியிட்டும், வெளியிடவும் உள்ளது. தொகுதி -1 அறிமுகமாகவும், முல்லைத்தீவு முஸ்லிம்கள், முசலி முஸ்லிம்கள், மாந்தை - நானாட்டன் முஸ்லிம்கள் எனும் தலைப்பிலான நூல்களாகவும் வந்துள்ளன. வவுனியா முஸ்லிம்கள், மன்னார் தீவு முஸ்லிம்கள், யாழ்ப்பாண முஸ்லிம்களும், கிளிநொச்சி முஸ்லிம்களும் ஆகிய நூல்களும் வெளிவரவுள்ளன. இவ்வரலாற்றுத் தொகுப்புக்களை கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் எழுதியுள்ளார். இவர் தற்போது நோர்வேயில்இலங்கை அகதிகள் தொடர்பான ஓர் ஆய்வுக்கற்கையை மேற்கொண்டு வருகிறார்.

ஏழு வருட கால அகதிவாழ்வில் வடக்கு முஸ்லிம்கள் தங்கள் வரலாற்றை மிக நிதானத்துடன் மீளாய்வு செய்திருக்கிறார்கள். செய்து வருகிறார்கள். தற்போது வெளிவந்திருந்திருக்கும் இவ்வொலிப்பதிவு நாடாவும் அவர்களின் ஒரு பதிவாகும். இளைய அப்துல்லாஹ்வின் கவிதை யாக்கத்துடனும், குரல்வடிவத்துடனும் வந்துள்ளது. வெளியேற்றப்பட்ட வரலாறு, இஸ்லாமிய வரலாற்றுடனான ஒப்பீடுகள் என கவிதை சொல்லப்பட்டிருக்கிறது. நிறைய அரபுச்சொற்கள் விரவிக்கிடப்பதால் பயன்கள் சுருங்கிவிடலாம். முஹம்மது மனாப்தீன் நெறியாள்கை செய்திருக்கும் இவ் ஒலிப்பதிவு நாடாவை இம்முகவரியில் பெறலாம்.

**வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு,**
**15 A, ரோஹினி வீதி, கொழும்பு - 06**

## விடியலின் மறுபிரசுரங்கள்




அண்மைக்காலமாக 'விடியல் பதிப்பகம்'' (இந்தியா) நல்ல நூல்களை வெளிக்கொணர்வதில் மிக ஆர்வமாகச் செயற்படுகின்றது. 97ல் குறித்துச் சொல்லத்தக்க புத்தகங்களை விடியல் பதிப்பகமே வெளியிட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஈழத்தவர்கள் சிலரது நூல்களையும் விடியல் வெளிக்கொணர்ந்திருக்கிறது. சோலைக்கிளியின் 'பனியில் மொழி எழுதி...', ரவியின் 'செட்டை கழற்றிய நாங்கள்' என். ஆத்மாவின் 'மிக அதிகாலை நீல இருள்' ஆகியன விடியலின் வெளியீடுகள்தான்.

விடியலின் இந்த வெளியீட்டுத் தொடரில் ஈழத்தின் அரசியல் இலக்கியம் பேசும் இரு முக்கிய நூல்கள் மறுபிரசுரமாயிருக்கின்றன. ஒன்று

→ 13

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வழிந்தோடும் அந்த ஓவியம்..

முத்து. இராதாகிருஷ்ணன்

அரசனின் படைகள்

நகரத்தொடங்குவதற்கு ஆயத்தமாக இரத்தக்காட்டேறிகளும் உயிர் குடிக்கும் வவ்வால்களும் வானமெங்கும் பறந்தன. அவற்றின் ஊளைச்சத்தமும், சிறகுகளின் விசிறல் சத்தமும் காற்றில் கலந்து அலை அலையாக ஓலங்களை எழுப்பியது. காட்டேறிகள் எங்கும் பறந்து வந்து குதித்தன. குதித்த இடத்தில் அகப்பட்டவர்களை நித்திரையில் கிடந்தவர்களை, எழுந்து ஓடியவர்களை குறையுயிராக கிழித்தெறிந்தன. குடல்கள் மரங்களிலும், வீடுகளிலும் எங்கும் பரவி துடித்துக்கொண்டிருந்தன. அவை சிதறடித்த இரத்தம் வானமெங்கும் வியாபித்துக்கிடந்தது. ஆங்காங்கே சதைத் துண்டுகளும் கறுப்பாக முகில்களாக மாறி குமைந்து கிடந்தது. அவை எழுப்பிய அவலச்சத்தங்களின் அதிர்வுகளால் கீழ்திசையில் சூரியன் வெளிவரத்தொடங்கினான்.

ஓலங்கள் தொடர்ச்சியாகி காதுகளில் புகுந்து மண்டையைத்தாக்க அந்த அதிகாலை வேளையில் யுகேது உறக்கம் கலைந்து எழுந்தான்.

ஓ.. ஒவ்வொரு நாளும் இதேதான். சத்தங்கள் காதுகளில் புகுந்து வெளிவர மறுத்தன. கைகளால் காதுகடைளப் பொத்திக் கொண்டவன். கண்களைத் திறந்தான். முன்னே அந்தக்களம் வியாபித்து நின்றது. அது உயர்ந்து கொண்டே சென்றதாக அவன் எண்ணினான். அவனது இரத்தமும் வேர்வையும் அதில்தான்.

கைகளால் மெல்ல வருடிப்பார்த்தான். கரகரப்பாக கிடந்தது. முன்பு அது கரடுமுரடானதாக காணப்பட்டது. பிறகு அவன்தான் அதனை சாந்து பூசி மட்டமான பரப்பாக்கியிருந்தான். இப்போதும் ஓரளவு கரகரப்பாக காணப்படுவதற்கு அதன்மேல் அவன் பூசியிருந்த வர்ணங்களும் காரணமாயிருக்கலாம். அதில் அவன் தீட்டியிருந்த வர்ணங்கள் வழிந்து சிவப்பும், பச்சையும் மண்ணிறமுமாக ஒன்றுடன் ஒன்று கலந்து முயங்கி வண்ணச்சிதறல்களாக உருமாறி நின்றன.

கால்களை நன்றாக நீட்டி சோம்பல் முறித்துக்கொண்டான். கால்களுக்கருகில் வண்ணங்கள் குழைத்தபடி சிறிய கலயங்கள் தட்டுப்பட்டன. தூரிகைகள் யாவும் எண்ணெய்யில் ஊறி சோர்வாக கிடந்தன.

ஓ.. இன்னும் எவ்வளவோ உள்ளது. எல்லாவற்றையும் முடிக்க இன்னும் எவ்வளவு காலம் வேண்டுமோ. யுகேது பெருமூச்சொன்றை மெல்ல வெளியேற்றினான். விரைவில் முடிக்க வேண்டும். ஆனால், ஓவியம் வரவரப்பெரிதாக மாறிக்கொண்டிருந்ததே தவிர முடியவில்லை. அது அதன் முடிவு தெரியாத ஒரு ஓவியம். எமது வாழ்வைப்போன்று. அவனது கைகள் மரத்துப்போய்விட்டன. சிலவேளைகளில் தூரிகைகளுக்குப் பதிலாக அவனது கைகளையே பயன்படுத்தத் தொடங்கினான். விரல்களும் தேய்ந்து கட்டையாகிக்கொண்டு வந்தது. ஓவியம் முடியவில்லை.


வெளியே காட்டேறிகள் கெக்கலிட்டு குதிக்கும் சத்தம் ஆங்காங்கே இன்னும் கேட்டுக்கொண்டிருந்தது. ஓ.. அரசனின் படைகள் இன்னும் சில நாட்களுக்குள் இங்கு வந்து விடும். அதற்குள் முடிக்க வேண்டும். அவன் பரபரப்பாக எழுந்தான்.

தட்டுக்களை எடுத்துவைத்து வர்ணக் கலயங்களில் இருந்து வர்ணங்களை எடுத்து தட்டுக்களில் வைத்து குழைத்தான். சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் ஓரங்களில் இருந்த ஒவ்வொரு வர்ணமும் தூரிகையால் இழுபட்டு நடுவில் சேர்ந்து குழைந்தன. தூரிகையை எடுத்து அதில் தோய்த்து அந்த ஓவியச்சுவரில் பூசினான். சுவரில் தீற்றலாக செங்கருமை நிறம் புலப்பட்டது.

சிவப்பும் கறுப்புமாக அந்த நிறக்கலவை சுவரில் பட்டு பளபளப்பாக்கியது. அவன் அந்த கரும் வண்ணத்தின் ஓரங்களை நோக்கினான். அது அகன்று கொண்டே சென்றது. ஓ.. அதன் கரைகளில் புல்லுகள் முளைத்திருந்தன. நடுவில் குண்டும் குழியுமாக ஒரு பாதை சென்றது. அதில் சனங்கள் சாரிசாரியாக நகர்ந்து கொண்டிருந்தனர். சைக்கிள்கள் பெரும் பொதிகளை சுமந்து கொண்டு கிறீச்சிட்டபடி நகர்ந்தன.

கூட்டம் கூட்டமாக குடும்பங்கள் குஞ்சு குருமன் என்று எல்லோரும் நடையில் போய்க்கொண்டிருந்தனர். அவர்களது கண்கள் பூஞ்சைபிடித்து ஒளியிழந்து வானத்தையே வெறித்து நோக்கிக்கொண்டிருந்தன.

அதில் ஓ... அவனும் போய்க்கொண்டிருந்தான். அது இலக்கற்றபயணம். எங்கும் உயிரைச்சுமந்தபடி சனங்கள். ஆனால் உயிர் இருக்கும் வரை பொருட்களும் தேவை என்பது அவர்கள் ஒவ்வொருவரும் கொண்டு சென்ற பொதிகளில் இருந்து தெரிந்தது. சைக்கிள்கள் சிறிய ட்றக்டர்கள் என்பவற்றில் வீட்டுத்தளபாடங்கள் வரிசை வரிசையாக போய்க்கொண்டிருந்தன.



தட்டுமுட்டுச்சாமான்கள், அலுமாரி, தைலாப்பெட்டி, சுழகு, இப்படி தங்களுடைய தேட்டம் எல்லாம் அவரவர் வசதிக்கேற்ப வாகனங்களில் போய்க்கொண்டிருந்தன. ஒன்றும் இல்லாமல் ஒரு உரப்பையுடன் போனவர்களும் பலர். எங்கும் மக்கள். தெருக்கள் எல்லாம் பூச்சிகள் போல தலைகளே தெரிந்தன. முகம் தெரியாத அந்த சூழ்நிலை அவர்கள் எல்லோரையும் துரத்திக்கொண்டிருந்தது. எல்லாப்பக்கத் தாலையும் கலைபட்டுக் கலைபட்டு நடுவில வந்து கொஞ்சக் காலம் குழுமிக்கொண்டிருந்த சனங்கள் இப்ப திரும்பவும் ஓடவேண்டி வந்திட்டுது.

அவன் சைக்கிளை மெல்ல உருட்டினான். அவன் மட்டுமல்ல எல்லோருமே அப்படித்தான் போகமுடிந்தது. மூன்று பெட்டிகள் பின்னே சைக்கிள் கரியரில் கட்டப்பட்டிருந்தன. கான்டிலில் பக்கத்துக்கு ஒவ்வொன்றாக இரண்டு பைகளில் துணிமணி. கான்டிலுக்கு மேல ஒரு வாளிக்குள்ள தட்டுமுட்டுச்சாமான். ஒரு கையால் இறக்கிப்பிடித்து முன்னோக்கி அமத்திக்கொண்டுதான் உருட்ட முடிந்தது. கொஞ்சம் அசந்தால் பின்புறம் இருந்த பாரத்தில முன்சில்லு தூக்குப்பட்டு கவிழவேண்டியதுதான்.

என்ன நடக்கப்போறதெண்டு தெரியேல்ல. நேற்று பகல் சாப்பிட்டதுக்கு பிறகு வயிற்றுக்குள் எதும் போகவில்லை என்பது... அடிக்கடி வயிற்றில் கிளம்பிய புகைச்சல் மூலம் வெளிப்பட்டது. ஆனால் சாப்பிடக்கூடிய நிலையும் இல்லை. சாப்பாட்டுக்கடைகளும் இல்லை. உணவும் இல்லை. சாப்பாட்டுக் கடையள் எல்லாம் மூடி கடைச்சாமான்களை ஏத்திக்கொண்டு ஓடிக்கொண்டிருக்க சாப்பாடு என்று எங்கு தேடுவது.

அவசரமா போன லொறி ஒன்றில் அடிபட்டு செத்துப்போன நாய் ஒன்று கரையில வீங்கிப்போய்க்கிடந்தது. நாயுக்குள்ள இருந்ததெல்லாம் இப்ப வெளியால வந்து... எல்லோரும் குமட்டலுடன் அதைப்பார்த்து விலத்தினர். அவனும் அதைப் பார்த்தான். இது புதினமோ, அருவருப்போ இல்லை. ஏனென்டால் இப்படி நாயளிலயும் பார்க்க மனிசர் தான் கூடப்பிரண்டு போயினம் என அவன் எண்ணிக்கொண்டான். நேத்து வீட்டால வெளிக்கிட்டு ஓட வேண்டி வந்ததும் இப்படி ஒரு சம்பவத்தால தான்.

ஷெல்ச் சத்தம் மிக அருகில் கேட்டவுடன் உடம்பெல்லாம் தூக்கிப்போட்டதுபோல் இருந்தது. ஓ..... பக்கத்திலதான் எங்கேயோ விழுந்திருக்கு. அவிழ்ந்த சாரத்தை இறக்கியபடி படலை தாண்டி ஒழுங்கைக்குள் புகமுன்னர் மூன்றாவது வீட்டில் இருந்து கூச்சலும் அவலச்சத்தங்களும் கூடவே வெடிமருந்து நாற்றமும் புகையும் எழுந்தது. ''இப்ப அங்க போகாதெங்கோ...'' அடுத்தது சிலவேளை வரும்'' என பின்னாலேயே அவனது மனைவியும் கத்தியபடி ஓடிவந்தாள் குழந்தையை தூக்கியபடி. அவன் சட்டை செய்யவில்லை.

மூன்றாவது வீடு களேபரப்பட்டது. மாமரம் கருகி குறண்டிப்போயிருந்தது. வீட்டின் முன் முகப்புப்பகுதி தொலைந்து விட்டிருந்தது....

பிடியுங்கோ.... இஞ்சால.... கொண்டு வாங்கோ... காருக்கு சொல்லுங்கோ... எனப்பலகுரல்கள் எழுந்து கொண்டிருக்க அழுகுரல்கள் எல்லாவற்றையும் மீறி ஒலித்துக்கொண்டிருக்க அந்த வீட்டு இருபது வயதுப் பையன் வயிறு கிழிந்து குடல் தொங்க அடங்கிப்போய்க்கிடந்தான். இரத்தம் சுவர் எல்லாம் சிதறிக்கிடந்தது. அது வழிந்து சுவரின் மஞ்சள் காவியுடன் சேர்ந்து கலந்தது.

யுகேது அந்த வர்ணக் கலவையை தூரிகையால் இழுத்து அந்தப்பரப்பில் மீண்டும் மீண்டும் பூசினான்.

''எப்படி என்றாலும் இதை முடிச்சுப்போட வேணும்...'' அவனது வாய் மெல்ல முணுமுணுத்தது. கைகள் கழன்று விடுவன போல் உழைவெடுத்தன. தூரிகையை கலயத்தில் போட்டு விட்டு மெல்ல எழுந்தான். காலையில் இருந்த சூழல் இப்போது இல்லை. அரசனின் படைகள் ஓய்ந்து விட்டன போலும், அல்லது அவை தமது பசியைப் போக்கிக் கொண்டு இருக்கவும் கூடும். காட்டேறிகளும் பறந்து குதிப்பது நின்று விட்டிருந்தது.

அவன் திரும்பி அந்தக் களத்தை நோக்கினான். ஓ.... இன்னும் எவ்வளவோ முடிக்க உள்ளது. இதை முடிக்காமல் இங்கிருந்து அகல்வதில்லை என்ற அவனது மனம் நொறுங்கத் தொடங்கியிருந்தமைக்கு அயலில் எவருமே இல்லை யென்பதுவும் ஒரு காரணமாகும். அந்த இடமே வரண்டுபோய் விட்டது. ஊர் முழுவதும் காலி... ஆங்காங்கே கைவிடப்பட்ட நாய்களும் சில கோழிகளும் கட்டறுத்த ஆடுமாடுகளும் சுதந்திரமாக வளவுகளிலும் நெல்வயல்களிலும் அறுவடை செய்து கொண்டிருந்தன.

ஓ.... எல்லாம்.... எல்லோரும்... போட்டினம்.... அவன் மட்டும் அங்க... இல்ல.... அவனும் போகவேணும். அதுக்கு இத முடிக்க வேணும். மனதில் புலம்பலுடன் மீண்டும் அந்த ஓவியத்தை திரும்பிப்பார்த்தான்... அதுவும் அவனை நோக்கியது. அவனது ஆதுரமான பார்வையில் அது கரைந்தது. கண்கள் குளமாகின. ''என்னை குறையாக விட்டுப் போய்விடாதே'' என கண்களால் அரற்றியது. அதன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

முதலில் நிறமற்றதாக பிறகு மெல்லிய நீல நிறமாக மாறி வழிந்து வந்தது. தூரிகையால் அதனை எல்லாவிடத்துக்கும் யுகேது பூசினான். அவர்கள் எல்லோரும் அதனை ஏந்தி முகங்களில் பூசினர். சில பேர் அண்ணாந்து வாயைத் திறந்து நாக்கை நீட்டி அதனை சுவைத்து தாகத்தை ஓரளவு தணித்தனர். தூறல் இன்னும் பெருத்தது.... பெரு மழையாகப்பெய்தது.

பெருமழை இன்னும் வலுத்தது. குடைகளை விரித்து கவிட்டுப்பிடித்து மழை நீரை ஏந்தி குழந்தைகளுக்கு கொடுத்து தாகத்தையும் பசியையும் போக்க முனைந்தனர். இன்னும் தட்டுக்கள், பாத்திரங்களை ஏந்தி நீரை சேகரிக்கவும் பலர் முனைந்தனர். மழை குறைவதும், கூடுவதும், தூறுவதுமாக இருந்தது. விட்டுவிட்டு ஷெல் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. ஒதுங்குவதற்கு எந்தவிதமான இடமும் இல்லை. சனங்கள் மிகப்பெரிய ஊர்வலமாக நகர்ந்து கொண்டிருந்தனர். அவர்களது உள்ளத்தில் இருந்த துயரமும் வெம்மையும் அந்த மழை நீரில் நனைவதை பொருட்படுத்தவில்லை. மிக மிக மெதுவாக தொப்பலாக நனைந்தபடி நகர்ந்தனர்.

ஓ... இன்னும் கைதடிப்பாலத்துக்கே வரவில்லை. நேற்று மதியத்துக்கு பிறகு வெளிக்கிட்டது... அவன் கனத்துப்போன கைகளை உதறக்கூட முடியாமல் கிடந்தான். சைக்கிளை நிப்பாட்ட முடியாது. பிடிக்கச் சொல்லலாம் எண்டால் வெறுங்கையோட எவரும் இல்லை... சுற்றிவர சனங்கள் மிகமிகப்பாரமான மனசுகளோட துவண்டு துவண்டு... ''இது என்ன வாழ்க்கை'' சட்டன்று மனதில் ஆற்றாமை எழுந்தது. பெருங்குரல் எடுத்து கத்தவேண்டும் போன்ற உணர்வு எழுந்தது....

ஷெல் சத்தம், மழை சேறாகிப்போன பாதை... அதுக்குள்ள ஆளையாள் தேடுற குடும்பங்கள்.

''அம்மா பின்னால வாறா'', அப்பு . தம்பி அழுறான்.... கொய்யாவை பிடிக்கச்சொல்.. தங்கச்சி.. நிக்கிறதே.. இப்படி பலப்பல

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சத்தங்கள் குளறல்களாகவும் அவனுள் பதிந்தன. குழந்தைகள் பசியால் அழுது மயங்கிப்போயின. எங்க போறம் என்பது தெரியாமல் மிரளமிரள முழிக்கும் சிறுவர் சிறுமியர்.. ஓ... யாருக்குத்தெரியும் எங்க போறம் என்று... இப்ப இங்க இருந்து தப்பிப்யோட வேணும் என்பதுதான் நோக்கம். ரெண்டு பக்கமும் தரவைக் கரைகள் நடுவில் ஒடுங்கிய அந்தப்பாதை.. கூட்டம் மெல்ல மெல்ல நகர்ந்தது... இடையிடையே வாகனங்கள் நின்று நின்று தடங்கல்களைக் கூட்டின. அவன் மெல்ல கூட்டத்துடன் நகர்ந்தான். மனைவியையும், பிள்ளையையும் முன்னரே அனுப்பிவைத்தது எவ்வளவோ நல்லது என சிறிய அளவில் மகிழ்ச்சியும் அடைந்தான்.

விலத்துங்கோ, விலத்துங்கோ ஒரு கூட்டம் நிறை மாத கர்ப்பிணிப் பெண்ணை தூக்கியபடி தரவைக்கரையை நோக்கி ஓடியது. ஆரும் வைத்தியர்மார் இருந்தா தயவு செய்து வாருங்கோ, வாருங்கோ எனப்புலம்பியவாறு மழையில் நனைந்த கூம்பிய தலையுடன் அந்த வயோதிகத் தோற்றத்துடன் இருந்த இளம் குடும்பஸ்தன் கெஞ்சிக்கொண்டிருந்தான். யாரோ உறவினர் சேலைகளைக் கட்டி தற்காலிகமாக ஒரு ''லேபர்றூமை'' அந்த வயற்றரவைக்கரையில் உருவாக்கிக் கொண்டிருந்தனர். கூட்டம் சற்று நிதானித்து பிறகு நகரத்தொடங்கியது. கொஞ்சம் தள்ளி மீண்டும் நகர்ச்சி தடை பட்டது. அங்கு கதிரையில் இருத்தி சைக்கிளில் கொண்டு வரப்பட்ட பாரிஸவாத நோயால் பாதிக்கப் பட்ட வயோதிக தகப்பன் நிரந்தரமாக கண்ணை மூடி தரவைக்கரையில் பூவரஸ மரத்தடியில் இருத்தப்பட்டிருந்தார். அருகில் நின்ற மகனது முகத்தில் துயரத்தை விட ஒரு நிம்மதி இருந்ததை அவன் கவனித்தான். ஓம் இப்படியான இடப்பெயர்வுகள் கூட்டுக் குடும்பமாக இருந்த எமது நிலையை நிரம்பவும்தான் மாற்றிவிட்டன. அவன் பலமாக தலையை அசைத்தான். அவனில் மையம் கொண்டிருந்த புயலை ஒத்த அந்நினைவுகள் சற்று சிதறி விலகின.

நன்றாக உச்சிக்கு சென்ற சூரியன் தன் கிரணங்களால் அனைத்தையும் காய்ச்சிக்கொண்டிருந்தது. எங்கும் நிலவிய நிசப்தத்திற்கிடையில் எப்போதாவது கேட்கும் கெக்கலிப்புச் சத்தம் மட்டுமே... மீண்டும் இங்கு வரும்போது இருந்த அந்தப்பிரமையும் பயமும் அவனிடம் இருந்து நீங்கியிருந்தன. ''இனி அங்கே போக வேண்டாம்'' என கெஞ்சிய மனைவியின் முகம் இடையிடையே வந்துபோனது. நேற்று இங்கு மீண்டும் வந்தபோது இருந்த சூழ்நிலை மனதில் ஓவியமாக படிந்தது.

அந்த வீதி வெறிச்சென்று கிடந்தது. ஓ.. மூன்று நாட்களுக்கு முன் அந்த வீதி பட்டபாட்டை அவன் நினைத்துப்பார்த்தான். எல்லோரும் தமது ஊரை, பிறந்த இடத்தை விட்டு விட்டு ஓடிவிட்டனர். இப்போது எங்கும் அமைதி.

சனங்கள் இல்லை என்பதாலோ என்னவோ அரசனின் படைகளும் சற்று ஆறப்போட்டு விட்டன போலும் தமது நகர்வை. ஆனால் அவனால் இருக்க முடியவில்லை. அவனது ஓவியம் அவனை அழைப்பது அவனுக்கு புரிந்தது. அந்த ஓவியத்தை நிறைவு செய்ய வேண்டும். அந்த எண்ணமே அவனுள் கிளர்ந்தெழுந்தது. ஒரு மாதிரி அதை இதைச் சொல்லி பாலத்தில காவலுக்கு நின்றவர்களிடம் அனுமதியும் எடுத்துப்போட்டான்.

அண்ண போறதெண்டாப் போட்டு வாங்கோ. ஆனால், ஆக்கள் யாரும் இல்லை. ஏதும் காயம்பட்டா கிடக்கவேண்டியதுதான். பொறுமையாக கேட்டவன் பயமில்லாமல் தான் பயணப்பட்டான். ஆனால் வெறிச்சோடிய தெருக்கள் வயிற்றை என்னவோ செய்யத் தொடங்கி விட்டன.

வெறிச்சோடிய தெருக்களினூடாக பதுங்கி பதுங்கி அவனது ஊர்ப்பக்கம் வந்து விட்டான்... திறந்த படலைகளினூடாக ஒழுங்கைக்குள் நுழைந்தவன் கிளுவைக் கதிகால்களுக் கூடாக அவனது வீடு தெரிவதைக்கண்டு மகிழ்ந்து போனான். எந்த ஆளரவமும் கேட்கவில்லை. வீட்டை நோக்கிக் கால்கள் விரைந்தன.


முகப்புக்கதவுகள் முகமலர்ந்தன. கதவுகளைத் தள்ளித்திறந்தான். கண்கள் வேகமாக நுளைந்து ஓவியச் சுவரை நாடி அழைத்தது முடியாத அந்த ஓவியத்தில் லயித்து பரவசமடைந்தான். ''ஓ.... ரெண்டு நாள் காணும் இத முடிச்சுப்போடுவன்...'' கைகள் பரபரத்தன.... அந்த அமானுஷ்யப் பொழுதில் எல்லாவற்றையும் மறந்து ஒரு வேள்வியை நடத்தத்தொடங்கினான். தூரிகைகளும், வண்ணங்களும் அவனது கையில் நர்த்தனமிடத்தொடங்கின. அந்த வேள்வியில் திரும்ப ஊர்ப்பக்கம் போகவேண்டாம் என மன்றாடிய மனைவியும்... பிள்ளையும் உறவினரும் மறைந்து போக அந்த ஓவியம் ஆதுரமாக அவனை அழைத்து அரவணைத்தது.


....எல்லாம் மறந்து... யுகேது இயங்கிய அந்தக்கணத்தில் அரசனின் படைகள் நகரத்தொடங்கின. அத்திசை நோக்கி.

மேற்கில் சூரியன் இரத்தப் போர்வையில் முகத்தை மறைக்க முயல்கையில்.. பிரளயம் ஒன்றால் தான் சூழப்படுவதை யுகேது அறிந்து கொண்டான்.

அவன் தலைதெறிக்க ஓடினான். மேலே காட்டேறிகள் ஆயிரக்கணக்கில் பறந்து கொண்டிருந்தன. அக்கம் பக்கம் எல்லா இடமும் அவை குதித்து சிதைத்து எறிந்தன. இரும்பு எருமைகள் மதில்கள் வேலிகள் எல்லாவற்றையும் மிதித்து உழுதன. யுகேது ஓடிக்கொண்டிருந்தான்.... அவனது ஓவியத்தின் ஆதுரமான முகம் அவனுள் படர்ந்தது... கண்களில் கண்ணீர் திரையிட அது மெல்ல மெல்ல சிதைவடையத் தொடங்கியது. மனிதர்கள் எவருமேயில்லாத அந்தக்களம் கொடிய தீக்கங்குகளின் நாக்கில் அகப்பட்டிருந்தது.... எங்கும் கரும் புகை எழுந்து வானளாவச் சென்றது. அந்தப்பாலத்தின் மறுபக்கத்திலேயே அவன் நின்றான். தூரத்தில் அந்த ஓவியக் களம் ஒளியிழந்து சிதைந்து உருகிவிடுவதை அவன் உணர்ந்து கொண்டான். அவனது வாய் மெல்ல முணுமுணுத்தது.

''அரசனின் படைகள் வந்து விட்டன'' இறுகிய முகத்தில் வாய் திறந்து சத்தமாக பெருமூச்சொன்று எழுந்தது.....






**அமெரிக்கா** *(சிறுகதைகளும் குறுநாவல்களும்)*
**வ.ந.கிரிதரன்**
*வெளியீட்டார்கள்:- மங்கை பதிப்பக்கம்*
*38, த்ரான் கிளி*ஃ*பே, 510 டொராண்டோ,*
*ஒண்டாரியோ, கனடா M4H119*

ஏழு சிறுகதைகளையும், ஒரு குறுநாவலையும் கொண்டதே அமெரிக்கா, கனடாவில் நீண்ட காலமாக புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் வ.ந. கிரிதரனின் படைப்புக்களான இவை. செ. கணேசலிங்கனின் அறிமுகத்துடன் வெளிவந்திருக்கிறது.

ஒரு மா(நா)ட்டுப்பிரச்சினை,. சுண்டெலிகள் இரண்டும் கனமான சிறுகதைகளாகும். ஒரு மா(நா)ட்டுப்பிரச்சினை கதையில் மாடுகளை துண்டுபோடும் காசாப்புக்கடையிலிருந்து தப்பியோடி வரும் ஐந்தறிவு கொண்ட உயிரினத்தின் ஜீவமரணப்போராட்டமும் இயலாமையற்று வேடிக்கை பார்க்கும் மனிதக்கூட்டத்தின் வேடிக்கை பார்க்கும் தன்மையையும் படிக்கும் வாசகர்களின் கூடவே ஒன்றித்து போகுமாறு படைத்துள்ளார்.

சுண்டெலிகள் கதையில் கதையை நகர்த்தும் விதம் சலசலப்பின்றி மெலிதாய் ஓடுகின்றது.

ஒரு உயிரினத்தின் வாழ்தலுக்கான இருத்தலின் அடித்தளத்தை இறுதிவரையும் அடைதலுக்கான முயற்சியையும் வைராக்கியத்தையும் தொட்டு நிற்கிறது.

இக்கதைகள் இரண்டும் மற்றைய எல்லாக்கதைகளையும் தள்ளிக்கொண்டு பிரகாசிக்கின்றன. இதைவிட ''மான்ஹோல்'' என்ற கதை தெருவோர வாழ்வில் உழன்றே இறுதியில் அவன் வாழ்ந்த சாக்கடை ஒன்றில் மரணிக்கும் மனிதன் பற்றியது. எதிரே சட்டமியற்றும் கனடா பாராளுமன்றத்தை கொண்டு வந்து நிறுத்துகின்ற உத்தி ஆழமான கருத்தமைப்பு கொண்டதாகவுள்ளது.

''பொந்துப்பறவைகள்'' அன்னியநாடுகளுக்கு புலம்பெயர்ந்து வாழ்கின்ற தனிமைச் சூழலிலும் கூட இன்னும் விடுபட்டுப் போகாத யாழ் குடாநாட்டின் எச்சசொச்சங்களையும் அங்கு வாழும் யமேக்க நாட்டு கறுப்பின மனிதனின் சுயநலமற்ற தன்மையையும் சுட்டி வெட்கித் தலைகுனிய வைக்கிறது.

''மனிதமூலம்'' ஐரோப்பிய வாழ்வையும், களியாட்டங்களையும், இரவு நேர விடுதிகளையும், இனநிறபேதமற்று எல்லாம் கடந்து இவ்வீதிகளில் அலைந்து திரிவோரின் பாலியல் இன்பத்தேவைகளின் வேகத்தையும் காட்டுகிறது.

''கணவன்'' குடும்பவாழ்வியலின் திருமணத்திற்கு முன்னரான காலங்களை தேடிக் கொண்டிருத்தல், சந்தேகம் என்பவற்றை நிராகரித்தும், 'ஒரு முடிவும் விடிவும்' இந்தியப் படைகள் இருந்த காலத்தின் ஓர் நாளையையும் அவர்களால் பாலியல் வல்லுறுவுக் குட்படுத்தப்பட்ட ஒரு குடும்பப்பெண்ணின் அவல வாழ்வையும், சுற்றியுள்ள சமூகத்தின் முகங்களையும் காட்டுகிறார்.

''அமெரிக்கா'' 1983க்குப்பின்னர் சிறீலங்காவில் தமிழர்களுக்கெதிராக நடந்த கொடூரங்களும், புலம்பெயர்வாழ்வின் அவலங்களும், அமெரிக்க ஜனநாயகத்தின் உண்மையான முகத்தையும், அதன் அவலங்களையும் குறிப்பிடுகிறார்.

இது ஓர் குறுநாவல் எனக்குறிப்பிடப்பட்டாலும் கட்டுரைத்தன்மையான போக்கு ஆங்காங்கே காணப்படுகின்றது.

***பி.ரவிவர்மன்***

## விடியலின் மறுபிரசு......

'மரணத்துள் வாழ்வோம்..' 31 கவிஞர்களின் 82 அரசியல் கவிதைகளைக்கொண்டது. மற்றையது கோவிந்தனின் 'புதியதோர் உலகம்' (நாவல்), மரணத்துள் வாழ்வோம் ஈழத்திலக்கிய கவிதை உலகில் முக்கிய தடம்பதித்த நூல். 1985 நவம்பரில் முதற்பதிப்பு வெளியானது. சேரன், யேசுராசா, பத்மநாபா ஐயர், மயிலங்கூடலூர் பி.நடராசன் ஆகியோர் கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டிருந்தனர். முருகையனிலிருந்து விமல் வரை 31பேர் எழுதியிருக்கின்றனர். இலக்கியக்காரர்கள் நன்கறிந்த, மிக அரிதாக இருந்த நூல். இப்போது விடியலின் வெளிச்சம் பட்டிருக்கிறது.




மற்ற நூல் 'புதியதோர் உலகம்' - கோவிந்தனின் நாவல். சூசைப்பிள்ளை நோபட் எனும் இயற்பெயர் கொண்ட திருகோணமலை வாசி. டொமினிக், ஜீவன் கேசவன் எனும் பெயர்களால் அறியப்பட்டவர். புளொட் இயக்கத்தில் தீவிர உறுப்பினராக அங்கம் வகித்து இயக்க அராஜகத்தில் அதிருப்தியுற்று வெளியேறியவர். அந்த அதிருப்தியின் விளைவால் இயக்க அராஜகங்களை நாவல் வடிவில் இலக்கியமாக்கியவர். மே. 85ல் முதற்பதிப்பு வெளியானது. இரண்டாம் பதிப்பை அதன் முக்கியத்துவம் கருதி விடியல் வெளியிட்டிருக்கிறது. இதன் சிங்கள வடிவம் யுக்திய வார இதழில் மனோரஞ்சனால் செய்யப்படுகிறது. '1991 மே 17ல் விடுதலைப் புலிகள் இவரைக் கைது செய்த பின்னர் வேறெந்த தகவலும் இன்று வரையில்லை... என்ற நூலாசிரியர் பற்றிய தகவல் இந்நாவலின் முக்கியத்துவத்தை இன்னும் கூட்டுகிறது.

விடியலின் இவ்விரண்டு மறுபிரசுரங்களும் இலக்கிய ஆவணத் தொகுப்புக்கள். முந்திய பரம்பரையிலிருந்து புதிய பரம்பரைக்கு கிடைக்கச் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப்பணியில் 'விடியல் சிவா'வின் முக்கிய பங்கும் சுவிஸ் ரவியினதும், ரஞ்சினியினதும் ஒத்துழைப்பும், உழைப்பும் இருப்பதை அறிய முடிகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நஸ்ரத் படே அலிகான்: இடைவெளிகளை நிரவிச் செல்லும் மகாநதி!

யமுனா ராஜேந்திரன்

மனிதனின் பரவச அனுபவத்துள் பூமியில் கால்பாவி கடவுளை நாடிச் செல்வோர் அனைவருக்கும் நஸ்ரத் படே அலிகானைத் தெரியும். பாடகி 'மரிய கெல்லா' மாதிரி, பாடகன் 'பவரொட்டி' மாதிரி கிழக்கத்திய மனிதர்களின் கலைஞன் நஸ்ரத் படே அலிகான். தெய்வீக இசை என்றும், தெருக்களில் திரியும் மனிதர்களின் இசையென்றும் திட்டுத் திட்டாக இடைவெளி விட்டு விரவிக் கிடந்த நதியிடை நிலங்களை நிரவிச்சென்று ஜனசமுத்திரத்தில் கலந்த மகாநதி நஸ்ரத் படே அலிகான்.

நஸ்ரத் படே அலிகான் சர்வதேசியக் கலைஞன். மக்கள் பாடகன். மதநிற ஜாதீய பேதங்களைக் கடந்தவன். பன்னிரெண்டாம் நூற்றாண்டின் கலக இசைமரபான சூபிமரபின் (Sufi Tradition) இருபதாம் நூற்றாண்டுப் பிரச்சாரகன்.

நஸ்ரத் படே அலிகான் 1997 ஆம் ஆண்டு ஒகஸ்டு 16 இரவு 11.57 மணிக்கு மரணமுற்றான். தாரிக் அலி சொல்கிறபடி மனதுக்குள் அவன் ஏற்கெனவே கசியவைத்திருந்த ஈரத்தில் அந்நேரம் கண்ணீரின் உப்புக் கரித்தது. அம் மா கலைஞன் மறைந்து விட்டான். ஆயினும் அவன் விட்டுச்சென்ற 125க்கும் மேலான இசைத்தொகுப்புக்கள் (Albums) நமக்கு முன் இருக்கிறது.

நஸ்ரத் படே அலிகானின் இசைப்பங்களிப்பு பற்றிய உரையாடல்களில் இடம்பெறும் சில (i) சொற்றொர்கள், (ii) கருத்தாங்கங்கள், (iii) இசைமாதிரிகள், (iv) அனுபவப்பிரச்சினைகள் பற்றிய விரிவான விளக்கங்களை நாம் பூர்வாங்கமாகப் பெறுவதன் மூலமே அவரை நாம் முற்றாக விளங்கிக் கொள்ள முடியும்.

1. சூபி மரபு (Sufi Tradition)

2. கவாலி இசை (Quavali Music)

3. கலப்பிசை (Fusion Music or Mix)

4. பாடகனுக்கும் பாடலை அனுபவம் கொள்கிறவர்களாக பங்கேற்போருக்கும் உள்ள இணைவு (Union)

5. ஜீவித்தலுக்கும், மரணத்துக்கும் இடையிலான பரவசத்தை / துக்கத்தை வெளியிடும் உன்னதக்குரல் (A Unique Voice Moved Between Life and Death)

நஸ்ரத் படே அலிகானின் இசை உன்னதம் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளிலும் அவர் குறித்த அஞ்சலி உரைகளிலும் வலியுறுத்திப்பேசப் படும் விசயங்கள் மேற்குறிப்பிட்டவைதான். நஸ்ரத் படே அலிகானின் இசை ஒரே சமயத்தில் மதச்சார்பற்ற தன்மைக்கும் (Secular) மக்கள் பங்கேற்கும் இசைக்குமான உதாரணம் ஆகும்.

## 2.

ஆன்மீக ரீதியான உள்ளுணர்வை எய்வதற்கான இசைக்குறிப்புக்களை இஸ்லாமிய இசைவிற்பன்னர்கள் (Musicolosist) ஒன்பதாம் நூற்றாண்டிலேயே எழுதிவிட்டிருந்தார்கள். ஆனாலும் சூபி மரபினரின் வழித்தோன்றல்கள் இன்று பாடும் பாடல்களின் வடிவம் 'அமிர் குஸ்ராவ்' (Amir Khusrau 1253 -1325) அவர்களுடன் தான் துவங்குவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அமிர் குஸ்ராவ்' கவிஞரும் இசையமைப்பாளரும் ஆவார்.

சூபி மரபு ஒரு வாழ்க்கை முறையாகும். சூபி ஞானிகள் என்று இவ்வாழ்க்கை முறையை பின்பற்றுபவர்களை அழைக்கிறார்கள். கடவுளை அடைவதற்கான இடை மனிதர்கள், அல்லாவுடன் இணைவதற்கான வழியை இசைமூலம் விரிவாக்கும் துறவிகள்தான் சூபிமரபினர். (Inter mediaries and saints). அல்லாவை அடைவதற்கான இத்தகைய இடை மனிதர்களை, துறவிகளை அடிப்படைவாத இஸ்லாமிய நம்பிக்கையாளர்கள் (Fundamendalist Musilms) ஒப்புக்கொள்வதில்லை.

இவர்கள் பாடும் பாடல்கள் கவாலி எனப்படுகிறது. கவாலி பாடும் பாடகர்கள் கவால் (Quval) என்று அழைக்கப்படுகிறார்கள். கடவுளை அடைவதற்கான ஒன்றுகூடல் (Assembly For Listioning) எனும் கருத்தாக்கம் சூபிபாடல் சடங்கின் முக்கியமான அம்சமாகும். சூபிக்கள் தம் இசையை கடவுளுக்கு அர்ப்பணித்தவர்கள். இரந்து வாழ்பவர்கள். தமக்கு அன்புடன் மரியாதையுடன் தரப்படும் சொற்பக்காசுக்காக மனமுருகப் பாடக் கடமைப்பட்டவர்கள். பாடகன் பங்கேற்போருக்கான இத்தகைய ஒன்றுகூடலை 'சாமா' (Mah Mahfil -E Sama) என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

கவாலியின் பாடக்கட்டமைப்பு (Texture) என்பது பொதுவாக வடஇந்திய இந்துஸ்தானி இசைமரபுக்கும் தென்னிந்திய கர்நாடக சங்கீதத்துக்கும் பொதுவான ராகத்தையே அடிப்படையாகக்கொண்டது. வாத்தியக் கருவிகள் வட இந்திய இந்துஸ்தானி இசைக் கருவிகளிலிருந்து எடுத்துக்கொள்கிறது.

கவாலியில் மிகமிக அடிப்படையான கருவிகள் தபேலா, ஆர்மோனியம் மற்றும் கைகள்தான். இன்று அதிகமாக பாவிக்கப்படும் தபேலாவுக்கு முன்பாக மரபாக 'தோலக்' பாவிக்கப்பட்டு வந்தது. ஆர்மோனியத்திற்கு முன்பாக ஸாரங்கி பாவிக்கப்பட்டு வந்தது. தோலக்கில் விரல்களின் பாவனைதான் இருந்தது. தற்போது படர்ந்தபடியான கைகளின் ஓசைதான் தபேலாவில் எழுப்பப்படுகிறது. கவாலியில் இன்னொரு முக்கியமான அம்சம் சேர்ந்தால்தான் இசை முழுமைபெறும். அது பங்கேற்பவர்களதும், பாடகர்களதும் இணைந்த கரகோசம் (Claps) ஆகும்.

நஸ்ரத் படே அலிகானின் இசைவேர்கள் பிளவுபடாத ஒன்றுபட்ட இந்தியாவில் பரவி இருந்தது.

கவாலிப்பாடல்கள் தற்போது இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் பாடப்படுகிறது. இந்திய சினிமாக்களில் கூட கவாலிப்பாடல்கள் இடம்பெறுகின்றன. சினிமாப் பாடல்களில் கடவுளுடன் இணைதல் என்கிற அம்சம் தவிர்க்கப்பட்டு விடுகிறது.

கவாலிப்பாடல்கள் பிரதானமாக இரண்டு மொழிகளிலிருந்தான படைப்புக்களை எடுத்துக்கொள்கிறது. பர்ஸிய மொழியிலிருந்தும், ஹிந்தியிலிருந்தும் வளங்களைப் பெற்ற கவாலி தற்போது உருதுவிலும், பஞ்சாபி மொழியிலும் கூட பாடப்படுகிறது.

## 3

நஸ்ரத் படே அலிகானின் குடும்பம் பஞ்சாப் ஜலந்தர் மாவட்டத்தை வாழ்விடமாகக் கொண்டது. அலிகானின் மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அனைவருமே கவாலி பாடகர்கள். அலிகானின் தந்தையான உஸ்தாத் படே அலிகானும் ஒரு கவாலிப்பாடகர்.

இந்தியா, பாகிஸ்தான் பிரிவினையின் ஓராண்டு கழித்து 1948ஆம் ஆண்டு நஸ்ரத் படே அலிகானின் பெற்றோர் பஞ்சாப் ஜலந்தரிலிருந்து அப்போதைய பாகிஸ்தானில் இருந்த லைலாபூருக்கு குடிபெயர்ந்தார்கள். தற்போது அந்நகரம் பைசல்பாத் என அழைக்கப்படுகிறது. 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் 13ஆம் திகதி அலிகான் லைலாபூரில் பிறந்தார்.

நஸ்ரத்தை ஒரு மருத்துவராக பயிற்றுவிக்கவே அவர் தந்தை விரும்பினார். நஸ்ரத்துக்கு படிப்பில் இருந்த நாட்டத்தைவிடவும் இசையிலேயே ஆர்வம் மிகுந்திருந்தது. பள்ளிக்கூடத்திற்குப்போகாமல், தந்தைக்குத் தெரியாமல் கவாலிப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார் நஸ்ரத். நஸ்ரத்தின் 16வது வயதில் அவரது தந்தை மரணமுற்றார்.



தந்தையின் மறைவுக்குப்பின்னர் தனது மாமா முபாரக் அலிகானுடன் சேர்ந்து கவாலிநுட்பங்களைக் கற்றார். முபாரக் 1971 ஆம் ஆண்டு மரணமுற்றார்.

நஸ்ரத் படே அலிகான் ஆரம்பத்தில் பாகிஸ்தானில் மட்டுமே பாடிக் கொண்டிருந்தார். நஸ்ரத் படே அலிகானின் கவாலிப்பாடல்களின் சிந்தனைத்தளம் பஞ்சாபி சூபி மரபுதான். முபாரக் அலியும், நஸ்ரத்தின் தந்தையும் 1930ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் புகழ்பெற்ற கவாலிப்பாடகர்களாக இருந்தார்கள். அவர்களது சாதனையென்பது பஞ்சாபின் மாயசூபிமரபை வட இந்திய ராகத்துடன் இணைத்து புதிய இசைமாதிரியை உருவாக்கியதுதான். விவசாயிகளும் குறுநிலப்பிரபுக்களும் இவர்களின் பாடல்களைக் கேட்பதற்காக கிராமங்களை நோக்கி மாட்டு வண்டி கட்டிக்கொண்டு வருவார்கள்.

கவாலிப்பாடல்களின் அனுபவம் பரவசமும் உள்ளுணர்வும் நிறைந்த ஆன்மீக அனுபவம். கடவுளோடு இணையும் பரவசம் மட்டுமல்ல இது, வேறுபட்ட இரு பாலார்கள் இணையும் பரவசத்தையும் இந்தப்பாடல்களைத் தொடர்ந்து வரும் பங்கேற்பாளர்களின் நடனமும் கரகோஷமும் எழுப்புகிறது.

பஞ்சாபின் கவிதைமரபை/ மூன்று மாபெரும் கவிஞர்கள் ஆழப்படுத்தினார்கள். பதினேழாம் / பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த புல்லாஷா, வாரிஸ் ஷா, ஷா ஹுஸைன் போன்றவர்கள் அதியற்புதமான காதல் பாடல்களை யாத்தார்கள். அதனை அவர்கள் தெருக்களில் தொடங்கி எங்கெங்கும் பாடித்திரிந்தார்கள்.

புல்லா ஷா 1758 ஆம் ஆண்டு இறந்தபோது அவருடைய உடலை புதைப்பதைத் தடுத்தார்கள் மௌலவிகள். உடல் நட்ட நடுப்பகலில் சூரிய ஒளியில் கிடந்தது. இறுதியில் கூட்டத்திலிருந்த மக்களே சனாதனிகளை ஒதுக்கிவிட்டு அவரது உடலை அடக்கம் செய்தார்கள்.

தனது 65ம் வயதில் ஷா ஹுஸைன் மதுலால் என்கிற 18 வயது பிராமணப்பையன்மீது பைத்தியக்காரத்தனமான காதலில் வீழ்ந்தார். 'இந்தச்சிறுவனில் நான் கடவுளைப் பார்க்கிறேன்' என்றார் ஹுஸைன். அவன் மீதான கவாலிப் பாடல்களை தெருக்களில் பாடிக்கொண்டு திரிந்தார். இதன் மூலம் இரண்டு பக்கமும் இருந்த ஆச்சார மதவாதிகளின் கோபத்துக்கும், ஆத்திரத்திற்கும் ஆளாகினார். இந்த இருவருக்கும் இடையிலான ஆழ்ந்த காதலின் விளைவாக ஹுஸைன் 'மதுலால்' ஹுஸைன் எனும் கவியாக அறியப்பட்டார்.

பஞ்சாபின் சூபிக் கவிகள் ஆட்சியாளர்களுக்கு எதிராக இருந்தார்கள், ஆச்சார ரீதியான மதவாதிகளுக்கு எதிராகவும் இருந்தார்கள். பிறப்பினால் சூபிக் கவிகள் முஸ்லிம் மதத்தவராக இருந்தாலும் கூட, அவர்களது பாடல்கள் அனைத்தும் மதங்கள் விதித்த எல்லைகளையும் தாண்டிச்சென்றது. அது அதன் சாராம்சத்தில் பஞ்சாப் விவசாயிகளின் வாழ்க்கை பற்றிய மிகச் சரியான கலாசார வெளிப்பாடாக இருந்தது என்று அலிகானின் கவாலிப் பாடல்களுக்கான வேர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார் எழுத்தாளரும் இடதுசாரி அரசியல் செயல்பாட்டாளருமான தாரிக் அலி.

மரபு ரீதியான கவாலிப்பாடல்கள் நிகழ்வு என்பது (Performance) நான்கு - அல்லது ஐந்து மணிநேரம் வரை தொடரும். பின்னிரவு நேரத்தில் தொடங்கும் கவாலி, பங்கேற்பாளர்களின் பரவசமான கூச்சலுடன் அதிகாலை நிறைவு பெறும். கவாலி நிகழ்ச்சிகளுக்கு காகிதத்தில் எழுதப்பட்ட இசை வடிவம் என்பது இல்லை. அது ஒரு நிகழ்த்திக்காட்டல். பாடகனும், பங்கேற்பாளரும், படைத்த கடவுளும் இணையும் பரவச நேரம் அது. ராகங்களை மனப்பாடம் செய்வது போல, இசைநுட்பங்கள் மனதிலிருந்து வந்துவிடும் நேரம் அது.

நஸ்ரத் படே அலிகானின் இசை சோகமயமான, துன்புற்ற ஆன்மாவின் உன்னத இசை அதிர்வு என்று அவருக்கான அஞ்சலியில் குறிப்பிடுகிறார் தாரிக் அலி.

## 4

நஸ்ரத் படே அலிகானின் கவாலிப் பாடல்கள் எண்பதுகளின் மத்தியில் இந்திய துணைக்கண்டத்தையும் தாண்டி விரிந்தது. இசைக்கும் நடனத்துக்குமான உலக அமைப்பின் (WOMAD - World Organisation of Music and Dance) ஸ்தாபகரும் முன்னாள் ஜெனஸிஸ் (Genesis) இசைக் குழுப் பாடகருமான பீட்டர் கேப்ரியல் நஸ்ரத் படே அலிகானை மேற்கத்திய இசை வெளிக்கும் உலக சினிமாவுக்கும் அறிமுகப்படுத்தினார். Womad எனும் வார்த்தை உடனடியாகவே ஒருவருக்கு இன்னொரு சொல்லின் அர்த்தத்தையும், பரவசத்தையும்,

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாழ்க்கை முறையையும் ஞாபகப் படுத்துபவை. அவ்வார்த்தை Nomad. நாடோடிகள் நாடுகள் எல்லைகள் மொழிகள் தாண்டி பரதேசம் போகும் பயணிகளைக் குறித்ததே அச்சொல்.

பீட்டர் கேபிரியேலின் வோமாட் அமைப்பும் அவரது ரியல் வேல்ட் (Real World) இசைத்தட்டு வெளியீட்டு நிறுவனமும் அலிகானின் ஷா - இன் ஷா மற்றும் ஷாபாஷ் தொகுப்புக்களை 1989 ஆம் ஆண்டு வெளியிட்டது. தொடர்ந்து பீட்டர் கேபிரியேல் இசையமைத்து பரபரப்பை உருவாக்கிய படமான The Last Temptation of Christ இல் நஸ்ரத் படே அலிகானின் குரல் பாலைவனத்தில் ஒலித்தது. இயேசு கிறிஸ்துவின், உளக்கிளர்ச்சியையும் துயரத்தையும், பரவசத்தையும் தனது இசைக்குள் கொண்டு வந்தார் அலிகான்.

அவரது இசை உன்னதத்தை அகில உலகும் அறியச்செய்தவையாக அவருடைய சினிமாப் பிரவேசம் அமைந்தது. (1) சேகர் கபூரின் பண்டிட் குயின் (2) ஆலிவர் ஸ்டோனின் நேச்சுரல் பார்ன் கில்லர்ஸ் (3) ஹீன் பென்னின் டெட் மேன் வாக்கிங் போன்ற படங்களில் அவரது குரல் ஒலித்தது. (Bandit Queen / Natural Born Killers/ Dead Man Walking)

நேச்சுரல் பான் கில்லர்ஸ் படம் தொலைக்காட்சி பிம்பங்கள் [illegible]ரிமனிதனையும், முழுச்சமூகத்தையும் வன்முறைக்குள் மூழ்க வைத்த அமெரிக்க மிருக வெறி ரசனை குறித்தது. வரைமுறையற்று மனித ஜீவராசிகள் கொல்லப்படும் காட்சிகளில் சரிகமபதநி எனும் ஓலம் இருளைக் கிழித்துக்கொண்டு நமது நெஞ்சை ஊடுருவியது எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது.

பண்டிட் குயின் படத்தில் பூலான்தேவி பாலியல் பலாத்காரப்படுத்தப்படும் காட்சியில் பயங்கர துயரம் தோய்ந்த ஓலமும், கலவிக் காட்சிகளில் சந்தோசத்தையும், முழுகடித்த பரவக் குரலும், கூட்டுணர்வின் இருப்பால் பாடும் கவாலிப்பாடலும், படத்தின் ஆரம்பத்தில் நமக்குள் தெறிக்கும் ஆற்று நீர்த் திவலைக்குள் இன்னும் எனக்குள் வந்து போகிறது.

டெட் மேன் வாக்கிங் படம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியைச் சந்திக்கச் செல்லும் ஒரு சமூகநலப்பெண் கொஞ்சம் கொஞ்சம் அவன்மீது காதலும், பரிவும் கொள்வது பற்றியது. மரணமும், காதலும், வாழ்வும் எழுப்பும் உணர்ச்சிகளையும் தற்காலிகத்துக்கும் நிரந்தரத்துக்கும் ஆன உறவு குறித்த மன அவஸ்தையையும் அப்படத்தின் இசை சித்திரித்தது.

அவர் இசையமைத்த இறுதிப்படம் 'அவர் பியார் ஹோகயா' எனும் இந்திப்படம். ஐஸ்வர்யா ராய் நடித்த அந்தப்படத்தில் 'கய்ஸா யா பியார் ஹாய் அல்லா அல்லா' எனும் பாடலுக்கு நஸ்ரத் படே அலிகான் பாடி நடித்துமிருக்கிறார்.

பீரூஸ் ஸ்பிரிங்ஸ்டிபன், எட்டி வெட்டர் போன்ற புகழ்பெற்ற மேற்கத்தியப்பாடகர்களோடு இணைந்து பாடிய அலிகானை 1995 ஆம் ஆண்டு யுனெஸ்கோ அவரது இசைச்சாதனைக்காக பரிசளித்துக் கௌரவித்தது. இத்தாலியின் புகழ்பெற்ற பாடகரான லூஸிறோர் பவரொட்டி இவரது ரசிகர். இறப்பதற்கு சில நாட்களுக்கு முன் அவரோடு சேர்ந்து பாடுவதற்காக ஏற்பாடான நிகழ்ச்சி நிரல் நிறைவு பெறாமலேயே போய்விட்டது. ஐரோப்பியர்களோடு மட்டுமல்ல, இந்தியத்துணைக் கண்டத்தின் பிரபலமான இசையமைப்பாளர்களோடும் அவர் சேர்ந்து பணி புரிந்திருக்கிறார்.

அடுத்த இதழில் முடியும்...

# இது புதிய கவிஞர்களுக்கான பகுதி

## விசுவாசமற்ற காதலன்

காதலி!
இவ்விதம் உனை விளிப்பது கூட
சிரமம் தருவதாயின்
அவ் இடத்தை வார்த் தைகள் அற்ற
வெற்றிடங்களால் நிரப்பிவிடு,
அல்லது,
நீவேண்டாம் என ஒதுக்கிய குப்பைகளை
அதில் பரப்பிவிடு!

நீ வரும் போதும் சொல்லவில்லை
செல்லும் போதும் சொல்லவில்லை.
சொல்லாது சென்றதனாலேயே
உன் விலகல் நினைவு படுத்தப்படும்
பெருந்துயர் ஆனது.

வாழ்வு பற்றி
நீ கூறிய ஒரு சொல்லைத்தானும்
என்னால்
பிடித்து வைத்திருக்க முடியவில்லை.
நீநம்பிக்கை வைக்கமுடியாத காதலனாகவே
நானிருந்தேன் உனக்கு

நீ காதலில் கொட்டிய
கோடி கோடி வார்த்தைகளில்
ஒன்று தானும் எனக்கானதாக இருக்கவில்லை
நான்
விசுவாசமிக்க காதலனெனின்
உன் வார்த்தைகளை
என்னுடையதாக்கியிருப்பேன் போலும்

இல்லை
நான் ஒரு விசுவாசமற்ற காதலன்
உன்னை
காதலை
எதையுமே
நான் விசுவாசிப்பவன் அல்ல
அப்படிச் செய்ய முனைபவனும் அல்லன்.

வானில்
நட்சத்திரங்களுக்கிடையே பயணம் போகிறவன்
ஒழுங்கையில்
சேறு வழிந்தோடும் நீரில் கால்களை விசிறுபவன்
எல்லோரும் போனபின் ஒற்றைப்பாதையில்
தனியனாகப்
போக விரும்புபவன்
ஒரு போதுமே காதலிக்க முடிவதில்லை போலும்:
நீ நம்பு

அ.றஜீசன்

## வார்த்தை தவறி விட்டாள் கண்ணம்மா

நிலாவில் நடந்தன விரலின் கோடுகள்
மண் நொந்தும்
விரலின் கோடுகள் நடந்தன
வட்டங்களாகவும்
ஒரேயொரு புள்ளியாகவும்
மண்ணின் இடுக்கு வீங்கிட.

உயிரோடிருந்த உணர்விலும்
மற்றும் எல்லாவற்றிலும்
நான் எழுதிய கவிதை பிந்தியது.
இன்னும்,
பனிப்புழுதி உதட்டில் படிய
ஒரு முள்ளின் ஓவியத்தை ரசிப்பதுவாய்
உயிரோடு இந்தவுணர்வு வருமே
அதுவரைக்கும் என்ன செய்வது.

தேடி நடந்திட்ட காட்டு வழி,
மரம் முறிந்த ஓசை
எல்லாவற்றையும் பயத்துடன்
தூக்கிக் கொண்டு போகும் உணர்வு வருமே.
அதில்,
உள்ளம் தீர்ந்து போகும் போது
அங்கு யாரோ அழைப்பர்.
இந்த இரவினில்
அந்தப் பாடலுடன்
அவளைவல்வுறவு கொண்டு சுட்டுப்போட்டாலும்
அள்ளிப், பூசிய
நிலா முகக்காரி மறந்து போவாளா?

மரக் கொப்பிலிருந்து வரட்டும்
தாவணியும், பாவாடையும்,
இனி
என் நிர்வாணத்தை மூடியேயாக வேண்டும்,

அந்த மண் போல்
இடை வெளிதந்து காற்று நுழைந்திட
வழியிருக்கவில்லை,
மரங்களே முந்திக் கொண்டன
பின்
நத்தைக்குழி என்னிலேறிவிடும்,
காக்கைகளும் கூவும்
என்றாகிப் போனது வாழ்வு.

பைசால் - பொத்துவில்

## எனை மாய்க்கும் கொடூர முகங்கள்

வெக்கை தாவி,
சுள்ளெனச் சுட்டெரித்துப் போகுது
பின்னேர வெயில்
நேற்றும் இப்படித்தான்
இரவு எட்டு மணிக்குப் பின்
முகில் பைகள் பிய்ந்தது
கொட்டெனக் கொட்டித் தீர்த்தது மழை.

கூதலில் 'பெற் சீட்டை' இழுத்துப் போர்த்துப்படுத்தும்
ஒர துளி நித்திரை கூட வரவில்லை
அவன் நினைவு
கொத்துக் கொத்தாய்
எனக்குள் விழுந்து மாய்த்தது.
எப்படி மறப்பேன்?

என் நெஞ்சுப் பையினுள் புதைந்து கிடந்த
அந்த அப்பாவி முகத்தைக் கூடப் பாராது
பர பரவென இழுத்துச் சென்ற
அந்தக் கொடூர முகங்களையும்
அந்த நாச கைகளையும்
எப்படி எப்படி மறப்பது?

இப்ப,அழுகை
பெரு மூச்சு
மிக ஆவேசம்
இவற்றை விட என்னால்
என்ன செய்ய முடியும்?

இன்னும் இப்படி வாழனுமா?
என் மென்மையையும்
பெண்மையையும்
ஒரு பக்கம் மூட்டைகட்டி
அந்தக் கொடூர முகங்களுக்கும்
அந்த நாச கைகளுக்கும்
ஒரு முடிவு கட்டக் கூடாதா?

ஆனால்,அந்தக் கூர்க்கத்தி விளிம்பில்
என் பகல் கனவு எம்மட்டு?

த.மலர்ச்செல்வன்

## அது தானே நான்!

உனக்கு ஞாபகம் இருக்கிறதா?
நான் ஒரு
தொட்டாச் சுருங்கி என்று

மென்மையான இழைகள்
மட்டுமே
என் இதயத்தைச் சுற்றி என்று.

என்னால்
ஆற்றிக்கொள்ள இயலாத தருணங்களில்
உன் பார்வையில்
நான்...

மூர்க்கமானவள்
'வினை' பிடித்தவள்
அஃறிணைப் பிறப்பு....

எப்படியெனினும்...

உன் வறட்டுப் பிடிவாதத்திற்கும்
ஆழ் மனத் தாக்கங்களுக்கும்
உன் காயங்களுக்கும்
உத்தியோகத்திற்கும்
கௌரவத்துக்கும்
எதிர்பார்ப்புகளுக்கும்

என்னைத் தானே
இரை கொள்கிறாய்!

நிஜமாகக் கூடி
என் கனவுகளைக் கூட
ஒடித்து விட்டு
அதிலும் கூட திருப்தியுறாது...

எது தான் உன்னைத் திருப்திப்படுத்துமோ?...

உண்மை அன்புக்கு ஏங்குவதாக
அன்று சொன்ன நீ
இன்று
என்னிடமிருந்து அதைப்பெற்றும்
எனக்குரியதைத் தர
ஏனோ மறுகுகிறாய்...

சற்றே திறந்த ஜன்னலுக்கு வெளியே
ஒளியையும் மீறின
சந்தோஷ முகங்கள்...

என் வாழ்க்கை ஏனோ
இழப்புகளுடனும்
ஏக்கத்துடனும்.
ஆயினும் -

உன்
கூர் மூக்கின் அழகில்
சிறுபிள்ளைத் தனங்களில்
உதாரண குணங்களில்
உனக்குள்ளான மனிதனை
சலித்துத் தேடி.....

உன்னில் லயித்து
நீ தரும்
சந்தோஷங்களில் கலந்து
அதே புன்னகையுடன்
உனக்காகவே என்றும்.....

யாழ் - ஆதிரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிலந்தியின் உருவகிக்கப்பட்ட பெண்!

நவம்பர் 15 தொடக்கம் 23 வரை, கொள்ளுப்பிட்டி ஹெரிடேஜ் கலா பவனத்தில் நிலந்தி வீரசேகரவின் **''உருவகிக்கப்பட்ட பெண்''** என்ற தலைப்பிலான ஓவியக் கண்காட்சி ஒன்று இடம் பெற்றது.

கண்காட்சி அரங்கில், பார்வையாளர்களை நீண்ட போர்வை வரவேற்கின்றது. அப்போர்வையில் காலங்காலமாகப் பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட பாரம்பரியப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் என்பன சிதறிக் கிடக்கக் காணப்பட்டன. நிலந்தி சொல்கிறார், ''கண்காட்சியைக் காண வரும் நீங்கள், இவற்றையெல்லாம் உங்கள் மனதிலிருந்து தூக்கி எறிந்து விடுங்கள் பின்னர் தெளிவாக கண்காட்சியைப் பாருங்கள்.''

நான்
எப்போது
நிலந்தி வீரசேகரவாவது?



அவர் கூறியது போல் ஓவியங்களில் பெண்கள் தெளிவாக இருந்தனர். ''எனது படைப்புக்களூடாக நான் என்னைத் தேடிச் செல்கிறேன்.'' ''நான் நிலந்தி. எனது ஊர் கேகாலையின் ஹெட்டிமுல்லை. சிறுவயது முதல் என்னை எல்லோரும் வீரசேகரவின் மகள் என்றே அழைத்தனர். பாடசாலையில் சேப்பாவின் தங்கை எனவே அழைக்கப்பட்டேன். (சேப்பா என்பது எனது அண்ணன்) பல்கலைக்கழகத்தில் நான் எவருடனாவது நட்புக் கொண்டால் என்னை குறிப்பிட்டவரின் 'ஆள்' அல்லது 'சரக்கு', 'துண்டு' எனக் கூறுவர். என்றைக்காவது ஒருநாள் நாம் எல்லோரும் அழகிய மாலைகளைப் போட்டுக் கொண்டால், கடும் நிறங்களிலான உடைகள் அணிந்தால், அழகாக முடி திருத்தினால், பாவாடை கொஞ்சம் குட்டையாக இருந்தால்- கொஞ்சம் அழகாக இருந்தால், கட்டாயம் யாராவது எதையாவது நக்கலாகக் கூறுவர். என்றாவது ஒருநாள் நான் திருமணம் முடிப்பின் என்னை 'குறிப்பிட்டவரின்' மனைவி என்பர். பிள்ளைகள் பெற்றால்,



அப்பிள்ளைகளின் தாய் என்பர். நான் எப்பொழுது நிலந்தி வீரசேகரவாவது? எனது ஓவியங்கள் இவ்விடயம் தொடர்பாக நான் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களாகும்.'' என்றார்.

ஓவியங்களில் வன்முறைகள், பாலியல் வல்லுறவுகள், கலாசார அடிமைத்தனங்கள் என பல விடயதானங்கள் பரவிக்கிடக்கின்றன. கையாண்டிருக்கும் வன்மையான சிகப்பு நிறங்கள், சித்திரிக்கப்பட்டிருக்கும் பெண்ணின் அங்கங்கள் இவற்றை தெளிவுறுத்துகின்றன. பெரும்பாலான ஓவியங்கள் பெண்களுக்கெதிரான வன்முறைகளைப் பிரதிபலிக்கின்றமை தொடர்பாக வினவிய பொழுது ''ஆண் தலைமை சமூகத்தினால் பெண்களுக்கேற்படும் பலதரப்பட்ட வன்முறைகளை நான் சிறுவயது முதல் அனுபவித்துள்ளேன். அவை எனது வெளிப்பாடுகளாக வெவ்வேறு சந்தர்ப்பத்தில் வெவ்வேறு காலகட்டங்களில் வெளிப்படுகின்றது. எவராவது பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்று இல்லையெனக் கூறுவார்களாயின் அது சுத்தப்பொய் என்றே கூற வேண்டும். பெரும்பாலான சமயங்களில் ஆணின் உடமைகளாக எம்மை அடையாளப்படுத்துகின்றனர். ஆண்களின் கீழ்ப்படிவை நாம் ஏற்க வேண்டும் என்கின்றனர். எம்மாலும் சுயதீர்மானங்கள், முடிவுகள் எடுக்க முடியும். நாம் பல சந்தர்ப்பங்களில் அந்த உரிமையை இழந்து விடுகின்றோம். இதுவும் பெண்களுக்கெதிரான வன்முறை என்றே நான் கருதுகிறேன். இதை தெளிவுபடுத்தும் முயற்சியே இது'' என்றார்.

''உருவகிக்கப்பட்ட பெண்'' தொடர்பாக, நீங்கள் கூறவிரும்புவது யாதென வினவியபொழுது ''ஓவியத்துறையில் வெவ்வேறுபட்ட கோணங்களில் பெண்கள் சித்திரிக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக, லியனாடோ டாவின்சி எனும் ஓவியர் மோனாலிசாவை சித்திரித்தது தமக்குத் தேவையான முறையிலாகும். அதற்கு அவர் தேவையான அழகு, நிறம், உருவமைப்பு என்பவற்றைப் பாவித்துள்ளார். அனைத்துக் கலைஞர்களும் இம்முறையில் தான் தமக்கு உரியதான நீள, அகலங்களுக்கேற்ப ''பெண்களை உருவாக்கியுள்ளனர்''. நான் ஆண்களால் ஏற்படுத்தப்பட்ட 'உருவத்தை' உடைத்தெறிந்து பெண்ணாக பெண்ணைப் பார்ப்பதற்கும், பெண் என்ற ரீதியில் அவளை உருவாக்கவும் முனைகின்றேன்'' என்றார். அவரது முயற்சியின் வெற்றி ஓவியங்களில் செம்மையாக புலப்படுகின்றது. லியனாடோ டாவின்சியின் 'மோனாலிசா' ஓவிய சம்பிரதாயம், மற்றும் பெண் எனின் நிர்வாணம் எனும் வெளிப்பாடு போன்ற எல்லைகளை மீறியவையாக நிலந்தியின் ''உருவகிக்கப்பட்ட பெண்'' அமைந்திருந்தது. நிலந்தி எனும் இளம் ஓவியக் கலைஞரின் பார்வையில் பெண் சித்திரிப்புக்கள் 'பெண்'ணாகவே சித்திரிக்கப்பட்டிருந்தன. வேறுபாடும் பரந்துபட்ட ஆக்கத்திறனும் கொண்ட நிலந்தியின் ''உருவகிக்கப்பட்ட பெண்'' பெண்களின் அவலம் தொடர்பாக பெண்ணியல் நோக்கிலான சிறந்தொரு வெளிப்பாடு எனலாம்.

-ரட்னா

# வீசிதெல: இன்னொரு பார்வை! அதிகாரத்துடன் சமரசம்!

சரிநிகர் இதழ் 137 இல் வீசிதெல பற்றிய குறிப்பேட்டில் சத்யா எழுதிய குறிப்புகளை வாசித்தபின் அது பற்றிய என்னுடைய சில அவதானங்களைத் தரலாம் என நினைக்கின்றேன்.

வீசிதெல முற்றிலும் அதிகாரத்துடன், அதனைக் கொண்டுள்ளவர்களுடன் சமரசம் செய்து கைகுலுக்கும் ஒரு சினிமா வெளிப்பாடு ஆகும். பின்தங்கிய கிராமத்தின் மோசமான வாழ்நிலையும், அவர்களை ஒடுக்கும் அரசாங்கமும் இளைஞர்களை புரட்சி செய்யும் தேவைகொண்டவர்களாக மாற்றுகின்றது. கிராமத்தின் மத்தியில் உள்ள விவசாயியின் மகன் அப்புரட்சியில் பங்கு கொள்ளாமல் அதனை மூர்க்கமாக எதிர்க்கும் பொலிசில் சேரவே விரும்புகிறான். வீசிதெலவில் ஒரு காட்சியில் புரட்சி செய்ய விளையும் இளைஞர்களுக்கு



'செய்யாதே' என ரத்வத்தை பாணியில் அறிவுரையும் செய்கின்றான். அதன் பின் பொலிஸ் அதிகாரி வீட்டில் எடுபிடியாக தொழில் செய்கின்றான். அப்போது ஒரு காட்சி வருகின்றது. அவனும் அவனின் எஜமானின் மகள்மாரும் ஒரு அழுகிப்போன இளைஞனின் சடலத்தைக் காண்கின்றனர். இதனை யார் செய்தது என எந்த ஒரு கேள்வியும் இல்லாது விடப்படுகின்றது. ஆனால், அடுத்த காட்சிகளில் அவன் பொலிஸ் படைக்கு புறம்பான விசேட படையில் சேர்கின்றான். அதனையிட்டு மிகவும் சந்தோசம் கொள்கின்றான். அவன் கிராமத்திலேயே புரட்சியின் தேவையிருக்கும் போது அதனை கொடூரமான முறையில் நசுக்கும் விசேட படையில் சேர்கின்றான். (இப்படை சத்யா சொன்னது போல ஊர்காவல் படை அல்ல) ஜே.வி.பி. காலகட்டத்தில் இத்தகைய படைகள் செய்த மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட கொடூரங்கள் எமது நினைவிற்கு வருகின்றன. இவர்கள் தமது சொந்த விருப்பு வெறுப்புகளிற்கு ஏற்பவும் ஆயுதத்தை பயன்படுத்தியமை வரலாறு. எம்பிலிப்பிட்டிய மாணவர் படுகொலை இதற்கு நல்லதொரு உதாரணம். இங்கே இவனும் தனது விருப்பு வெறுப்புகளிற்கு ஏற்று ஆயுதத்தை பயன்படுத்த முனைகின்றான். அதற்காக காட்டப்படுவதே அவனது தங்கையின் இயலாமை செறிந்த வாழ்வும், அதில் குறுக்கிடும் மீன்பிடிகாரனின் செயல்களும். இவ்வயதான மீனவனின் செயல்கள் எமக்கு ஆத்திரத்தை தருகின்றன. இவனிற்கு நல்ல தண்டனை கிடைக்க வேண்டும் எனும் உணர்வு இப்படம் பார்ப்பவர்களிற்கு ஏற்படுகின்றது. அத்தண்டனையை அவனது அண்ணன் கொடுக்கும்போது அச்செயல் அநேகரால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. தனிமனித பயங்கரவாதம் போற்றப்படுகின்றது.

ஆக, விசேட பொலிஸ் படையின் உறுப்பினன் செய்த செயல் இங்கு நியாயப் படுத்தப் படுகின்றது இதன்மூலம் அவனதும், அவனைப் போன்ற கொலை வெறிகொண்ட ஆயிரக்கணக்கானவர்களின் செயலிற்கு நியாயங் கற்பிக்கப்படுகின்றது. பலியானவர்கள் தண்டனை கொடுக்கப்படவேண்டியவர்களே என முடிவு கட்டப்படுகின்றது. இதுவே வீசிதெலவின் சாரம். இதனையே எச்.டி. பிரேமரத்ன சொல்கின்றார்.


அதிகாரத்துடன் சமரசம் செய்து அதனைக்கொண்டுள்ளவர்களுடன் கைகுலுக்குகின்றார். பிரேமரத்னவின் சினிமாக்கள் எல்லாம் ஏதாவது ஒரு விதத்தில் சமூக அவலத்துடன் சமரசம் செய்வதாகவே முடிகின்றன. ''சபத கன்யாவில்'' சோபா சாகடிக்கப் படுதல், ''செய்லம''வில் நாயகி பாலியல் தொழில் ஈடுபடுதல் போன்று இவரின் வெளிப்பாடுகள் சமூக அவலத்தை ஏற்றுக்கொள்ளும் முகமாகவே அமைகின்றன. இதில் வீசிதெலவும் சேர்ந்து கொள்கின்றது. சத்யா சொல்வது போன்று இது சமகாலப் பெண்களின் பிரச்சினையைக் கருவாகக்கொண்டுள்ளது என்பது சரியா என்பதே என் கேள்வி. ஏனெனில், அதற்கான பின்புலமாக இத்தகைய இயலாமைகளை பெண்களிற்கு தோற்றுவிக்க காரணமான ஏதேச்சாதிகாரமும், அரசியலும் காட்டப்படுகின்றது. இவ்வாறு காட்டப் படுதலுடன் நிற்காது, சமரசமும் செய்து கொள்ளுகின்றது. எனவே இது ஒரு ஏதேச்சதிகாரத்தை நியாயப் படுத்தும் சினிமா வெளிப்பாடு அவ்வளவே.

அ. றஜீசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## மாகாண சபையால் முடியவில்லை !

கல்முனைப்பிரதேசத்தைச்சேர்ந்த மு. மயில்வாகனம், க. ஏகாம்பரம், பன்னீர்ச் செல்வம், பாக்கியநாதன், சதாசிவம், ஈ.தே.செல்வரெத்தினம் ஆகிய பொது மக்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியின் உதவியுடன் - துறைமுகங்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரஃப்பை கடந்த 10.11.1997ல் பாராளுமன்றத்தில் சந்தித்து இப்பிரதேச தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு குறைபாடுகள் பற்றிக் கலந்துரையாடி தீர்வுகள் கண்டுள்ளனர். அதற்காக இப்பிரதேச மக்கள் நன்றி கூறுகின்றனர்.

இக்குறைபாடுகளில் மிகவும் முக்கியமானது கல்முனை தமிழ்ப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையை பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதாகும். இந்த விடயத்தில் இவர்கள் போன்ற பொது மக்கள் தொடர்ந்து ஆர்வத்துடன் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என இப்பிரதேச பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். இது அமைச்சர்களிலோ அல்லது அதிகாரிகளிலோ தங்கியுள்ள ஒரு விடயமல்ல. முழுக்க முழுக்க அரசாங்கத்தின் அமைச்சரவையில் தங்கியுள்ள விடயமாகும்.

''கல்முனை தமிழ்ப்பிரிவு'' என ஒரு அலுவலகம் அமைக்கப்பட்ட காலத்தில் அதனைத் தரமுயர்த்த வேண்டும் என்று பல தமிழ் அமைப்புக்கள் முயன்று வந்தன. எனினும், வடகிழக்கு மாகாணசபையும், சிலவேளைகளில் அம்பாறை அரசாங்க அதிபர் பணிமனைக் கச்சேரியும் இதனைப் ''பிரதேச செயலகமாக''ப் பெயர் சூட்டி அழைத்து தானாக உருவாக்கிய ஒரு மாயையினால் இவ்வலுவலகம் ஒரு பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டுவிட்டதோ என எண்ணி அவ்வமைப்புக்கள் திருப்திப்பட்டுக்கொண்டன. உண்மை அதுவல்ல. இதில் இனி மறைப்பதற்கு எதுவுமில்லை. மறைத்து வாழ்வது என்பது எமது எதிர்கால சந்ததிக்கு நாம் தோண்டிவரும் புதைகுழியே ஆகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இப்பிரதேசம் இந்திய அமைதிகாக்கும் படையின் நிர்வாகத்தின் கீழ் இருந்தபோது 12.04.1997ம் திகதி இப்புதிய அலுவலகம் உருவாக்கப்பட்டது. அப்போது செயல்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கமும் இதற்கு உறுதுணையாக இருந்தது. இவ்வுருவாக்கத்தின்போது தன்னையோ அல்லது மத்திய அரசாங்கத்தையோ கலந்துரையாடவில்லை என்ற காரணத்தினால் அப்போதிருந்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் குணதிலக்க முதன்நாயக்க அவர்கள் இப்புதிய அலுவலகத்தை ஒரு போதும் அங்கீகரிக்க முடியாது என மிகவும் காரசாரமாக அப்போதே அரசாங்கத்திற்கு இரகசிய அறிக்கை சமர்ப்பித்துள்ளார். நாங்கள் இவ்வலுவலகத்தினை தரமுயர்த்துவதற்கென கொழும்பில் உள்ள பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு பேச்சுவார்த்தைகளுக்கெனப் பல சந்தர்ப்பங்களில் சென்ற போதெல்லாம் இவ்வறிக்கையினைக் காணக்கூடியதாக இருந்தது. அதனால் இப்புதிய அலுவலகத்தை இலங்கை மத்திய அரசாங்கம் இன்றுவரை அங்கீகரிக்க வில்லை. இப்புதிய அலுவலகத்தின் எல்லைகளும் வரையறுக்கப்படவில்லை. இப்புதிய அலுவலகத்தை வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யவுமில்லை. மத்திய அரசாங்கத்தின் எந்தக்கடமையும் செய்வதற்கான அதிகாரங்களும் வழங்கப்படவில்லை.

கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கிவருகின்ற ஒரு ''உப அலுவலகமாகவே'' இவ்வலுவலகத்தை மத்திய அரசாங்கம் கருதிவருகின்றது. இவை இரண்டு அலுவலகத்திற்கும் சேர்த்து ஒரேயொரு பிரதேச செயலாளரே அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்றார். உப அலுவலகத்திற்கு பொறுப்பானவருக்கு உதவிப் பிரதேச செயலாளர் என்றே அரசாங்கத்தால் பதவி வழங்கப்படுகின்றது. இவ்விரு அலுவலகத்திற்கும் பொதுவாக ஒரேயொரு கணக்காளரும், ஒரேயொரு காசாளரும் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் ஒரு பிரதேச செயலாளரும், ஒரு உதவிப் பிரதேச செயலாளரும் உள்ளதைப்போலவே இங்கும் ஒரு அலுவலகமாகக் கருதப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் மாகாணசபை அழைத்துக் கொண்டிருப்பதுபோல் இவை இரண்டும் இரு பிரதேச செயலகங்கள் என்றால் 2 பிரதேச செயலாளர்களும், 2 உதவிப் பிரதேச செயலாளர்களுமல்லவா நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு இப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களாலோ, தமிழ்க் கட்சிகளினாலோ அல்லது மாகாண சபை உயர் செயலாளர்களாலோ அர்த்தமுள்ள எதுவித நடவடிக்கையும் செய்யப்படவில்லை என்பதே உண்மையாகும்.

மாகாணசபை தன் விருப்பப்படி இவ் உப அலுவலகத்தை ''கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகம்'' எனப்பெயர்சூட்டி மயங்க வைத்தது. மற்றைய பகுதிக்கு ''கல்முனை முஸ்லிம் பிரிவு பிரதேச செயலகம்'' எனவும் பெயர்சூட்டியது. தமிழ்ப் பிரிவு என்பது உப அலுவலகம் என்றாவது ஒத்துக்கொள்ளலாம். ''முஸ்லிம் பிரிவு'' என்ற ஒன்றே இல்லை. பின்னர் ஏன்தான் மாகாண சபை இப்பெயரை உபயோகிக்கின்றது என்றே தெரியவில்லை.

எனவே, மாகாணசபையினை இனியும் பெரிதாக நம்பாமல், தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அரசாங்கத்திடம் இக்கோரிக்கையை முன்வைத்து இவ்வலுவலகத்தை ஒரு பூரண பிரதேச செயலகமாகவும், இதற்குப் பொறுப்பான உதவிப் பிரதேச செயலாளரை பூரண அதிகாரமுள்ள பிரதேச செயலாளராகவும் மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

***கே. மாணிக்கவாசகம், கல்முனை***

## நக்கிப் பிழைப்போர்க்கு நல்ல சூடு !

இதழ் 136இல் மகசீன் சிறைச்சாலைப் படுகொலை பற்றிய கட்டுரை மிக அற்புதமானது. ஜென்னி செய்திகளை மட்டும் தராமல் விஞ்ஞானபூர்வமாக வர்க்க அரசியலை நியாயமாக வெளிப்படுத்தியுள்ளார். இங்கு இலண்டன் மற்றும் சில நாடுகளிலுள்ளவர்களின் செய்தி ஊடகங்களால் (தமிழ் பேசுவோரின் ஊடகங்கள்) இந்தச் சீரழிந்து போன பாராளுமன்ற நக்கிப்பிழைக்கும் தமிழ்க் கூட்டத்தின் செயல்கள் மிக, மிக முற்போக்குத்தன்மையுள்ளதாகக் காட்டப் படுகிறது. ஆனால், இவர்களின் துரோகச் செயல்களின் விலையே இத்தகைய கொலைப் பலிகளாக வரலாறு நீள்வதை சரிநிகர் அம்பலப்படுத்தும்போது நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

நம்மில் பலர், மேற்குலக ஊடகங்களின் செயலைப் பின்பற்றி பிரபாகரன் ஹிட்லரின் வாரிசு; பிரபாகரனும் ஹிட்லரும் ஒரே வகை, அப்படி இப்படியென்கிறோம். நோக்கங்கள்; தன்மைகள் எமக்கு வேண்டியளவுக்கு நாட்டில் நடக்கும் அரச - வன்முறை/ பயங்கரவாதம் கண்களுக்குப் புலப்படுவதில்லை. அந்தவகையில் ஜென்னியின் கட்டுரை மிக, மிக முக்கியமான கட்டுரை தாம். இஃது நிற்க, இறுதியாக நடந்த ''ஜெயசிக்குறு'' மோதல் பற்றிய உண்மை நிலைகளை ஏன் சரிநிகரில் எழுதமுடியவில்லை? ஏதாவது உள்நோக்கமுண்டா?

பத்திரிகைகள் எந்த வர்க்கத்தைப் பரிந்து காப்பாற்றுகின்றனவென்று சிற்சில வேளைகளில் அம்பலமாகும். சரிநிகர் ஒடுக்கப்படும்/ சுரண்டப்படும் மக்களுக்காக குரல் கொடுப்பது நமக்கு நம்பிக்கையை மெருகேற்றுகிறது. அருந்ததியனின் கட்டுரை மிக மிகச்சரியானது. இஸ்லாமியச் சகோதரர்களின் துன்பம்பற்றி இங்கு வந்த குமாரிடம் (ஜி.ஜி.ஜுனியர்) கேள்வி கேட்டோம். அவர் யாவும் நிறைவேறுமென்று நம்பிக்கையூட்டினார். ஆனால், அதுவும் சரியில்லையென்பது இப்போது புரிகிறது ''இப்னு பதூதா''வின் கட்டுரைக்குப்பின் என்ன செய்யலாம்? அவர்களும் நம்மில் ஒருவர் தாமே.

***ப.வி.சிறீரங்கன், ஜேர்மனி***

## ஏன் இந்த அசமந்தம் ?

கடந்த 1997.07.05ம் திகதி திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்களுடன் படுகொலை செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் இளம் பொறியியலாளரான வெற்றிவேல் ரட்ணராசா அவர்கள் மறைந்து சுமாராக ஐந்து மாதங்களும் கடந்த நிலைமையில் இன்னும் அவரது படுகொலை மரணத்திற்கான நஷ்டஈடு 1,50,000/= ரூபாவை அவர் சார்ந்தவர்கள் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடையதாக சிபாரிசு செய்து, மாகாண பொது நிர்வாக அமைச்சினூடாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிற்கு அது தொடர்பான விண்ணப்பங்கள் அமைச்சிற்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரியவில்லை. (இன்னும் மாகாண பொது நிர்வாக அமைச்சிற்கே அனுப்பப்பட வில்லை).

படுகொலை செய்யப்படுவோர்களின் மாதாந்த சம்பளப்பணம் அவரது ஓய்வூதியக்காலம் வரைக்கும் மனைவி பிள்ளைகளுக்கு வழங்கப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. உயரதிகாரியான வே. ரட்ணராசா அவர்களின் சம்பளப் பணம் இன்னும் திருமதி ரட்ணராசா அவர்களுக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சு ஏன் இந்த அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கிறது?

***சமூகன், திருமலை***

## ஒரு வானம்பாடியும், 2000 சமாதானப் புறாக்களும் !

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்புச் சேவையில் தமிழ்ச் சேவைக்கென மூன்றாவது அலைவரிசை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. அதுவே 'வானம்பாடி' எனும் புதியசேவை இது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமல்ல, தென்னிந்தியாவுக்கும் மகிழ்ச்சி ஊட்டுவதாக அமையும்.

இதைச்சொன்னவர் வேறு யாருமல்லர்; இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தலைவரும், பணிப்பாளர் நாயகமுமான ஜினதாஸ பீரிஸ் அவர்களே! நாவற்குழியூர் நடராஜன் கவிதைகளுக்கான பரிசு வழங்கும் வைபவத்திலேயே அவர் அதைக் குறிப்பிட்டார்.

அதற்கும் மேலாக 'கடந்த மூன்று வருட காலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவையினர் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சமாதான நிகழ்ச்சிகளை நடத்திவிட்டனர்' என்றும் குறிப்பிட்டார்.

உண்மைதான். இந்த முதலீடுகளின் பெறுபேறுகள் என்னவென்று பார்த்தால், 'ஜயசிக்குறு' சுதந்திர பொன்விழாவை நோக்கி வெற்றி நடை போடுவதைத்தான் குறிப்பிடலாம். அடுத்தது, ஊர்வழக்கில் வானம்பாடியை - 'ஆட்காட்டி'. என்றே அழைப்பார்கள். எனில், வானொலியின் ஆட்காட்டி தன்பணியைச் செய்கிறதென்றே கொள்வோமாக.

***பட்டினத்தடிகள், கொழும்பு-4***

## வரித்தமிழர்கள் !

ஜனநாயக வழிக்குத் திரும்பி மக்களுக்குச் சேவை செய்கின்றோம் என்ற போர்வையில் மக்களின் தொண்டைக்கு சுருக்கு கயிறு இட்டு இழுப்பதில் போட்டி போடுகின்றன தமிழ்க் கட்சிகள். யுத்தம் ஒருபுறம், இயற்கை அழிவுகள், மறுபுறம் என்று அன்றாட வாழ்க்கை நடத்துவதில் வவுனியா மக்கள் பெரும் சுமை சுமக்கிறார்கள். இவற்றுக்கு மத்தியில் தேங்காய், உருளைக்கிழங்கு, முட்டை, வெற்றிலை, பாக்கு, தேயிலை என்று ஒவ்வொரு அத்தியாவசியப் பொருளுக்கும் வரி என்று ஜனநாயக அமைப்புகள் வரி அறவிடுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இவர்களுடைய இப்படியான நடவடிக்கைகள் விடுதலைப் புலிகள் நிர்வாகம் இதைவிடச் சிறந்தது என்ற நிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது. இவற்றை இவ்வமைப்புக்களின் மேலிடங்கள் கவனத்தில் எடுக்குமா என்பது தான் கேள்வி?

***தமிழ்ச் செல்வன், வவுனியா***

## தவறு !

136இல் பக்கம் 19ல் பிரசுரிக்கப்பட்ட எனது இலாகா சம்பந்தமான செய்திக்கு இத்தால் எனது மறுப்பைத் தெரிவிக்கின்றேன்.

தங்கள் பத்திரிகையில் நான் நகராட்சி மன்றத் தலைவர் பெ. சூரியமூர்த்திக்கு தனிச்சிங்களத்தில் கடிதம் எழுதியதாகவும், கடிதத்தின் கீழ் பகுதியை மட்டும் பிரசுரப்படுத்தி செய்தி வெளியிடப்பட்டிருந்தது. கடிதத்தின் முழுப்பகுதியும் பிரசுரிக்கப்பட்டிருந்தால், அச்செய்தி உண்மைக்குப் புறம்பானது எனத்தெரிந்திருக்கும். நகராட்சி மன்றத் தலைவர் பெ. சூரியமூர்த்திக்கு கடிதங்கள் யாவும் தனித்தமிழிலேயே என்னால் எழுதப்படுகின்றன.

அதேபோன்று எனது பிரதேசத்திலுள்ள, சிங்கள பிரதேச சபையின் தலைவர்களுக்கு எழுதும் கடிதங்கள் சிங்களத்தில் மட்டும் எழுதப்படுகின்றன. குறிப்பிடப்பட்ட கடிதம், எம்மிடமுள்ள சிங்களப் புத்தகங்களைப் பெற்றுச் செல்லுமாறு சிங்கள உள்ளூராட்சி மன்றங்களுக்கு எழுதிய கடிதமாகும். குறிப்பாக நகரசபைத் தலைவரின் பெயருக்கு அனுப்பப்படும் கடிதங்கள் நிச்சயமாக தமிழிலேயே அனுப்பப்படுகின்றதென வலியுறுத்துகின்றேன்.

**பொ. ஜெகதீஸ்வரன்**
***பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், திருகோணமலை***

## திருத்தவும் !

சரிநிகர் இதழ் 136 இல் வெளியான மூதூர்; அரச மரங்களின் கதை என்பதில் வரும் தேர்தல் சம்பந்தமான அட்டவணையில் 1965 ஆம் ஆண்டு ஏ.எல். அப்துல் மஜீது சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலும் எம்.ஈ.எச். முகமது அலி தமிழரசுக் கட்சியிலும் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர் எனத் திருத்தி வாசிக்கவும்.

***கனகசபை தேவகடாட்சம், மூதூர்.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

# கண்டி: சுதந்திரத் தொல்லை!

50வது சுதந்திர தினவிழா கண்டியில் இடம்பெறுவதை அடிப்படையாகக் கொண்டு, மத்திய மாகாணத்தின் அனைத்து தமிழ்க் குடும்பங்களின் பட்டியல்களை சேகரிக்க பாதுகாப்பு படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கண்டி, நுவரெலியா, மாத்தளை, ஆகிய 3 மாவட்டங்களில் வசிக்கும் தமிழ்க் குடும்பங்களின் நிரந்தர உறுப்பினர்கள் தற்காலிகமாக வசிப்போர் வெளிநாட்டிற்குச் சென்றிருப்போர் வேலை செய்வோர் என்ற அடிப்படையில் தகவல்கள் பெறப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக மத்திய மாகாணத்தின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களையும் அடிபடையாகக் கொண்ட வலயங்கள் பிரிக்கப்பட்டு இவ்விசாரணைகள் இடம்பெறும் எனக்கூறப்படுகிறது.

சுதந்திர தினமன்று புலிகளினால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தலைத் தவிர்க்கவும், இவ்விடங்களில் மறைந்து இருக்கும் புலி உறுப்பினர்களைக் கைது செய்யவும் அரசுக்கு இது உதவுமாம். இதேவேளை பெப்.4ந்திகதிவரை கண்டி நோக்கி பயணம் செய்பவர்களின் தொகையைக் கட்டுப்படுத்தவும் குறிப்பாக தமிழர்களின் தொகையைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

மேலும் கண்டிப் பகுதியில் தங்கியிருந்த வெளிமாவட்டங்களைச் சேர்ந்த தமிழர்களையும் அங்கிருந்து வெளியேறுமாறு பாதுாப்புப் பிரிவினர் உத்தியோகபூர்வமற்ற முறையில் பணித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

# வேலை வழங்க வேண்டாம்!
-உலக வங்கி

அரசபிரிவுகளில் லட்சத்துக்கும் அதிகமான பதவி வெற்றிடங்கள் இருந்த போதிலும், அரச சேவைகளை குறைக்க உலக வங்கி வழங்கிய அறிவுறுத்தலின்படி இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாது உள்ளன.

அரச லிகிதர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் ஆகியவற்றில் வெற்றிடங்கள் பல காணப்படுகின்றன. கொழும்பு நகரசபையில் மட்டும் 4000க்கும் அதிகமான வெற்றிடங்கள் காணப்படுகின்றதென கூறப்படுகின்றது.

வைத்தியசாலைகள், சுகாதார சேவைகள் மற்றும் ஆசிரியசேவைகள் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான வெற்றிடங்கள் இருந்த போதிலும் அதற்கென பணம் ஒதுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாததனால் உள்ளூராட்சி சபைகளை ஒழுங்காக நடாத்த முடியாதுள்ளதெனக் கூறப்படுகின்றது.

இவற்றுக்கான தேர்வுப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட போதிலும் நியமனங்கள் இன்னும் வழங்கப்படாதது குறிப்பிடத்தக்கது.

# ஊரை மேயும் படை!

அம்பாறை மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட இனவெறியாட்டத்தில் 200க்கும் மேற்பட்டோரை பலிகொடுத்து முற்றாக அகதிகளானது வீரமுனைத் தமிழ்க் கிராமமாகும்.

சம்மாந்துறைப் பிரதேசத்திலுள்ள இத்தமிழ்க் கிராமத்தில் 672 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

கடந்த 3.1.98 அன்றிரவு சம்மாந்துறையில் மின்மாற்றியைத் தகர்க்கவந்த புலிகள் காவலுக்கு நின்ற ஊர்காவற்படையினை சேர்ந்த அலி பாருக்கை சுட்டுவிட்டுப் போனார்கள்.

இதற்கு பழிவாங்குமுகமாக 4.1.98 அதிகாலை 4.20 மணியளவில் வீரமுனை தமிழ்க் கிராமத்தில் பிரவேசித்த ஊர்காவற்படையினர் வீடொன்றில் உறங்கிக் கொண்டிருந்த இரண்டு தமிழ் சகோதரர்களை சுட்டுகொன்றனர்.

பாடசாலை மாணவனான நவதினம் (வயது17) அவரது சகோதரரான நித்தியானந்தம் (வயது 25) ஆகியோரே சுடப்பட்டு மரணமாணவர்களாவர்.

சம்மாந்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி அப்துல்கபாருக்கு விடயம் ஓரளவு புரிந்துவிட்டது. உடனே அப்பகுதிக்குச் சென்ற 7 ஊர்காவற் படைவீரர்களையும் கல்முனை நீதிமன்றில் ஒப்படைத்தார். 8ஆம் திகதி வரை விளக்கமறியல்.

சொந்த வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பி சுட்டுவிட்டுப் போவதென்றால் அந்த மக்களுக்கு யார் பாதுகாப்பு?

இனி ஒன்றுமே நடக்காது வருவதைப்பார்ப்போம் என்று கூறி சமாதானம் சொல்லலாம். ஆனால் இது முதல் சம்பவமல்ல! ஊர்காவல் படைவீரரின் சேவை தேவை தானா எனும் கேள்வியும் கூடவே எழுகிறது.

மருதமுனை, 4ஆம் கொலனி சம்பவங்களின் பின்னணியிலும் ஊர்காவற் படைவீரர்கள் தான் இருந்திருக்கிறார்கள் என்பதும் மூடிமறைக்கப்படக்கூடியதல்ல.

பெயர் என்னவோ ஊர்காவற் படை. ஆனால், அது ஊரையே மேய்க்கிறதே?

# ஈ.பி.டி.பி-படை முறுகல்

பொன்னாலை பாலம், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால், திறந்து வைக்கப்படவிருந்தது. ஆனால் ஈ.பி.டி.பி.க்கும் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலினால் இத்திட்டம் கைவிடப்பட்டது. காரைநகரில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் கடற்படையினால், கடந்த மாதம் சுட்டுக்கொல்லப்பட்டார், பின்னர் யாழ் புகையிரத நிலையத்தில், தண்டவாளம் கழற்றச்சென்ற ஈ.பி.டி.பி.யினருக்கும் படையினருக்குமிடையில் சச்சரவு ஏற்பட்டது. இத்தகைய சம்பவங்களினாலேயே பொன்னாலைப் பாலம் திறக்கும் முயற்சி கைவிடப்பட்டதாக தெரிய வருகிறது.

6 →

# இனோகா...

இவ்வழக்கில் எதிரிகள் தரப்பு, வழமையான பாலியல் வல்லுறவு வழக்குகளைப் போன்று முறைப்பாட்டாளரின் விருப்பத்தின் பேரிலேயே இச்சம்பவம் நடந்ததென நிரூபிக்க முயன்றது. அதற்காக அவர்கள் முன்வைத்த சாட்சி, முறைப்பாட்டாளர் சம்பவம் இடம்பெற்ற பொழுது எதிர்ப்புத்தெரிவிக்காது மௌனமாக இருந்தார் என்பதாகும்.

எனினும், நீதிபதி ஷிராணி திலகவர்தன "மௌனமாக இருப்பது விருப்பத்தினை தெரிவிப்பதாகாது" எனத் தமது இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். மேலும் இவ்வாறானதொரு நிலைமைக்கு முகம் கொடுக்கும் பெண்ணின் உளவியல் ரீதியான குழப்பநிலைகளையும், தடுமாற்றங்களையும் மனிதத்தன்மையுடன் இந்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. பல பேருக்கு மத்தியில் தமக்கு நேர்ந்த அவலங்களை வெளியிடக் காட்டும் தயக்கம் இயல்பானது. அதனைச் சரியாக வெளிக் கொணராதது கனிஷ்ட வழககறிஞரின் குறைபாடே என நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. பல வழக்கறிஞர்களின் பார்வையில் இது பாலியல் வல்லுறவு தொடர்பான வழக்குகளில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் எனத்தெரிவிக்கப்படுகின்றது. பெரும்பாலான பாலியல் வல்லுறவு தொடர்பான வழக்குகளில் பெண்கள் தமக்கு நேர்ந்த அவலத்தைக் கூறமுடியாது வெட்கித் தலை குனிவதனாலேயும், மௌனமாக இருப்பதானாலேயும் தாம் குற்றவாளிகள் என்ற நிலைமைக்கு ஆளாகுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் கமல் அத்தர ஆரச்சிக்கெதிரான தீர்ப்புத்தொடர்பாக உயர் மட்டங்களில் சர்ச்சைகள் கிளம்பியுள்ளதாகத் தெரியவருகின்றது. அத்துடன் உயர்மட்ட நபரொருவரின் தலையீட்டின் கீழ் பெப்ரவரி 4ம்திகதி கமல் அத்தர ஆரச்சிக்கு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

எவ்வாறெனினும், பாலியல் வல்லுறவுக்கெதிராக வழங்கப்படும் அதி உயர் தண்டனையான 20 வருட சிறைத்தண்டனையை விட குறைவான 10 வருட சிறைத்தண்டனையே கமலுக்கு விதிக்கப்பட்டுள்ளது. அவர் விடுதலை பெற வேண்டுமாயின் பாதுகாப்பமைச்சின் விதந்துரைப்பின் பேரில் ஜனாதிபதி பொது மன்னிப்பளிக்க வேண்டும். எனினும், பிரபல நபரின் தலையீட்டின் பேரில் அவர் விடுதலை செய்யப்படுவாராயின் நீதிமன்ற தீர்ப்பு, சட்டங்கள் பாலியல் வன்முறைக்குள்ளாகும் பெண்களின் நீதி என்பன கேலிக்குரியதாகிவிடும்.

# புலிகளின்...

இப்பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்களும் இவர்கள் வருவதை பெரிதும் விரும்புகிறார்கள். வட, கிழக்கின் ஏனைய இடங்களில் நிகழ்ந்தது போன்ற தமிழ் - முஸ்லிம் உறவுச் சீர்குலைவுச்சம்பவங்கள் இங்கு இடம்பெற்றிருக்கவில்லை என்பது இப்பிரதேசங்களைப் பொறுத்த வரையில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது. பரஸ்பரம் மக்களிடையே துயரும், நம்பிக்கையான சூழலும் வெளிப்படுகிறது. ஆனால் புலிகளைப்பொறுத்தவரையில் சின்னச் சந்தேகம் நிலவுவதைக் காணலாம். அதாவது அரசு நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை மீள்குடியேற்றப்போர்வையில் கொண்டு வந்தது எம் நடவடிக்கைகளை அறிந்து கொண்டு செயலாற்ற முற்படுகிறதா என்பதுவே அச்சந்தேகம். அது புலி உறுப்பினரின் பேச்சிலும் வெளிப்பட்டது. ஆனால் அவ்வாறு நினைப்பது போலில்லாத உண்மை நிலை எடுத்துச் சொல்லப்பட்டது.

ஊர்களைச் சுற்றிப்பார்ப்பதற்கு வழங்கப்பட்ட காலக்கெடுவுக்கு முன்னரேயே "காடுகளை"ப்பார்த்த மக்கள் முருங்கன் திரும்பி, பகலுணவை முடித்துக்கொண்டு மன்னார் திரும்பினர்.

ஊர் பார்த்துவிட்டு வந்த மக்களிடமெல்லாம் ஊர் வரலாம், வரவேண்டுமென்ற எண்ணம் முன்பைவிடக் கூடியிருந்தது. இங்கு மீண்டும் வந்து குடியிருப்பதற்கான அனுமதி முன்பு கூறப்பட்டது போல் புலிகளிடமிருந்து கிடைக்கவேண்டும். அதை நாங்கள் மக்களாகவே பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை செய்வோம் என்பதே மக்களின் ஒருமித்த கருத்தாக இருந்தது.

இக்கருத்துத்தான் அன்று இரவு தாராபுரத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் கூட்டத்திலும் முன்வைக்கப் பட்டது. அரசு புனர்வாழ்வுக்கென்று செய்ய வேண்டியவைகளை செய்து தாருங்கள். நாங்கள் எங்கள் குடியேற்றத்திற்கு முதல் முக்கியமாகத் தேவைப்படும் புலிகளின் பூரண அனுமதியை பெறும் முயற்சியில் ஈடுபடுகிறோம் என்று தெரிவித்தனர். அத்துடன் மீள் குடியேற்றத்திற்கான உடனடித் தேவைகள் என்ன என்பதும் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் இது தொடர்பில் இன்னொரு கேள்வியையும எழுப்ப வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே மன்னார் தீவுப்பகுதியில் குடியேறிய மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய வசதிகள், நிவாரண உதவிகள் இன்னும் 'வாக்களிப்பட்ட' விடயங்கள் பலவும் வழங்கப்பவில்லையென்ற குற்றச்சாட்டும் தெரிவிக்கப்படுகிறது. சிவில் நிர்வாகச் சூழ்லை அண்டியுள்ள பகுதிகளிலே இவ்வாறு நிலைமை என்றால் முசலி, நானாட்டான் பிரதேசங்களின் நிலைமை என்னவாகும்? என்பது சந்தேகத்துடன் எழும்புகிற கேள்வியாகும். எனினும் மக்கள் மீண்டும் வாக்களிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன், தற்போது நானாட்டான் பிரதேச செயலாளராக இருக்கும் பத்திநாதனையே குடியேற்றப் பிரதேசத்துக்கும் பொறுப்பாளராகப் போடுங்கள் என அவரின் துடிப்பான சேவையில் கவரப்பட்டு அன்புக் கட்டளையுமிட்டிருக்கிறார்கள்.

ஊர்பார்த்த திருப்தி, மீண்டும் குடியிருப்பதற்கான சூழல், அதற்காகச் செய்யவேண்டியவைகள் என பல மன வெளிப்பாடுகள், சந்தோஷங்களுக்கிடையே வியாழக்கிழமை காலையில் முன்னைய ஏற்பாடுகள் போலவே புத்தளம் நுரைச்சோலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

**மீள்குடியேற்றம் தொடர்பான பின் நடவடிக்கைகள்**

முஸ்லிம்களின் இந்தப்பயணத்தின் போது மீள்குடியேற்றம் தொடர்பில் மிக முக்கியமாய் வேண்டப்படுவது 'புலிகளின் பூரண சம்மதம்..' அது இல்லையேல் இன்றைக்கென்ன என்றைக்குமே நிரந்தரமான குடியேற்றம் சாத்தியமில்லை. அடுத்தது, முஸ்லிம்களை விரட்டியவர்கள் என்ற வகையில் அவர்களை அழைக்க வேண்டிய கடப்பாடும் அவர்களுக்கே இருக்கிறது. அத்துடன் மன்னாரில் முஸ்லிம்கள் வாழ்ந்த ஓரிரு பிரதேசங்களைத் தவிர பெரும்பாலானவை முற்றிலும் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இருப்பவை. புலி உறுப்பினரின் "இங்க எங்கட நிர்வாகம்தான் நடக்குதென்டு போய்ச் சொல்லுங்கோ..." என்ற வார்த்தையின் அழுத்தம் இங்கு அவதானிக்கத்தக்கது.

ஊர் பார்த்து வந்த அனைவரும் புலிகளின் அனுமதியைப் பெறுவதற்கான உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டுமென்ற வேகத்தில் இருக்கிறார்கள். இந்த வேகம் அம்மக்களிடையேயுள்ள படித்த மட்டத்தவர்களால் நெறிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் யாருடன் பேசுவது? எங்கு பேசுவது? யார் மூலம் பேசுவது? அரசின் நிலைப்பாடு என்ன? என்பன போன்ற கேள்விகள் எழத்தொடங்கும். அத்துடன் தனியே ஒரு மக்கட்குழுவாக முன்னின்று செய்யும் போது அதில் வரும் சாதக பாதகங்களுக்கும் அவர்களே பொறுப்பாக இருக்க வேண்டும். இது விடயங்களில் இவர்கள் நிதானமாகச் செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

மீள்குடியேறும் சாத்திய நிலையுள்ள முசலி, நானாட்டான் பிரதேசத்தவர்கள் ஒன்று பட்டுச் செயற்படுவதா? தனித்தனியே இயங்குவதா? அல்லது பொதுவாக இயங்குவதா என்ற பிரச்சினைகள் கேள்விகள் எழும்பவே செய்யும். இவற்றுக்கெல்லாம் தீர்மானகரமான நிதானித்த முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

முசலிப்பிரதேச மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கென்ற ஓர் பிராந்திய அமைப்பு (முசலிப் பிராந்திய மக்கள் ஒன்றியம்) செயற்படுகின்றது. நானாட்டானுக்கு அவ்வாறான அமைப்புக்கள் இல்லை. பொதுவாக வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பே இயங்குகிறது. நானாட்டான் பிரதேச மக்களுடன் இவ்வமைப்பு கடந்த வாரம் ஒரு ஒன்று கூடலை ஒழுங்குபடுத்தியிருந்தது. இவர்கள் அதிகமாய் இடம்பெயர்ந்து வாழும் கல்கமுவ அகதிமுகாம் பள்ளிவாசலில் "தாயக மண்ணில் மீள் குடியேற்றம்" எனும் தலைப்பில் ஒன்றுகூடலை நடத்தி மக்களது அபிப்பிராயத்தைப் பெற்றுள்ளனர். இவ்வொன்று கூடலின் இறுதியில் மீள்குடியேற்றமானது வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் நெறிப்படுத்தல், வழிகாட்டுதல் மூலம் இவ்வமைப்பு எடுக்கும் நடவடிக்கையிலேயே மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

முசலிப் பிராந்திய மக்கள் ஒன்றியத்துடன் இணைந்தும் செயற்படுவதென்ற முடிவும் எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. அத்துடன் ஊர் சென்று திரும்பிய நிலைமைகள் பற்றிய பிரதேச அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் மீள்குடியேறுவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளாக பின்வருவன அமைய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

- புலிகளின் பூரண சம்மதம் பெற்றுக் குடியேறுதல்
- இராணுவ அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளுதல்
- பாதைக ‹ள் செப்பனிடப்படுதல்
- வைத்தியசாலை வசதிகள்
- பள்ளிவாசல் நிர்மாணம்
- நஷ்டஈடும் வீடமைப்புக்கடன்களும்
- விவசாய உதவிகள்

இந்த அடிப்படையில் சகலதும் அமையுமானால் மார்ச் மாதமளவில் குடியேறத் தயாராய் இருப்பதாயும் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போக வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு இதனை எவ்வாறு மக்களின் ஆர்வத்திற்கேற்ப கையாளப்போகின்றது என்பதும் கேள்வியாகவுள்ளது. அமைப்பென்ற ரீதியில் புலிகளுடனான உடனடிப் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளை இவர்கள் செய்வதையே குறிப்பாக நானாட்டான் பிரதேசத்தவர்கள் அதிகம் எதிர்பார்க்கிறார்கள்.

முசலியைப் பொறுத்தவரை அவர்கள் புலிகளுடனான நேரடிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான அமைப்பு ரீதியான செயற்திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அதற்கான முன் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். பேசுவதற்கு அரசு அனுமதி தருமா என்பதே இவர்களுக்கு முன்னுள்ள இப்போதைய பிரச்சினை. ஏனெனில், நீங்கள் பேசினீர்கள். நீங்களே போய்க்கொள்ளுங்கள் என்ற இக்கட்டான நிலை இவர்களுக்கு வரக்கூடாது என்பதில் கவனமாயிருக்கிறார்கள்.

ஆக, மொத்தத்தில் மீள்குடியேற்றம் தொடர்பாக முதலில் பெற வேண்டியது புலிகளின் சம்மதத்தையே. இதை எவ்வாறு பெறுவது என்பதில்தான் இப்பிரதேச மக்கள் ஒருமித்துச் செயற்பட வேண்டும் என அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது. புலிகளைப் பொறுத்தவரை மனநிலை மாறியிருக்கிறது. சில பிராந்திய நிர்வாகச் சிக்கல்கள் சில இடையூறுகளைச் செய்யலாம். இருந்தும், சாதக நிலைகளே அதிகம்.

மக்கள் நம்புகிறார்கள். நம்பிக்கை வைக்கிறார்கள். சமூகமாக வாழ்ந்தவர்கள் அவ்வாறே வாழ நினைக்கிறார்கள். ஆண்ட பரம்பரை ஆள நினைக்கிற பூமியில் வாழ்ந்த பரம்பரை வாழ நினைக்கிறது.

ஒரு சமூகத்தின் இதயத்துடிப்புக்கள் கேட்குமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்